258

C

O31m211, 05

N96. 10-8-9

218704.




சிலம்பு 70 பரல்-8
எப்ரல் 1996
வள்ளுவர் ஆண்டு 2027
பங்குனி

"செந்தமிழ்ச் செல்வி"
(செந்தமிழ்த் திங்கள் இதழ்)
நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை
இதழாசிரியர் குழு
முனைவர் பொன் கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் பொன் சௌரிராசன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வி. ப. கா. சுந்தரம்
ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசுவாமி, எம்.ஏ., பி.லிட்.,

## உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| தமிழக வேதாகமக் கல்லூரி | 281 |
| வள்ளுவர், ஆரும் வர்க்கத்தை ஆதரித்த புலவரா ? | 286 |
| தமிழ் இலக்கியம் காட்டும் நாட்டுப் புலம் பெயர்ந்த தமிழர்களும் | 292 |
| பாவேந்தர் பாத்தடம் | 299 |
| தனித் தமிழ் காத்தவர் | 301 |
| கோகிலாம்பாள் கடிதங்கள் திறனாய்வு | [illegible] |
| கேட்டதாய் | 306 |
| சம்பந்தர் பாடல்களில் இயற்கை | 311 |
| செந்தமிழ் ஞாயிறு | 318 |
| பேராசிரியர் டாக்டர் ந. சேதுரகுநாதன் மறைவு | |

**மானிட உடலியக்கவியல்**
டாக்டர் அ. கதிரேசன், எம். டி.,
இந்நூல் தமிழில் மருத்துவ அறிவியல் செய்திகளை புரிந்துகொள்ள பெரிதும் உதவுகிறது. தசைமண்டலம், எலும்புமண்டலம் மூச்சு மண்டலம் எனப் பல மண்டலங்களைப்பற்றி அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. நமது உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்புகளும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை நமக்கு எளிமையான முறையில் அனைவருக்கும் புரியும்படியாகக் கூறுகிறார்.
**விலை ரூ. 35/-**

**செந்தமிழ்ச் செல்வி**
தி . வ . ஆண்டு 2027 - மாசி
ஏப்ரல் - 1996
சிலம்பு - 70 பரல் - 8

# தமிழக வேதாகமக் கல்லூரி

தமிழக அரசு புதிதாக வேதாகமக் கல்லூரி ஒன்றினைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது. அதற்கெனத் தனியாகக் குழு ஒன்றை அமைத்துள்ளது. அதன் நிறைவேற்றுக் குழுச் செயலாளராக சென்னைக் காளிகாம்பாள் கோயில் தலைமைக் குருக்களாய அருள்திரு. சிவாச்சாரியார் குலதிலகம் தி.ஷ. சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்கள். திருமிகு. சிவாச்சாரியார் அவர்கள் வேதங்களிலும் ஆகமங்களிலும் நல்ல பயிற்சியுடையவர். குறிப்பாக வழிபாட்டு முறைகளைச் செம்மையாகச் செய்வதில் இவர் வல்லவர். அதிலும் பெரும்பெரும் குடமுழுக்குகளை (கும்பாபிஷேகங்களை) திறம்பட நடத்துவதில் ஆற்றல் மிக்கவர். அண்மையில் சென்னை வடபழனி முருகன் கோயில் குடமுழுக்கினை மிகச் சிறப்பாக நடத்தினார். தமிழ் நாட்டில் மட்டுமன்று வெளிநாடுகளுக்கும் அடிக்கடி சென்று திருக்கோயில்களை அமைப்பதிலிருந்து குடமுழுக்கு செய்வது வரை முழுப் பொறுப்பு எடுத்துச் செம்மையாக நிறைவேற்றி வைப்பவர். அத்துடன் அத்திருக்கோயில்கள் திறம்பட இயங்க தக்க வேதாகமப் பயிற்சி பெற்ற சிவாச்சாரியார்களையும் வெளிநாட்டுத் திருக்கோயில்களுக்கு அனுப்பி வைக்கிறார். சுருங்கச் சொன்னால் தமிழ் நாட்டில் அவர் தங்கும் நேரத்தைவிட வெளிநாடுகளில் தங்கும் நேரமே அதிகம் ஆகும். ஆண்டில் பாதிநாள் வான ஊர்தியில் பறந்து கொண்டே இருக்கிறார். காளிகாம்பாள் கோயிலில் இருக்கும் போதும் மனமொன்றி அன்னையைத் தம் கணீரென்ற குரலால் அர்ச்சனை செய்து அங்குள்ள அனைவரையும் மெய் மறக்கச் செய்து விடுவார். இத்தகு ஆற்றல்கள் பல படைத்த இவர் பொறுப்பில் தமிழகத்தில் வேதாகமக் கல்லூரி அமையவிருப்பது வரவேற்கத் தக்கது.

தமிழகத்தில் வேதப் பயிற்சிக் கூடங்கள் உள்ளன. ஆகமப் பயிற்சிக்குத் தனியாக இல்லையெனினும் சிவாச்சாரியார் சங்கம் அப்பயிற்சிக்கு வழிவகை செய்து வருகின்றது. இருப்பினும் முழு

அளிவிலான வேதாகமக் கல்லூரி இல்லாதது பெருங்குறையே யாகும். வேதங்களைப் பயில்வதற்காவது ஒன்றிரண்டு நல்ல கூடங்கள் உள்ளன. வேதங்கள் நான்கும் முறையாக அச்சிடப் பெற்றுள்ளன. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. பல்வேறு பதிப்புகள் படிப்பதற்குக் கிடைக்கின்றன.

சைவ ஆகமங்களைப் பொறுத்தவரை இவை பெரும்பாலும் இன்னும் ஓலைச் சுவடியிலேயே இருக்கின்றன. இவையும் முழுவதும் கிடைப்பதில்லை. தமிழ் நாட்டில் உள்ள திருக்கோயில்கள் அனைத்தும் ஆகம முறைப்படிதான் நடைபெறுகின்றன. இருப்பினும் மூல ஆகமங்கள் பயில்வதற்குக் கிடைப்பதில்லை. சிவாச்சாரியார்கள் தங்களிடமுள்ள ஏடுகளையும் சிறு நூல்களையும் கொண்டு ஓரளவு பயின்று வருகின்றனர். இருந்தாலும் மூல ஆகமங்கள் அனைத்தும் பயில்வார்க்குக் கிடைக்கச்செய்ய வேண்டியது வேதாகமக் கல்லூரியின் முதல் பணியாகும்.

மேலைநாட்டு அறிஞர்கள் வேதங்களைப் பயில்வதில் பெரிதும் ஆர்வம் காட்டினர். பல மொழி பெயர்ப்புகள், திறனாய்வுகள், வேதங்கள், உபநிஷத்துக்கள் ஆகியவற்றின் பல்வேறு பதிப்புக்கள் முதலியவை வெளிவந்தன. ஆனால் வேதாந்தத்தின் அத்வைத தத்துவத்தை எடுத்துக் கூறும் ஆகமங்கள் வேதங்களின் அதே விரிவான அளவுக்கு இருந்தும்கூட அவற்றை மேனாட்டார் தெரிந்துகொள்ளாமற் போயினர். அதனாலேயே நம் நாட்டவரின் கவனத்தையும் அவை ஈர்க்காமற் போய்விட்டன. இதற்கு முக்கியமான காரணம் ஆகமங்கள் அனைத்தும் வடமொழியில் இருந்தாலும் பெரும்பாலும் கிரந்த எழுத்தில் இருந்தமையே. அதுவும் தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் மட்டுமே அவை பயிலப்பட்டு வந்தமையால் வட இந்திய வேதவிற்பன்னர்கள்கூட ஆகமங்களைப் பயிலாது போயினர். அவை தமிழில் எழுதப்படாது இருந்தமையின் தமிழர்களும் அவற்றைப் பயிலாமல் புறக்கணித்து விட்டனர். அவை பெரும்பாலும் ஓலைச் சுவடியிலிருந்து தாள்களில்கூட பெயர்த்து எழுதாமற் விடுபட்டுப்போயின. இந்து சமயத்தையும் குறிப்பாக வேத நூல்களையும் பரப்ப எழுந்த காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் ஓர் ஆகம ஏடுகூட இல்லை என வங்காளப் பேரறிஞர் தாஸ் [illegible] வருந்தியுள்ளார். அப்படியே ஆகமங்கள் கிடைத்திருந்தாலும் அவை கிரந்த எழுத்தில்

218704



எழுதப்பட்டிருந்தமையால் கிரந்த எழுத்துப் பயிற்சியே இல்லாத வட இந்திய அறிஞர்களுக்கு அவை பயன்பட்டிருக்க மாட்டா.

தமிழகத்திலும் வேதங்களை சுமார்த்தர்களே பயின்றனர். சிவாச்சாரியர்கள் ஆகமங்களைப் பயின்றனர். சங்கரர் வேதத்தைக் கூறினாரே தவிர ஆகமத்தைப் பற்றிக் குறிப்பிடாமலே போயினார். அவர் ஆகமத்தைப் பற்றிக் கூறாத காரணத்தினாலேயே அவர் வழிநின்ற சுமார்த்தர்கள் ஆகமங்களைப் பயிலவில்லை. தென்னிந்தியாவில் இருந்த காரணத்தால் சுமார்த்தர்கள் கிரந்த வரிவடிவத்தைப் பயின்றிருந்தனர். கிரந்தம் தெரிந்திருந்தும் ஆர்வமில்லாத காரணத்தால் ஆகமங்களை அவர்கள் பயிலவில்லை. அது மட்டுமல்ல. ஆதிசங்கரர் ஆகமம் பற்றிக் குறிப்பிடாததால் அவர்கள் ஆகமங்களை வேதங்களுக்குப் புறம்பாக எண்ணினர்.

மேலும் இறைவன் எழுந்தருளியுள்ள கருவறைக்குள் சிவாச்சாரியார் மட்டுமே செல்லலாம். சுமார்த்தர்களுக்கு அந்த உரிமை கிடையாது. எனவே முப்போதும் திருமேனிதீண்டும் உரிமை பெற்ற சிவாச்சாரியர் ஆகமங்கள் பயிலட்டும். 'நமக்கெதற்கு' என்றும் அவர்கள் புறக்கணித்திருக்கலாம்.

இன்னபிற காரணங்களால் இந்தியாவில் ஆகமப்பயிற்சி குறைந்து போயிற்று. பயில்வாரின்மையால் ஆகமங்கள் போற்றப் பெறவில்லை. ஆகமங்களைப் போற்ற வேண்டுமென்ற எண்ணம் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்தபோது ஆகமங்கள் கிடைத்தற்கரிதாகிவிட்டன.

சைவசித்தாந்தத்திற்கு அடிப்படையான சைவ ஆகமங்கள் அநாதியானவை. சிவபெருமானால் படைக்கப்பட்டவை. வேதங்களைப் போலவே எழுதாக்கிளவியாக, செவிவழியாக வந்தவை. பிற்காலத்தில் ஏட்டில் எழுதப்பெற்றவை. சதாசிவப் பெருமான் தன் நான்கு முகங்களாகிய சத்யோஜத, வாமதேவ, அகோர, தத்புருசம் ஆகியவற்றிலிருந்து கருட, வாம, பூததந்திர பைரவர் ஆகிய நால்வர்க்கும் ஆகமங்களை ஓதியதாக ஒரு வரலாறு உண்டு. இந்த நான்கு முகங்களும் ஒவ்வொன்றும் ஐயைந்து ஆகமங்களை ஓதியதாகவும் ஐந்தாவது முகமாகிய ஈசானம் எட்டு ஆகமங்களை ஓதியதாகவும் ஆக் மொத்தம் 28 ஆகமங்கள் வெளிப்பட்டன என்பாருமுண்டு.

ஒவ்வொரு ஆகமத்திற்கும் ஞானம், கிரியை, சரியை, யோகம் என நான்கு பாதங்கள் உண்டு. ஞானபாதம் தத்துவத்தை உணர்த்துவது. தனிமனித வழிபாட்டையும் திருக்கோயில் வழிபாட்டையும் முறைப்படுத்துவது கிரியாபாதம். தனிமனிதர்கள் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளைக் கூறுவது சரியாபாதம். யோக முறைகளை எடுத்துக் கூறுவது யோக பாதம்.

இந்த ஆகமங்களை அச்சில் கொணரும் முயற்சியில் ஈடுபட்டு ஓரளவு வெற்றி பெற்றவர் கொ. சண்முகசுந்தர முதலியார். சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஆகம அச்சுப் பணியைத் தொடங்கி காமிகம், காரணம், சுப்ரபேத ஆகமங்களை அச்சிட்டார். மிருகேந்திரம், வாதுளம், பௌஷ்கரம், குமாரதந்திரம், சகலாகமசங்க்ரகம் ஆகிய உபாகமங்களையும் அச்சிட்டார்.

இவருக்குப்பின் ஆகமங்களை அச்சிடும் பணியில் ஈடுபட்டது செட்டி நாட்டிலுள்ள தேவகோட்டையில் தோன்றிய சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், கற்கோயில் திருப்பணியில் ஈடுபட்டுப் பழைய கோயில்கள் பலவற்றைப் புதுப்பித்த நகரத்தார் இனத்தைச் சேர்ந்த செட்டி நாட்டுப் பெருமக்கள் சொற் கோயில்களான ஆகமங்களை அச்சில் கொணரும் முயற்சியில் ஈடுபட்டனர். அவர்கள் பொருளுதவியுடன் தோன்றிய மேற்குறிப்பிட்ட சங்கம் தக்க ஆகம வல்லுநர்களைக் கொண்டு ஆகமப்பதிப்பில் ஈடுபட்டது. கிரணம், மதங்கபரமேஸ்வரம், மிருகேந்திரம் ஆகிய ஆகமங்களை இச்சங்கம் வெளியிட்டது.

தமிழ் நாட்டு அரசும், அமைப்புக்களும் ஆகமத்தைப் பற்றிக் கவலைப்படாத நேரத்தில் புதுவையிலுள்ள பிரெஞ்சு இந்திய இந்தியவியல் நிறுவனம் ஆகமங்களை அச்சிடும் பணியில் ஈடுபட்டு ரௌரவம், ஆஜிதம், மதங்க பரமேஸ்வரம், மிருகேந்திரம் முதலியவற்றை அச்சிட்டுள்ளதுடன் மேலும் தொடர்ந்து ஆகமங்களை அச்சிட்டும் வருகின்றது.

சென்னையிலுள்ள தென் இந்திய அர்ச்சகர்கள் சங்கம் காமிகம், குமார தந்திரம், மகுடாகமம் சகலாகம சார சங்க்ரகம் போன்றவற்றை வெளியிட்டுள்ளது.

அமையவிருக்கும் வேதாகமக் கல்லூரி ஆகமங்களைப் பயிற்றுவிப்பதுடன் அதில் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்வதற்கும்



வழிவகுத்துக் கொடுக்க வேண்டும். அச்சிடாத ஆகமங்களை அச்சிடுவதற்கும் நூல்வெளியீட்டுப் பிரிவு ஒன்றைத் தொடங்க வேண்டும். ஆகமக்கருத்துகளை எளிய தமிழில் விளக்கும் சிறுசிறு நூல்களை வெளியிட வேண்டும். இவற்றிற்குப் பயன்படும் வகையில் தமிழகத்தில் கிடைக்கக்கூடிய ஆகம ஏடுகள் அனைத்தையும் சேகரிக்கவேண்டும். நாகரி, கிரந்தம் வரிவடிவங்களைப் படிப்பதற்கு மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். மொத்தத்தில் ஆகமங்களை அழியாது காப்பதற்கும் அவற்றை வருங்கால வழிமுறையினர்க்குப் பயன்படும் வகையில் பாதுகாத்தளிக்கவும் ஆகமக்கல்லூரி அனைத்து முயற்சிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இது அரசு முயற்சியானாலும் ஆட்சி மாறினாலும் மாறாவிட்டாலும் இப்பணி தொடர்ந்து நடக்கவேண்டும்.

## திரு.என்.சி. நாயுடு மறைவு

தமிழ்கூறு நல்லுலகில் எல்லாம், தனிசிறந்த நல்லவர் எனப் புகழெழுந்த தமிழ்த்தொண்டர், ஆன்மீகச் செம்மல், அறிவுச்சுடர், தமிழ்ச் செம்மல் தென் ஆப்பிரிக்க நாட்டு நற்பணித்திலகம் **திரு.என்.சி. நாயுடு** அவர்கள் 17-3-1996 அன்று தென் ஆப்பிரிக்காவில் அவரது இல்லத்தில் புகழுடம்பு நீத்து இறைவனடி சேர்ந்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் தமிழ்த் தொண்டும், ஆன்மீகத் தொண்டும், நல்ல தனித்தமிழில் சிறுவர்களுக்கென வெளியிட்ட சிறுவர் நூல்களும் மிகவும் பாராட்டுதற்குரியது.

**1996** சனவரி இதழில் (சிலம்பு-**70**, பரல் **5**) "இருண்ட கண்டத்தில் அருந்தமிழ்ப்பணி" என சொல்லோவியமாகத் தலையங்கம் தீட்டி மகிழ்ந்தது. இந்நிலையில் அவரது மறைவு சொல்லொணா துயரம் தருவதுடன் அவரைப் பிரிந்து வாழும் குடும்பத்தாருக்கும், தென்னாப்பிரிக்க மக்களுக்கும் எங்களது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர்

# வள்ளுவர் ஆளும் வர்க்கத்தை ஆதரித்த புலவரா?

**பா. வீரமணி**

**சிலம்பு - 70, பரல் - 7, பக். 252 தொடர்ச்சி**

## மன்னனுக்கு வேண்டியது

மன்னர்க்கும் மக்களுக்கும் நல்லுறவு வேண்டுமாயின், மக்கள் - நெறிமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுங்காக வாழவேண்டுமாயின் முதலில், மன்னன் குறைகளுக்கும் குற்றங்களுக்கும் அப்பாற்பட்டவனாக இருக்கவேண்டுமென வள்ளுவர் விரும்புகிறார்.

> **தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்**
> **என்குற்றம் ஆகும் இறைக்கு** - *436*

முதலில் மன்னன் தன்னிடமுள்ள குற்றத்தைத் தெரிந்துகொண்டு, அதனை நீக்கிப் பின்பு பிறர் குற்றத்தைக் காண்பதே சிறந்தது என்பதை அறிவுறுத்துவதைக் காணலாம். நாடாளும் மன்னனே யானாலும், செருக்குக் கொண்டு, தான் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என முறைகடந்து வாழக்கூடாது. ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் யாராயினும் அவர்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக விளங்க வேண்டும். நன்னெறியில் நடக்க வேண்டும். மன்னன் அறநெறியில் வாழ்வானேயானால், மக்களும் அதைக் கடைப்பிடித்து வாழ்வார்கள் என்பது மட்டுமில்லை. மன்னன் முறை கடந்தால், மக்களுக்கு அறநெறியில் நம்பிக்கை இருக்காது என்றெண்ணியே "என்குற்றம் ஆகும் இறைக்கு" என்றார். மற்றும்,

> **இவறலும் மாண் பிறந்த மானமும் மாணா**
> **உவகையும் ஏதம் இறைக்கு** - *432*

என்பதன்மூலம் மன்னனைப் பல நிலையில் இடித்துரைப்பதைக் காணலாம். செங்கோன்மை, கொடுங்கோன்மை, ஆகிய அதிகாரங்களில், ஆட்சிமுறை பற்றி மன்னனைக் கடிந்துரைப்பது போதாதென்றெண்ணி, சமூக நிலையிலும் மன்னனை எச்சரிப்பதற் காகவே வெருவந்த செய்யாமை (குடிகள் அஞ்சுவதும், தான் அஞ்சுவதும், பணி புரிவோர் அஞ்சுவதுமான செயல்களைச் செய்யாதிருத்தல்) எனும் அதிகாரத்தை வகுத்தார் எனலாம்.



## ஜனநாயக நெறிகள்

ஒரு நல்ல அரசு, தன் குடிமக்களின் நலத்தைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். பொதுமக்களுடைய குறைகளைக் கண்டறிந்து அவற்றைப் போக்குவதற்குப் பாடுபடவேண்டும். எல்லாத் துறைகளிலும் நாட்டு மக்களின் முன்னேற்றமே அவ்வரசின் நோக்கமாக இருக்கவேண்டுமென எண்ணியே வள்ளுவர்

> **வேலன்று வென்றி தருவது மன்னவன்**
> **கோலதூ உம் கோடா தெனின்** - *546*

என்றார். மன்னனுக்கு வெற்றி தருவது வேல் (படைபலம்) அன்று. அவனுடைய ஆட்சி முறைதான் (செங்கோல்) அவனுக்கு வெற்றியைத் தரும். அவ்வாட்சி முறையில் சிறிதும் நெறி பிறழாமல் இருந்தால்தான் வெற்றி உறுதியாகும். இயற்றலும் ஈட்டலும் (பொருளை உருவாக்குவதும், சேர்ப்பதும்) ஆகிய கடமைகள் மன்னனுக்கு இருந்தாலும், முறை கடவாது, பொருளைச் சேர்க்க வேண்டுமென்றெண்ணியே

> **வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்**
> **கோலொடு நின்றான் இரவு** - *552*

என்று விளக்குவதைக் காணலாம். மக்கள் மீது அளவு கடந்து வரி விதிப்பது நடுவழியில் கள்வர் வேலைக்கொண்டு மக்களிடம் பொருளைப் பறிப்பது போன்றதாகும் என்கிறார் வள்ளுவர். முறை கடந்த கோலைக் (ஆட்சி) கள்வர்களின் கொலைவேலொடு ஒப்பிட்டிருப்பதன் மூலம் வள்ளுவரின் மக்கள் சார்பை நன்கு உணரலாம். மேற்கண்ட இரண்டு குறள்களும், மக்கள் நலனுக்காக, மன்னர்க்கு எதிராக வெளிப்படையாக எழுப்பப்படும் போர்க்குரல் எனலாம்.

"அரசாற்றலைத் தலைவனும் அமைச்சரும், வினையாளர்களும் தன்னலத்துக்கு ஆளல் கொடுங்கோன்மை. மக்கள் நலமே அரசின் முழு நோக்கம் என்பது வள்ளுவம். இறைமாட்சி, செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை அதிகாரங்கள் இவ்வுண்மையைக் காட்டுவன. (வள்ளுவம் பக். 273-1953) என்று டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் விளக்குவதையும் நோக்குதல் வேண்டும். இவற்றை எல்லாம் நோக்கினால் வள்ளுவர் ஆளும்வர்க்கத்தை எதிர்த்தவர் எச்சரித்தவர் என்பதை நன்கு உணரலாம்.

## சான்றோரின் அறிவுரைகள்

மேலும், மன்னன் குடிமக்களைக் காத்தோம்பி நன்முறையில் ஆட்சி செய்தாலும், தானே தனிப்பெருந்தலைவன் என எண்ணி, தான் செய்வதும், செய்யப்புகுவதும் நன்றே என்றெண்ணி இறுமாப்புக் கொள்ளாமல், மக்கள் கருத்துக்களையும், சான்றோர்களின் அறிவுரைகளையும் கேட்டு நடப்பதே உண்மையான ஆட்சிக்கு உறுதுணைபுரிவதாகும் என வள்ளுவர் நம்பினார்.

**அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
**திறனறிந்து தேர்ந்து கொளல்** - 441

**இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பா ரிலானுங் கெடும்** - 448

எனும் குறள்களால், மன்னன் குடிமக்கள் போற்றும் முறையில் செவ்விய முறையில் ஆட்சிபுரிய வேண்டுமென்றால், மூத்த அறிவுடைய சான்றோர்களின் அறிவுரையைக் கேட்க வேண்டுமென்றும், அச்சான்றோர்களும், மன்னனைக்கண்டு அஞ்சாது தக்க நேரத்தில் அவனை இடித்துரைக்க வேண்டுமென்றும் வற்புறுத்துவதைக் காணலாம். படைபலம், செல்வவளம், ஆகியன மட்டும் மன்னனுக்கு வெற்றி தரா. மக்களுடைய ஒத்துழைப்பே சிறந்த பலம். குடிமக்களின் கூட்டுறவு இருந்தால்தான் எந்த ஆட்சியும் நிலைத்திருக்க முடியும். ஆளுவோர்கள் மக்கள் உணர்வை, உலக நடப்பை நன்கு உணர்ந்து கொள்ள முயல வேண்டும். உலக நடப்பியலோடு இணைந்து நடக்கும் திறமை வேண்டும். அதனாலன்றோ

**எவ்வது உறைவது உலகம்: உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு** - 426

என்றார். மக்களை - உலகப்போக்கை, எதிர்த்து நிற்கும் எந்த அரசும் வாழ முடியாது. உலகப் போக்கு என்பது உலக மக்கள் பெரும்பாலோரின் எண்ணமும் கருத்துமே யாகும். மக்கள் கருத்தை மதித்து நடப்பதே ஒரு நல்லரசின் கடமையாகும் இன்றைய முடியாட்சிக்கு வேண்டிய ஜனநாயகப் பண்புகளை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட அன்றைய முடியாட்சிக்குக் கூறியிருக்கும் வள்ளுவரை, ஆளும் வர்க்கத்தை ஆதரித்தவர் என்று கூறுவது சிறிதேனும் பொருந்துமா? மக்களின் சான்றோர்களின் கருத்தை மதித்து ஓர் அரசு நடக்காமல் இருப்பின் அதன் நிலை என்னவாகும்?



**ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து**
**வேந்தனும் வேந்து கெடும்** - 899

எனக் கூறுகிறார்.

உயர்ந்த கொள்கையுடையோர் மக்கள் நலங் கருதி மன்னரைக் கண்டு சீறுவார்களேயானால், மன்னனும் அரசும் ஒருங்கே அழியும் எனக் கூறுகிறார் எனில் வள்ளுவர், ஆளும் வர்க்கத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் எனக் கூறலாம் அன்றோ!

"அன்புநெறி போதித்த அண்ணல் என்று வள்ளுவரை மதங்களில் புகழ்ந்து விட்டுச் சமுதாயத்தைக் கேடு சூழும் சக்திகளை அன்பால் அணைத்துக் கொள்ள வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்வோர், வள்ளுவரிடம் துவங்கிய வர்க்கப் பார்வையை மறுத்துத் திரித்துப் புரட்டுவோரே ஆவர்; உட்பகையாகச் செயலாற்றும் அனுகூலச் சத்துருக்கள் என்றே அவர்களைக் கூறலாம். உடைமைப் பெருமையும் அதிகாரச் செருக்கும் மிக்க சிலரும் அவர்களால் அவலமுற்ற பலருமாகச் சமுதாயம் பிளவு பட்டிருப்பதைத் தேர்ந்து தெளிந்து இன்னலுற்ற மக்களிடம் இதயம் கனிந்த தோழமை பூண்டு அவர்களுக்கு இன்னா செய்வாரை எதிர்த்துக் குரல் எழுப்புவது வள்ளுவம். இந்த வரலாற்றுப் பார்வையுடன் நோக்கும்போது, தம்காலச் சமுதாயத்தின் முன்னேற்றத்தை நாடும் சக்திகளுக்குத் துணையாக வள்ளுவர் பணியாற்றினார் என்பது விளங்கும்".

(டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன், திருக்குறள் - ஒரு புதுப்பார்வை பக். 120 - 31)

கொடை அளி, செங்கோல் கொண்டு, குடியோம்பி, குற்றங்கடிந்து, இறைபுரிந்து, நாடொறும் நாடி முறை செய்து, கடுமொழியையும், கையிகந்த தண்டத்தையும் அகற்றி, பெரியாரைப் பேணி, இன்சொலனாகி, 'உலகத்தொடு ஒட்ட ஒழுகி' குடிதழீஇக் கோலோச்சும் மன்னனே மக்கள் நலம் நாடும், மக்கள் போற்றும் மன்னன் ஆவான், அவனே மக்களுக்கு இறையெனப்படுவான். அதனாலன்றோ வள்ளுவரும் இறையென்று போற்றப்படும் மன்னனை, மக்கள் மொழியில் காவலன் (குறள் 560) என்றார். மா நிலத்தை ஆளும் மாமன்னனை, மக்களைக் காக்கும் காவலனே ஆவான் என மன்னனை மக்கள் நிலைக்குக் கீழே கொணர்ந் தவர்களுள் வள்ளுவரே முதல்வர் ஆவர் மக்கள் நலனை எண்ணி

மன்னனை வள்ளுவர் எப்படி மதிப்பிட்டுள்ளார் என்பதை ஆழ்ந்து நோக்கினால் வள்ளுவரின் மக்கள் சார்பை நன்கு உணரலாம். மற்றும், நேரிய முறையில் மக்களை மன்னன் காக்காவிட்டால்

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும் - 553

என்றும்

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல் - 559

என்றும்

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும் - 563

என்றும்

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் - 1062

என்றும்

மன்னனைப் பலபடக் கடிந்துரைப்பதைக் காணலாம். இவ்வாறு, மக்களின் நலத்துக்காகவே, மன்னனையும், அவனுடைய அரசையும் இடித்துரைத்த வள்ளுவனை, "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" (972) என்றும் "மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்" (973) என்றும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எதிர்க்குரல் எழுப்பிய புதுமைப்புலவன் வள்ளுவனை, ஆளும் வர்க்கத்தை எதிர்த்துக் குரல் கொடுத்த சமூகச் சிந்தனையாளன் எனில் தடையேது?

"Thirukkural is an integral, homogeneous work of art, the author of which addresses neither king, subject nor priest, but men."

"திருக்குறள், நிறைவான ஒரே சீரான கலைப்படைப்பாகும். அந்நூலின் ஆசிரியர் மன்னனையோ சமயவாதியையோ சிறப்பிக்காமல் மனிதனையே சிறப்பிக்கிறார்."

Alexander Pyatigorsky - Kural translation into Russian language - quoted by N. Murugesa Mudaliar - Polity in Thirukkural, Thirumathi Sornammal endowment lectures on Thirukkural - Part I - Page - 515, Madras University 1971.



ருஷ்ய அறிஞரின் மேற்கண்ட கருத்து, வள்ளுவரைப் புரிந்துகொள்ள நன்கு உதவுகிறதன்றோ?

இறுதியாக வள்ளுவரைப் பற்றி குறிப்பிட வேண்டியதொன்று உண்டு. மன்னன் கொடுங்கோன்மை செய்தால் குடியும் வேந்தும், கூழும் ஒருங்கே இழப்பான் என்றாரே அன்றி, கொடுமை செய்யும் வேந்தனை எதிர்த்து மக்கள் புரட்சி செய்ய வேண்டுமென்று கூறவில்லை. அவ்வாறு வள்ளுவர் கூறவேண்டுமென்று வரலாற்றுணர்வு இல்லாதவர்களே எதிர்பார்ப்பார்கள். ஏனெனில் கொடுமைகளுக்காக ஆளும் வர்க்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்ய வேண்டும் எனும் கொள்கை, பத்தொன்பதாம் நூற்றாண்டில் மார்க்ஸால் தோற்று வைக்கப்பட்ட கொள்கையாகும். அக்கொள்கை மார்க்ஸ்க்கு முன்னால் உலகில் வேறு எவராலும் விளக்கப்படவில்லை. அதனை, வள்ளுவரிடத்தில் காண முயல்வது வரலாற்றுக் குருட்டுத்தனமாகும். எனவே வள்ளுவர் காலச் சூழலின் கட்டாயத்திற்கேற்ப முடியாட்சி முறையை ஏற்றுக் கொண்டவரேயானாலும், அவ்வாட்சி முறை, குடிமக்களை நன்கு புரக்கும் மக்கள் நல அரசாக இருக்க வேண்டும் என்றே விரும்பியவர். மற்றும், மக்கள் நலனுக்காக மன்னனையே எதிர்க்கும் போர்க்குணம் கொண்ட கொள்கையாளனும் ஆவார். இத்துணைச் சிறந்த சமூகச் சிந்தனையாளரை ஆளும் வர்க்கத்தை ஆதரித்தப் புலவர் என்று டாக்டர் கைலாசபதி அவர்கள் கூறுவது சற்றும் பொருந்துவதாக இல்லை.

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு - 544

(முற்றும்)

**பலதிறப்பட்ட மக்கள்**

கற்பனை, அறிவு உணர்ச்சிகள் சிந்திக்கும் ஆற்றல் ஆகியவைகள் மக்களிடத்தில் ஒரே மாதிரியாக இல்லாததால் மனித இனம் ஒன்று என்றாலும் மக்கள் பலதிறப்பட்டவர்களாவர்

திருவள்ளுவமாலை
க. தேவணன்
பக்.70

# தமிழ் இலக்கியம் காட்டும் நட்பும் புலம் பெயர்ந்த தமிழர்களும்

**திரு. அழகப்பா ராம் மோகன்**

**அமெரிக்கா**

**சிலம்பு - 70, பரல் - 7, பக்.271 தொடர்ச்சி**

நட்பைப் பற்றிய அந்தச் சொல் ஓவியத்தின் முதற் பொருள் இந்த உலகமும் அதில் ஒரு தனி மனிதன் வாழ்கின்ற காலமும். அதன் கருப் பொருள் அந்த தனி மனிதன் தேர்ந்து எடுக்கும் நண்பர்களின் நட்பும் அதை விளக்க எடுத்தாளப்படும் உவமைகளும். அந்த நட்பாகிய உறவில் அவனிடமும் அவனது நண்பர்களிடமும் எதிர் பார்க்கப்படுகின்ற அகவாழ்வு இயல்புகள் தான் உரிப்பொருள். இந்தக் காட்சியைத் தீட்டுகின்ற வள்ளுவர் எண்ணத்தால் உலகளாவிய அளவில் புலம் பெயர்ந்தவர். ஆனால் அவர் தமிழர். தமிழ் நாட்டில் பிறந்தவர். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர். இருப்பினும் திருக்குறளில் தமிழையும், தமிழ் நாட்டையும், தமிழ் இனத்தையும் பற்றிக் கூறவில்லை. தமிழ்ப் பண்பாட்டு நாகரீக முதிர்ச்சியை முற்றிலும் அறிந்து ஆராய்ந்ததன் வெளிப்பாடே அவரது வள்ளுவம். உலகமே அவரது நாடு. உலக மக்கள் அவரது மக்கள். அவர்கள் வாழ வழி வகுப்பதே அவரது கருத்துக்கள். இது எவ்வாறு அன்று முடிந்தது?. எண்ணத்தால் புலம் பெயர்ந்ததால் அவருக்கு இது எளிதாக ஆயிற்று. கணியன் பூங்குன்றன் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று அன்று முழங்கிய முழக்கத்திற்கு தனது 60 குறட்பாக்களால் ஒரு விரிவுரையையே தந்துள்ளார் வள்ளுவர். அன்று அவர் எண்ணத்தால் புலம் பெயர்ந்து எழுதிய நட்பின் விளக்கத்தை இன்று உடலால் புலம் பெயர்ந்த நாம் கவனமாகக் கடைப்பிடித்தால் நாம் எதனை வேண்டுமானாலும் எய்தலாம். இன்று 7 கோடித் தமிழர்கள், நீங்களும் நானும் உட்பட, எவ்வாறு 300 கோடி மக்களோடு இணைந்து ஒரே சமுதாயமாக நட்புடன் வாழ வேண்டும் என்பதையே விளக்குகின்றன நட்பு பற்றிய குறள்கள்.

நட்பு பற்றிப் பொதுவாக சில கருத்துக்களை நம் முன் வைக்கிறார். நட்பு என்றால் என்ன என்ற கேள்விக்கு விடை கூறுவது போல, நட்பு என்பது செயற்கரிய செயல்; அதுவே



செய்யும் தொழிலுக்குக் காப்பு என்றும், அறிவுடையார் நட்பு வளர்பிறை; அறிவில்லார் நட்பு தேய்பிறை என்றும், பழகப் பழகப் பண்புடையாரது நட்பு நவில் தொறும் நூல் நயம் போல என்றும், சிரித்து மகிழ அல்ல நட்பு; நெறி கடந்து செல்லும் பொழுது இடித்தல் நட்பு என்றும், நட்பிற்குத் தொட்டுப் பழகுதல் தேவை இல்லை; புலம் பெயர்ந்து இருப்பினும் ஒத்த உணர்ச்சி தான் நட்பாம் உரிமை தரும் என்றும், முகம் மலர நட்புக் கொள்வது நட்பு அல்ல; நெஞ்சம் மலர நட்புச் செய்வது தான் நட்பு என்றும், அழிவிலிருந்து நீக்கி நல்ல வழியில் நடக்கச் செய்வது தான் நட்பு என்றும், ஆடை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு என்றும், நட்பு சுமைதாங்கி போல வேறுபடுதல் இல்லாமல் ஊன்றித் தாங்கி நிற்க வேண்டும் என்றும், பறைசாற்றும் நட்பு சிறப்பு இழந்து விடும் என்றும், கச்சிதமாக நட்பின் எல்லைகளை நட்டுச் செல்லுகிறார்.

நட்பினால் நண்பன் எதைச் சுதந்திரமாக ஒருவனுக்குச் செய்ய விரும்புகிறானோ அதைக் குடும்பத்தோடு இணைந்த சுற்றத்தார் அவனுக்குச் செய்யக் கடமைப் பட்டுள்ளார்கள். நண்பன் நட்பினால் ஏற்படும் உரிமைகளை அவனிடத்திலிருந்து சம்பாதித்துக் கொள்ளுகிறான். அதே உரிமைகள் குடும்பம் என்ற அமைப்பில் கடமைகள் ஆகி விடுகின்றன. குடும்பத்தையும் சுற்றத்தையும் ஒருவன் தேர்ந்து எடுப்பதில்லை. நண்பர்கள் தேர்ந்து எடுக்கப்படுகிறார்கள். நண்பனைத் தேர்ந்து எடுக்கும் இந்தச் சுதந்திரத் தன்மையே நட்பின் சக்தியும் பலவீனமும் ஆகும். சுதந்திரம் எந்தத் துறையிலும் ஓரளவு பாதுகாப்பையும், சீரான எதிர்பார்ப்புகளையும் பறித்துக் கொண்டு விடுகிறது. இத்தகைய ஒரு நிச்சயமில்லாத சூழ் நிலையில் இயங்கும் நட்பு ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்க வேண்டிய ஒரு மனித இயல்பு.

உங்கள் நண்பரை ஆராய்ந்தபின் நட்புக் கொண்டீர்களா? இல்லை என்றால் இந்த அவசர நட்பால் கேடுதான் விளையும். அதோடு மட்டுமல்ல ஆராய்ந்து ஆராய்ந்து கொள்வதுதான் கேண்மை என்கிறார். நட்பராய்ச்சி செய்வதற்கு ஒரு வரவு செலவுக் கணக்குப் பட்டியலையே தந்து விடுகிறார். அவரது வரவுப் பட்டியலைப் பாருங்கள்! உங்கள் நண்பரிடம் குணம் இருக்கிறதா? நல்ல குடும்பத்தவரா? அவரிடம் உள்ள குற்றங்கள் எப்படிப் பட்டவை? அவரைச் சார்ந்தவர்கள் எப்படி? தனக்கு வரக்கூடிய பழிக்கு நாணுபவரா? நன்மை இல்லாத செயலைக் கண்டபோது

அழ அழச் சொல்லி இடித்து உரைப்பவரா? மாசில்லா நட்பு உடையவரா? ஒத்த பண்பு உள்ளவரா? துன்பம் வரும்போது கை விடாதவரா? அறிவுடையவரா? இவை எல்லாவற்றிலும் தேறிய நண்பரை அளப்பதற்கு ஒரு அளவு கோலையும் தருகிறார் வள்ளுவர். உங்களுக்கு வரும் துன்பமே உங்கள் நண்பரை அளக்கும் அளவுகோல் என்பது வள்ளுவர் வாக்கு.

இந்தக் கடினமான உளவியல் ஆராய்ச்சியை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் நட்பாராய்தல் என்ற அதிகாரத்தின் மூலம் செய்துள்ளார்.

நட்பு என்பது ஒரு ஆவணம் (CONTRACT). குறைந்தது இருவருக்கிடையே ஏற்படும் எழுதப்படா ஆவணம். அதில் ஒருவர் நீங்கள். மற்றவர் உங்களது நட்பினால் பிணைக்கப்பட்ட நண்பர். ஆவணம் என்றால் அதில் இரு தரப்பாரும் கடைப்பிடிக்க வேண்டிய நியதிகள் இருக்கும். நட்பினால் வழங்கப்படும் உதவிகள், அது எப்பேற்பட்டதாக இருந்தாலும், சில சமயங்களில் நீங்கள் அதை வழங்குவோராகவும், உங்களது நண்பர் அதைப் பெறுவோராகவும் இருக்கலாம். இன்னொரு முறை இருவரும் இடம் மாற்றிக் கொள்ளவும் நேரிடும். அப்பொழுது நட்பினால் உதவி பெறுவோர் எப்படி அந்த உதவிகளை அளந்து கணிக்க வேண்டும் என்று பத்து குறள்களாக, செய் நன்றி அறிதல் என்ற தலைப்பில் வள்ளுவர் சொல்லிச் செல்கிறார்.

நட்பினால் செய்த உதவிகளை அளவிட முயலும் வள்ளுவர் கையாளும் உவமைகளைப் பாருங்கள். செய்யாமல் செய்த உதவிக்குக் கைம்மாறு செய்ய இந்த மண்ணும் விண்ணும் போதாதாம். காலத்தினால் செய்த உதவி சிறிது என்றாலும் அது இந்த உலகத்தைவிடப் பெரிதாம். தினை அளவு உதவி செய்தாலும் நீங்கள் அதைப் பனை அளவாகக் கொள்ள வேண்டுமாம். அதோடு நிற்கவில்லை. நம்மை எல்லாம் தர்ம சங்கடத்தில் ஆழ்த்திவிடுகிறார். நட்பினால் செய்யப்படும் உதவியின் அளவு அதைப் பெற்றுக் கொள்ளும் உங்களுடைய பண்பைப் பொருத்ததாம். நட்பை எப்படிப் போற்ற வேண்டும் என்று கூறுகிறார் பாருங்கள். மாசில்லாத நட்பை மறவற்க; அதிலும் துன்பம் வந்த காலத்தில் உறுதுணையாக உதவியவர்களின் நட்பை விட்டு விடாதீர்கள் என்றும், உங்கள் துன்பத்தைப் போக்கிய நட்பை இனிவரும் ஏழு பிறவிகளிலும் நீங்கள் போற்ற வேண்டும் என்றும், நண்பர் செய்த நன்மையை மறப்பது அறம் அல்ல; ஆனால் அவர் செய்த தீமையை



அப்பொழுதே மறப்பது அறம் என்றும், நன்றி மறந்தவர்க்கு உய்வே இல்லை என்றும், சொல்லி நட்பிற்கோர் உன்னதமான இலக்கணம் சமைத்து விடுகிறார்.

பிறந்து, நீண்ட நாள் உறவாடி, நெடுநாள் கனிந்து வளர்ந்த நட்பை, வள்ளுவர், பழைமை (INTIMACY) என்று போற்றி அதற்காக ஒரு அதிகாரத்தையே படைத்து விடுகிறார். நட்பின் அடிப்படையில் உரிமையோடு செய்யும் செயலை "கிழமை" என்று கூறுகிறார். அந்தக் கிழமையை அதாவது அந்த உரிமையோடு செய்யும் செயலைக் கீழ்ப்படுத்தாது ஏற்கும் நட்பே "பழைமை" எனும் நட்பு என்று அழகுபடச் சொல்கிறார். நண்பருடைய உரிமைச் செயலே நட்பின் உறுப்பு ஆகும் என்றும் அதற்கு உடன்படுவதே நல்ல நண்பர்களின் கடன் என்றும், நண்பர்கள் தகாதன செய்தால், அது அறியாமலோ, மிகுந்த உரிமையாலோ செய்தவை என்று கொள்ள வேண்டும் என்றும், அத்தகைய பழையார்களது பண்பினைப் பகைவரும் விரும்புவர் என்றும் கூறி நட்பின் உச்ச நிலையைச் சுட்டிக் காட்டுகிறார்.

தீய நட்பு என்று வள்ளுவர் கூறுமிடத்து எது வேண்டாம் என வள்ளுவர் கூறுகிறார் பாருங்கள். அதனை வைத்து உங்கள் நண்பர் குழாத்தை எடை போட்டுப் பாருங்கள். அவர் பண்பு இல்லாது, அன்பொழுகப் பழக மட்டுமே தெரிந்த நண்பரா? தமக்குப் பயன் உள்ள பொழுது நட்புச் செய்து இல்லாத பொழுது விலகி விடும் தகுதி இல்லாதவரா? போர்க் களத்திலே தள்ளி விட்டு ஓடும் அறிவில்லாத குதிரை போல உங்கள் நண்பரின் நட்புறவு இருக்கிறதா? அகத்தில் அன்பில்லாமல் புறத்தில் நகைத்திடும் நட்புடையவரா? சொல் வேறாகவும் செயல் வேறாகவும் உடையவரா? இருப்பின் அவரது நட்பை விலக்குங்கள் என எச்சரிக்கை விடுக்கிறார்.

நட்பைப்பற்றி எல்லாம் சொல்லி விட்டோம் என்று மகிழ்ந்த வள்ளுவருக்கு ஒரு ஏக்கம். அகத்திலே நட்பில்லாமல் புறத்தே மட்டும் நட்புக் காட்டும் மாந்தரை நினைக்கிறார். அந்த நட்பை ஏற்க வேண்டாம் என்று இன்னும் அழுத்தமாகக் கூறவில்லையோ என நினைத்து அதற்காகக் "கூடா நட்பு" என்று ஒரு தனி அதிகாரத்தையே வகுத்து விடுகிறார் வள்ளுவர். அதிலே அகத்தே நட்பு இல்லாதவரை, தாங்குவது போல இருந்து பிறர் வெட்ட இடம் கொடுக்கும் பட்டடை (ANVIL) என்கிறார்; சொல்லாலே மட்டும் வணங்கும் இயல்பை சொல்வணக்கம் என்று குறிப்பிட்டு அது வளைந்த வில்லின் தாக்குவதற்கான முயற்சி

அதாவது வில்வணக்கம் என்கிறார்; அதோடு மட்டுமல்ல இப்படிப்பட்ட நண்பர்களைக் கூடா நட்பு என்று சொல்லி அவர்களை அஞ்சுதல் வேண்டும் என்கிறார்.

இதைவிட நட்புக்கு விளக்கம் சொல்லியவர் இந்த உலகில் யார்? வள்ளுவருக்குத் தமிழ் இனம் நன்றி கூற கடமைப்பட்டு இருக்கிறது.

இதுவரை தமிழ் இலக்கியங்களும் குறிப்பாக வள்ளுவரும் நட்பு பற்றி சமைத்த சொல் ஓவியங்களைக் கண்டோம். நேற்றைய தமிழனின் தனி முத்திரையையும் உலகளாவிய கண்ணோட்டத்தையும் கோடி காட்டினேன். மானுட ரீதியில் பார்க்கும் பொழுது மனித இனம் மொழிக் குடும்பங்களாக இயங்குகிறது. ஒவ்வொரு மொழிக் குடும்பமும், மனித நேய உணர்வுகள் செழித்தோங்க நட்பு என்ற உறவையே எல்லோரிடத்திலும் மேன் மேலும் விரிந்து பரவ வழி கோலுகிறது. அப்படி நட்பு மலரும் பொழுது ஒவ்வொரு சமுதாயமும் மொழிக் குடும்பம் என்ற அளவில் ஒரு சில எழுதா விதிகளை ஆவணங்களாக ஏற்படுத்துகிறது. உலகில் பெரும்பாலும் இருவருக்கிடையே எந்தவித சம்பிரதாயமும் சடங்கும் இன்றி பிறந்து இறந்துவிடும் இந்த நட்பு, சில மொழிக் குடும்பங்களில் முறைப் படுத்தப்பட்டு கொண்டாப்படுகிறது. மேற்கு ஜெர்மனியில் "டூசன்" என்ற சடங்கு இருவரின் நட்பை முறைப்படுத்துகிறது. டூசன் என்றால் ஜெர்மன் மொழியில் உறவு முறையில் மாற்றம் என்று பெயர். அந்தச் சடங்கில் இருவரும் கைகள் பின்னக் கோத்து, கோப்பைகளில் மதுவேந்தி, நெருங்கி வந்து என்றும் அழியாத சகோதர உறவு என உறுதி மொழி கூறி மது அருந்துவார்கள். அதற்குப் பின் நீங்கள் என்ற உறவு முறை மாறி நீ என மலரும்.

காமரூன் என்ற நாட்டில் பங்கவா குடியில், பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்கு முன்பின் தெரியாத மற்றொரு குழந்தையை நண்பனாக வலிய அறிமுகப் படுத்துவார்கள். அதன்பின் அந்த இரு குழந்தைகளும் வாழ்நாள் முழுதும் ஒருவருக்கு ஒருவர் துணையாக நண்பனாக விளங்கக் கடமைப்பட்டவர்கள். எந்த நண்பன் உன்னைப் புரிந்து கொள்கிறானோ அவனே உன்னை உண்டாக்குகிறான் என்று கூறினார் பிரெஞ்சு மொழி அறிஞர் ரொமேன் ரோலண்ட். நெடு நாளைய நண்பனே சிறந்த முகம் பார்க்கும் கண்ணாடி என்பது ஆங்கில முதுமொழி.

நட்புறவில் கோடிக்கணக்கானவர்களை வெற்றி காண வைத்த டேல் கார்னீஜ் என்ற அறிஞரின் கணக்குப்படி உங்கள் மீது



மற்றவர்கள் ஈடுபாடு கொள்ள நீங்கள் முயன்றால் அதற்கு இரண்டு வருடம் தேவைப்படும். ஆனால் மற்றவர்கள் மீது நீங்கள் ஈடுபாடு கொள்ளத் தேவை இரண்டு மாதம் மட்டுமே என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆங்கில வழக்கில் நட்பைப் பாராட்டி வாழ்த்தும் போது, உண்மையான நட்பை விளக்கிற்கு ஒப்பிட்டு அதன் வெளிச்சம் துன்பமான இராக் காலங்களில் பிரகாசமாக ஒளிரட்டும் என்றும், சோதனைக் காற்றுகளில் அசையாமல் நின்று எரியட்டும் என்றும் சொல்லுவார்கள். கிரேக்க மேதை அரிஸ்டாடில் நண்பனை இரு உடல்களில் வாழும் ஓர் உயிர் எனக் கூறினார். எல்லா மொழிகளிலும் நட்பைப் பற்றி வர்ணிக்கும் பொழுது பொதுவாக எடுத்தாளப்படும் வார்த்தைகள் இவைதான்:

நம்பிக்கை, மரியாதை, மாசற்றது, பாதுகாப்பு, உறுதுணை, உதவுதல், நீங்காதிருத்தல், தோழமை, மாறாதநிலை, புரிந்து கொள்ளுதல், ஏற்றுக் கொள்ளுதல்.

தமிழ் இலக்கியங்கள் மட்டுமல்லாது பிறமொழி அறிஞர்களும் வெகுவாகப் பாராட்டும் இந்த நட்பு என்ற உறவில் சரிவே இல்லையா? சராசரி நம்மைப் போன்ற தமிழர்களின் அன்றாட வாழ்க்கையில் நாள்தோறும் சந்திக்கும் நமது நண்பர்களிடம் வெறுக்கத் தக்கவை, மற்றும் விலக்கத் தக்கவை இல்லையா? இன்றைய தமிழர்கள், நேற்றைய தமிழர்கள் காட்டிய நட்பிலக்கியங்களை இன்று வாழ்ந்து காட்ட முயல்கிறார்களா?

நட்பு பற்றி நினைக்கையில், சீரிய குணங்களும், உடைத்து எறியவல்ல ஏளனக் குணங்களும், அன்புக்குக் கட்டுப்பட்டு கீழே மறைந்து ஒளிந்து நிற்கும் கீழ்த்தரக் குணங்களும் கலந்துதான் தோன்றுகிறது. இதற்குச் சிறந்த உருவகம் சீசரின் "நீயுமா புரூடஸ்" என்ற ஷேக்ஸ்பியரின் வார்த்தைகள். இந்த இக்கட்டான நிலையில் நமக்கு வழி காட்டுவது திருக்குறள் காட்டும் நட்பே.

திருக்குறள் மட்டுமே நான் இதுவரை காட்டிய அனைத்து மொழிகளின், தமிழ் உட்பட, நட்பு பற்றிய இலக்கிய இலக்கணங்கள் அனைத்தையும் உள்ளடக்கி நட்பை இன்னும் ஆழமாகத் தோண்டி ஆராய்ந்து அதன் உளவியல் அடிப்படையில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உதவும் வகையில் விளக்கிச் சொல்கிறது.

நெஞ்சிலே ஈரமில்லாதவன் நட்பு உணர்ச்சி இல்லாதவன். மரத்துப் போனவன். அந்தப் பசுமைதான் நட்பு. அதுதான் பண்பட்ட மனிதனின் ஆணிவேர்.

தான் என்ற நிலை நெகிழ்ந்து நாம் என்ற உணர்வு கனிகின்ற நிலைதான் நட்பு. அந்த நாம் ஒரு பெண்ணோடு இணைந்தால் அது காதல். அந்த நாம் மற்றொரு தனிப்பட்ட மனிதனோடு இணைந்தால் அது அன்பு. அந்த நாம் நமது அடிப்படை உரிமைகளுக்காக தன் உயிரையே தந்து போராடும் தமிழீழப் போராளிகளுடன் இணைந்தால் அது அந்த இனத்தின் நாகரிகப் பண்பாட்டு முதிர்ச்சி. அந்த நாம் ஒவ்வொரு உயிரின் கண்ணும் இணைந்தால் அது அருள்.

இந்த ஏணியில் எந்த நிலையில் நாம் இன்று இருக்கிறோம் என்று நாம் ஒவ்வொருவரும் கேட்கப் பழகிக் கொள்ள வேண்டும். விடையைச் சரி பார்த்துக் கொள்ள வள்ளுவரின் 60 குறள்கள் என்றுமே தயார்.

நமக்காக உதவும் மற்றவர்கள் குறிப்பாக அவர்கள் போராளிகளாக இருப்பின் அவர்களை யார் என்று வினவாமல் அவர்கள் எதற்காகப் போராடுகிறார்கள் என்று கேட்டு இரு கை கூப்பி நன்றி சொல்லி நட்புக் கரம் நீட்டுங்கள் எனக் கோரி, தமிழனுக்கு என்று ஒரு நாடு ஈழத்தில் மலரட்டும் என இறை அருளைச் சிந்திப்போம்.

(முற்றும்)

### சிந்திந்துத் தெளிவுகொள்

சிந்திக்காதபோது அறிவு தடைப்படுகின்றது. அறிவுள்ளவன் சிந்திப்பான். பயிர் வாடிவிட்டது என்றால் நீரில்லை என்று அர்த்தம். நன்கு சிந்திக்கவில்லையென்றால் அறிவில்லையென்று அர்த்தம். சிந்திக்கத் தெரிந்தவன் தான் நன்மை இது, தீமை இது என்று தெரிந்து கொள்ளுவான். அரிசியில் கல் இருந்தால் கல்லை நீக்கிவிட்டுத் தானே சமைத்து உண்பான். அப்படியே யாராவது உண்பார்களா. அப்படியே உண்டால் அவன் பைத்தியம் என்று அர்த்தம். கல்லைக் களைந்து அரிசியை மட்டும் பிரித்தெடுத்து உணவுக்குப் பயன்படுத்தினால் அவன் அறிவுடையவன் என்று அர்த்தம். ஆகவே அறிவுடையவன் சிந்திக்கின்றான். சிந்தித்துத் தெளிவு செய்து கொள்கின்றான்

திருமூலர் அருளுரை
- தவத்திரு தேமொழியார்
பக். 183

## "பாவேந்தர் பாத்துடம்"

**பேராசிரியர் தெ. முருகசாமி,**
**முதல்வர்**
**இராமசாமி தமிழ்க் கல்லூரி**
**காரைக்குடி - 630 003.**

இல்வாழ்க்கை என்பது கணவன் மனைவி உறவாகிய காதல் மட்டுமன்று. பல கடமைகளைச் சுமந்து கொண்ட தியாகத்தின் சின்னமானது. விருந்தோம்பல், குழந்தைநலம், முதியோர்ப் பேணல், சமூக உறவு போன்ற பல பரிமாணங்களைக் கொண்ட பரிவுமிக்கது. இத்தகு இல்லற வாழ்க்கையை நரகமாக்குவதும் சொர்க்கமாக்குவதும் அவரவரும் பழகி ஒழுகும் இல்லறப் பாங்கைப் பொறுத்ததென்பது வாழ்ந்து முடிந்தோரின் வாழ்வியல் உணர்த்தும் உண்மைகளாகும். இந்த அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்திலும் வாழையடி வாழையாய்த் தீர்க்கப்பட முடியாத பெருங்குறையாயிருப்பது மாமியார் மருமகள் சண்டைதான் என்பது உலகறிந்த ஒன்று. இந்த ஒன்றுக்குத் தீர்வு காணும் முகத்தான் புதிய கருத்தொன்றைப் பாவில் பதிக்கிறார் பாவேந்தர். அஃதே பாவேந்தரின் புதிய பாத்துடமாகும்.

காதல், வீரம், இயற்கை, சமூகம் பற்றி மிகுதியும் பாடிய கவிஞர்களைப் போலவே பாவேந்தரும் பாடல்களைப் பாடினாலும் குடும்பச் சிக்கலின் குமைச்சலுக்குத் தீர்வு காணும் ஒரு தனித்தன்மையைப் பாடு பொருளாக்கிப் பாடிய திறத்தால் அவர் புரட்சிக் கவிஞராகத் திகழ்வதை அவர்தம் குடும்ப விளக்காலும் பன்மணித்திரள் தனிப்பாடல்களாலும் உணரமுடிகிறது.

குடும்பத்தைச் சீராக்குவதும் சின்னாபின்னமாக்குவதும் குடும்பத்திலுள்ள பெண்களின் மனப்போக்கைப் பொறுத்தது என்பது பாவேந்தர் கண்ட குடும்ப நெறி. மூத்த தலைமுறையான மாமியார் தம் அடுத்த தலை முறையாக வாழ்க்கையைத் தொடங்க வந்த மருமகளை அரவணைத்து வாழ வேண்டும். நாமும் இந்த வீட்டிற்கு ஒரு காலத்தில் மருமகளாக வந்தவளே என்ற அனுபவ உணர்வு மேலிட்டு விட்டால் மாமியாரும்,

**வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்**
**மெலியார்மேல் செல்லும் இடத்து**

என்ற குறளின் படி (250) மருமகளை அரவணைத்துக் கொள்ளமுடியும். அவ்வாறே தன் தாய்போன்றவளே மாமியார் என வீட்டுக்கு வந்த மருமகள் மாமியாரை அரவணைத்து அணைத்துக் கொள்ளும்போது இல்லறத்தைக் காட்டுப் பூவாக அன்றிக் கோட்டுப் பூவாக மணக்கச் செய்ய முடியும். இந்த அன்பான நல்லிணக்கம் மிக்க குடும்பத்தில் அதட்டலுக்கும் அதிகாரத்திற்கும் இடமிருக்காது. அதட்டலும் அதிகாரமும் இல்லாதபோது அடிமைத்தனமும் கட்டுப்பாடும் இருக்காதென்பதே உண்மை. சுதந்திரமான இந்த அன்புணர்வால் விட்டுக்கொடுத்து ஒத்துப்போகும் விவேகம் வளர வளர குடும்பம் அதிகார ஆர்ப்பரிப்பு இல்லாத அமைதி மண்டலமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை என்பதே பாவேந்தர் கணிப்பு. "நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்" என்பது அவரது புதிய பாத்தட மன்றோ! இந்த அடிப்படையில் "நல்லமாமி" என்ற தலைப்பில் தனிப்பாடல் ஒன்றை வடிக்கிறார் பாவேந்தர்.

மகனுக்கு வாய்த்த மணியே! மயிலே!
ஆகமொத்த அன்பின் அழகு மருமகளே!
உன் அத்தான் உன்னை விரும்பத்தான் நாளும்
பொன்னைத்தான் ஆடையைத்தான் பூணத்தான்
வேண்டுமெனில்
வீட்டில்தான் மெல்லிநீ மாமனைத்தான் மாமியைத்தான்
கேட்டுத்தான் செய்வதென எண்ணாதே! கிட்டத்தான்
பெட்டியுண்டு நீதிறந்து பெண்ணே எடுத்துக்கொள்.
அட்டியுண்டோ? இல்லை! அத்தனையும் உனதுடைமை.
நீயும்என் மைந்தனும் நெஞ்சால் உயிரால் ஒன்
றாயினீர் ஆதலால் அன்னோன் விருப்பம்
உனக்குத் தெரியும் உடனே முடிப்பாய்.
எனக்கிட்ட வேலையைநான் இன்பமெனச் செய்திடுவேன்
வானூர்தி ஓட்டுவதோ வாட்போர் பயிலுவதோ
ஊனூர் உழைப்போ அரசின் அலுவலோ
வாணிகமோ நல்ல மருத்துவமோ ஓவியமோ
மாணவர்க்குக் கண்ணளிக்கும் மாண்பு வினையோ
வேண்டுமெனில். வீட்டுச் சமையலுக்கு நானுள்ளேன்
ஈண்டுச் சமையல் இலக்கியம் உண்டாக்க
விரும்புவை யாயின் அது செய்க. வெல்லக்
கரும்பே! உன் அத்தானிடத்தில் கடுகளவு
தீய நடத்தை தெரிந்தால் திருந்தச்செய்
தூயவள்நீ! நானுனக்குச் சொல்லல் மிகையாம்!



இப்பாடலில் மாமியார் மருமகளுக்கு விட்டுக் கொடுத்துக் குடும்ப உறவைப் பலப்படுத்தும் நளினத்தைக் காணலாம். இதன் மூலம் வாழ்ந்த தலைமுறை, இனிவாழ வரும் தலைமுறைக்கு வழிகாட்டியாக இருப்பதுதான் இல்லறநெறிக் கோட்பாடு என்ற உண்மையைப் பாவேந்தர் கோடிட்டுக் காட்டுகிறார் என உணரமுடிகிறது.

வாடுதல் சிறிதும் இன்றி
வாய்ப்புறத் தொண்டு செய்வாள்

என விருந்தினர் வருகை குறித்த செய்தியை மருமகள் மாமன் மாமியிடம் கூறும் விதத்தில் "நல்ல மருமகள்" எனச்சான்று பெற்று விடுவதாகக் குடும்ப விளக்கில் புகழ்கிறார் பாவேந்தர்.

இப்படியாக ஒவ்வொரு குடும்பத்திலும் மாமியும் மருமகளும் ஒருவர்க்கொருவராய் அமைதியாக வாழ்ந்தால் நாடு அமைதியாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பில் அன்றாடம் நடக்கும் குடும்ப வாழ்வின் ஒரு கூறை மட்டும் எடுத்துக் கொண்டு அதைச் செவ்வனே பாடிய அளவில் பாவேந்தர் மற்ற கவிஞர்களுக்கு வேறுபட்டவராகிப் புதிய பாத்தடத்தைப் பதித்தார் எனலாம்.

## தனித்தமிழ் காத்தவர்

**- வே. இரா. சிவஞான வள்ளல்.**

முள்ளை எடுத்து முல்லையில் சேர்த்துக்
கொள்ளை அழகெனக் கூந்தலில் சூடினர்!
செழுங்குயில் இசைக்கே இணையாம் என்றே
கழுதையின் கத்தலைக் கலந்து மகிழ்ந்தனர்!
ஏந்தும் கிள்ளையின் பேச்சுக் கிணையென
ஆந்தையின் குரலை அதில்கலந் தார்த்தனர்!
அவ்வான் கோழியின் ஆடலை நன்மயில்
செவ்விய நடத்துடன் சேர்த்துக் களித்தனர்!
சுண்ணம் எடுத்துச் சுவையெனச் சொல்லி
வெண்ணெயில் கலந்து விரும்பிச் சுவைத்தனர்!
கள்ளிப் பாலைக் கறவையின் பாலில்
அள்ளிக் கலந்தே அதனைப் பருகினர்!
உண்ணும் சோற்றில் உவகை யோடு
மண்ணைக் கலந்து மகிழ்ந்தே உண்டனர்!
கடலின் உப்பைக் கற்பூ ரத்துடன்
மடமையில் கலந்து மகிழ்ந்தே ஏற்றினர்!
மேடையில் வீசும் மெல்லிய தென்றலில்
வாடையை இணைத்து வாழ்த்தி வாழ்ந்தனர்!
தனித்தமிழ் மொழியில் வடமொழி கலந்தே
மணிப்பிர வாளம் என்றே மகிழ்ந்தனர்!
இந்தத்.
தவற்றைப் போக்கித் தனித்தமிழ் காத்தவர்
தவத்திரு வுருவாம் மறைமலை யன்றோ!

# கோகிலாம்பாள் கடிதங்கள் : திறனாய்வு

**இலக்கணப் புலவர். த. சரவணத்தமிழன்,**

**இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர்.**

புதினம் தமிழுக்குப் புதுவரவு. சிலம்பு, மணிமேகலைக்குப் பின் பாவியங்கள் (காவியங்கள்) பைந்தமிழ்க்கு வடமொழியினின்று வந்து வாய்த்தவைபோல் 19-ம் நூற்றாண்டில் ஆங்கிலத் தாக்கத்தால் அருந்தமிழ்க்கு அண்டியவை புதினங்கள், வடமொழிப் பாவியங்கள் (சிந்தாமணியும், பெருங்கதையும்) மொழி பெயர்ப்பாயின. (இராமாயணம், பாரதம் பிறவனப்பும் அவ்வாறே) ஆயின் முதற் பாவியமாகிய சிலம்பு செந்தமிழ் நாட்டுச் சொந்த இலக்கியமானது பெருமையே, தமிழுக்குக் கிடைத்த முதற்புதினம் சொந்தமான கதைக்கருவாகிய 'பிரதாபன்' வரலாறு என்பதும் பெருமைக்குரியதே. மொழி பெயர்த்தும், தழுவியும் எழுதிய புதினங்களினும் உயர்ந்த தான்தோன்றிப் புதினங்களில் தலை சிறந்தது மறைமலையடிகளாரின் கோகிலாம்பாள் கடிதங்கள் என்னும் மடற் புதினம். கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் என்னும் இரு புதினங்களும் பிராமணக் குடும்பங்கள் பற்றி உயர்நிலைப் பண்பூக்கஞ் செய்யும் நூல்களாக, இந்நூல் எதிர்நிலைப் பண்பாக்கம் செய்யும் தகைத்து.

## வாழ்வியல் : –

ஐந்திலக்கணங்களை இந்த நூற்றாண்டிற்கேற்பச் செந்தமிழ் மொழியில் மாற்றியமைத்தல் வேண்டும் என்று ஏற்ற கொள்கைக் கேற்ப அணி நூலில் நாம் வகுத்துக் கொள்ளும் அளவுகோல் உடலியற் கோட்பாடே நூறாண்டு மாந்த வாழ்வுடம்பில் 20-40 இடைப்பட்ட இருபது ஆண்டு காமக்கிளர்ச்சி மிகுந்து ஐந்தில் ஒரு பங்கு ஆண்டே அன்றோ! ஆதலின் படைப்புக்களில் 1/5 பங்கே அகப்பொருள் செய்திகளையும் உணர்வுகளையும் மூட்டத் தக்கன மற்றை 4 பங்கு உணவு - மருந்து, ஆடை - வீடு, கலை - பழக்கம், கல்வி - பதவி போன்ற செய்திகளையே செப்பத்தக்கன.

## புதின வகைகள்

புதினங்களைப்பொதிந்துள்ள கருத்துப்பற்றி நான்காகப் பகுக்கலாம்



1. (பல) நிகழ்ச்சிப் புதினம் (அகிலனின் பாவை விளக்கு)
2. (மன) உணர்ச்சிப் புதினம் (நா.பா.வின் குறிஞ்சி மலர்)
3. (தனித்) திகழ்ச்சிப் புதினம் (செயகாந்தனின் சில நேரங்களில் சில மனிதர்கள்)
4. (உரை) வளர்ச்சிப் புதினம் (மு.வ.வின் கள்ளோ காவியமோ?)

இதழ்களில் திடுக்கீட்டுடனோ, எதிர் பார்ப்புடனோ வரும் தொடர்கதைகளிலிருந்து, இப்போது மாத வெளியீடாகவும் வரும் முழுக்கதைப் புதினங்கள் வேறுபட்டனவே. மறைமலையடிகளார் இப் புதினத்தைத் தொடர் கதையாகவே தம் அறிவுக்கடலில் வெளிப்படுத்தியுள்ளார். இராசாசி சிறுகதைக்குத் தென்னையையும், புதினத்திற்குக் கிளை மிகுந்த ஏனை மரங்களையும் ஒப்பிட்டது ஒரு புடையொத்ததே அதிலும் துப்பறியும் கதைபோன்ற பொழுது போக்கின பழா மரங்களாகவும். இப்புதினம் போலும் பயன்மிக்கன பலா மரங்களாகிய பழு மரங்களாகவும் கொள்ளலாம்.

## பதிப்புரைக் குறிப்புகள் : –

1921 ஆம் ஆண்டு வெளியிட்ட முதற்பதிப்பு முகவுரையில் - பிறர் நலங் கருதாது தந்நலத்தையே கருதிச் செருக்கிலும் அறியாமையிலும் புதைந்து போகுமாறு மக்களை நெருக்கி யழுத்தும் சாதிக் கட்டுப்பாடுகளால் நமது செந்தமிழ்த் தென்னாடு பெரிதும் நிலை குலைந்து போயிருக்கின்றது, என்றும் கோகிலாம்பாள் என்னும் நங்கையார் பார்ப்பனக் குடியிற் பிறந்தவராய் இருந்தும் தமது குடிப் பற்றிற்கு அகப்படாத தூய்மையும், நுண்ணறிவும், கற்பொழுக்கமும், உறுதியான உள்ளமும் உடையவரா்ய் இங்கே தெருட்டியிருக்கின்றாராதலின் இக்கடிதங்களையெல்லாம் ஒருங்கு திரட்டிப் பதிப்பித்து வெளியிடத் துணிந்தோம் என்று உண்மைக் கதை போன்ற உணர்வை ஊட்டுகிறார். (இங்கே வையாபுரியார் இளங்கோவடிகள் பற்றிக் கூறியன ஒப்பிடத்தக்கன) 1931- ஆம் ஆண்டு வெளியிட்ட இரண்டாம் பதிப்பில் ஒரு குரங்கு கடலைத் தாண்டிற்றென்றாலும் முதலிய இராமாயண நிகழ்ச்சிகளும் ஒருவன் தன் கையில் இருந்த வட்டத்தைச் சுழற்றியெறிந்து பகலவனை மறைத்தான் என்னும் பாரத நிகழ்ச்சியும் இயற்கையல்லாத கதைகள் என்று குறை கூறுகிறார். வரலாறும் புனைகதைப் புதினமும் ஒளிப்படமும், ஓவியமும் ஆகும் என்னும் ஒப்பு திறனாய்வுப் பார்வை. வள்ளலாரின் சிறு, பெரு விண்ணப்ப

விளி போன்ற 17 மடல் தலைப்புகளில் - காதலர், உயிர், அமுது, கண், மனம், தெய்வம் போன்ற குறிகள் ஒன்றையொன்று ஒவ்வாமல் இடம் பெற்றுள்ளன.

## மொழிநடை வரையறை : –

முதற்படித் தமிழ்ப் பயிற்சி கதைக்கும், இடைப்படி மொழிப்பயிற்சிக் கட்டுரைக்கும் தலைப்படி தமிழ் மொழிப் பயிற்சிக் கவிதைக்கும் கருவியாதலை யாப்பு நூலில் நான் சுட்டியுள்ளேன். மறைமலையடிகள் பார்சியர் என்று மொழி நடையில் பேச்சு மொழித் தாக்கத்தைப் புகுத்த நினைத்தும், பார்ப்பன மொழி நடையில் கலவை செய்ய முனைந்தும், ஈடுகட்ட இயலாமல் இடருகின்றார். இயற்கையில் அவர்கள் சிரித்துப் பேசும் தமிழ்ச் சொற்கள் நூலுள் அங்ஙனமே வருதல் அருவருப்புக்கு இடமாய் நூல் மாட்சிக்கு வழுவாம் ஆகலின் அவை பெரும்பாலும் திருத்தியே எழுதப்பட்டிருக்கின்றன என்று ஒப்புதல் கொடுத்துள்ளார். இலா.ச. இரா. போன்ற குறைமொழிப் பயிற்சியாளர் எழுதுவது நனவோடை எனக் கூறப்படுவதும், பாக்கியம் இராமசாமி நகைச் சுவைக்காக ஆங்கில உரையாடலை அவ்வாறே எழுதுவதும் ஒழுங்கு படுத்தத் தக்கவை. ஆயின் அடிகளாரின் ஆற்றொழுக்கன்ன அழகு நடையைப் பயிலுங்கால் பழகு தமிழ்ப் பாங்கு தெரியும்.

## தொடக்க, முடிவுச் சிறப்புகள் : –

வீட்டு மெத்தைமேல் தோன்றிய இளம்பெண் தங்கைக்குத் தெரியாமல் காதலன் வீசிய கல் சுற்றிய மடலை இருளில் எடுத்து வந்து கீழே விளக்கேற்றுமுன் தாள் மாற்றிப் படிக்கும் உத்தியில் கோகிலாம்பாள் கடிதங்கள் என்னும் இப்புதினம் களைகட்டி விடுகிறது. 17 மடல்கள் காதலி காதலனுக்கே எழுதிவர இறுதியில் பின்னுரையாகக் காதலன் தெய்வநாயகம் 'பேரறிவு நிரம்பிய அடிகளுக்கு' எழுதிய மடலில், சுப்பிரமணியன் மங்கைப் பருவமடைந்த மனைவியோடு வந்து சேர்ந்த எச்ச இன்பியலையும், வளர்ப்புத் தாயின் கொடுமைகள் சாவாகிய எதிர்மறை இன்பியலையும் இணைத்து முடித்து வைக்கின்றன. இடை யே தாம் பயின்ற கலையாகிய அறிவியல், ஆய்வியல் புகுத்தல் போல இறுதியில், சிவம் இயற்கையாக விளங்கும் இடம் அனற்பிழம்பே எனத் தாங்கள் (திருவாசக விரிவுரையில் சிவசிங்கம் தீக்குழி என்று) விளக்கிய உண்மையை இந்தப் பாரசிக சமயத்தில் கண்டு அதனை



நேரே வணங்கி வாழ்கின்றோம் என்று கடவுள் வழிபாட்டோடு முடிக்கின்றார். (இது செயகாந்தனின் சில நேரங்களில் சில மனிதர்களின் பின்னுரை போல முரண்பாடு அன்றி உடன் பாடாகும்)

## உலகியல் உண்மைகள் :

'அப்போதெல்லாம் நீர் என்னை உம் தங்கை போலவும், நான் உம்மை என் தமையன் போலவும் நேசித்து வந்தோம்'. (என்னிடம் பயின்றவர் வீட்டுக்காரர் மகளிடம் தங்கையாய்த் தொடங்கி அவரைத் தாரமாக்கிய உண்மை உள்ளதே) (ப.4)

'எங்கள் தாயார் படுக்கைக்குப் போகும்படி சுத்தினமையால்' தாய் துஞ்சாமை (ப.11)

'படித்தவர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் தப்பும் தவறுமாய் வண்ணான் கணக்கு எழுதக் கூடியவர்கள்' (ப.16)

'நமது தேசத்தில் பெண் மக்கள் தமக்கு உற்ற ஆண்மக்கள் துணையின்றித் தனியே சென்று காலங் கழிக்க முடியாது' (ப. 19)

இந்தக் காலத்திலுள்ள இந்துக்களில் சிலர் கிறித்தவ (இசுலாம்) மதத்திற்குப் போவதுபோல இவரும் (அப்பர்) சமண மதத்திற்குப் போயிருந்தார் (ப. 58)

எங்களினத்தவரான நியாய நூற் பண்டிதர் (வழக்கறிஞர்) இருவர் கூட இருந்தமையால் என்னை இருக்கும்படி கற்பிக்கவில்லை. அந்தக் குறிப்பைத் தெரிந்து கொண்டு அவ்வம்மையார் அமர்ந்திருந்த நாற்காலியைப் பிடித்துக் கொண்டு அவர் பக்கத்தில் நின்றேன் (ப. 101)

அவர்கள் வாணிகத்தின் பொருட்டுத் தமிழ் தெரியாத வடநாட்டுப் பக்கம் போயிருக்கிறார்கள். (சீவா மறைமலையடிகளாரைக் காணப் போனபோது, 'POST MAN' என்று கேட்டதாகக் கூறுவது புரியுமே) (ப. 187)

'என்னைச் சுற்றியுள்ள சுவர்களைத் தொட்டும் பார்த்தேன். அவை(கள்) எல்லாம் வலிய கற்பாறைகளினால் இயற்கையில் அமைந்தனவாய் இருந்தன. இதனால் யான் காண்பது கனவன்று, நனவே என்று தெரிந்தேன். (கிள்ளிப் பார்த்துக் கொண்டு கனவன்று எனத் தெளிதல் போலப் பிறிதோர் உத்தி) (ப.209)

(தூத்துக்குடி தனித்தமிழ்க்கழகத்தில் ஆற்றிய பொழிவு).

# கேட்ட தாய்

(பேராசிரியர் ஆ. சிவலிங்கனார், மயிலம்)

## முன்னுரை

> ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக் கேட்ட தாய்.

என்பது குறள். இதன் பொருளாவது,

> "தான் பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிக மகிழும்; தன் மகனைக் கல்வி கேள்விகளான் நிறைந்தவன் என்று அறிவுடையோர் களாற் சொல்லக் கேட்டதாய்"

என்பதாகும். இது பரிமேலழகர் எழுதியவுரை. இவ்வுரையில் யாதோர் குறைபாடும் இல்லை. ஆனால் அவர் எழுதிய விசேடவுரை பற்றி அறிஞர் பெருமக்கள் குறை காண்பர். அதுபற்றி அறிவது இக்கட்டுரை.

## பரிமேலழகர் கருத்து

ஒரு தாய், தான் பெற்றெடுத்த மகனைப் பற்றி, அவன் குழந்தைப் பருவ முதல் வளர்ந்து பெரியவனாகிச் சான்றோனாகும் வரை அவன் குணம் செயல்கள் கண்டு அவ்வப்போது மகிழ்ச்சி கொள்ளுதல் இயல்பு. அம்மகிழ்ச்சிகளுள் இரண்டு மகிழ்ச்சிகள் திருவள்ளுவரால் இக்குறளில் குறிப்பிடப்படுகின்றன. ஒன்று, மகனைப் பெற்றகாலத்தில் அடைந்த மகிழ்ச்சி. மற்றொன்று அவன் சான்றோன் என அறிஞரால் கூறக் கேட்ட காலத்தில் உண்டான மகிழ்ச்சி. அவ்விரண்டனுள்ளும் சான்றோன் எனக் கேட்ட காலத்து உண்டான மகிழ்ச்சி, பெற்ற காலத்துண்டான மகிழ்ச்சியினும் மிகவும் சிறப்புடையதாகும். இதனை நன்கு உணர்ந்தவராய்ப் பரிமேலழகர்,

> "தாய் உவகைக்கு அளவின்மையின், அஃது இதனாற்
> பிரித்துக் கூறப்பட்டது"

என்று எழுதினார். சான்றோன் எனக் கேட்டதனால் வந்த உவகை, மற்றை உவகையினும் சிறந்ததாகும் என்றது, உவகைகளைப் பாகுபடுத்திப் பிரித்துக் கூறியதாகும்.

மகனைப் பெற்றெடுத்த காலத்தில் மகிழ்ச்சியடைவது எல்லாத் தாயர்க்கும் இயல்பே. ஆனால், மகனைச் சான்றோன் என



அறிஞர் சொல்லக் கேட்பது சிலர்க்கே வாய்க்கும். அதனால் முன்னது பொது உவகை என்றும், பின்னது சிறப்பு உவகை யென்றும் பரிமேலழகர் விளக்கினார்.

"கவானின்கண் கண்ட பொது உவகையினும் சான்றோன் எனக் கேட்ட சிறப்பு உவகை பெரிது ஆதலின் பெரிதுவக்கும் என்றார் வள்ளுவர்" என்றார் அவர். இவ்வளவு சிறப்பாக விளக்கம் அளித்த அவர், 'கேட்ட தாய்' என்பதற்கு அளித்த விளக்கம் பலரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

திருவள்ளுவர், சான்றோன் என அறிந்த தாய் என்னாமல் 'கேட்டதாய்' என்று கூறியதற்குப் பரிமேலழகர் கூறிய காரணம்,

"பெண்ணியல்பால் தானாக அறியாமையிற் கேட்ட தாய் என்றார்" என்பதாகும். அவரது கருத்து, பெண் என்பவள் தானாக எதையும் அறியும் அறிவுடையவள் அல்லள்; பிறர் அறிவிக்கவே அறிவாள் என்பதாகும். அதற்கேற்பவே,

> பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற

என்னும் குறளின் விளக்கவுரையில்,

> "அறிவறிந்த என்றதனால் மக்கள் என்னும் பெயர்
> பெண் ஒழித்து நின்றது"

என்றெழுதினார்.

பெண்ணைப் பற்றிய பரிமேலழகர் கருத்து ஏற்பதற்கில்லை என்பது பலர் கருத்து.

## சிவப்பிரகாச சுவாமிகள்

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள், விருத்தாசலத்தில் எழுந்தருளியுள்ள பெரியநாயகியம்மையைப் பார்த்துப் பின்வருமாறு கூறுகின்றார்.

"திருமுதுகுன்றத் தெழுந்தருளியுள்ள பெரிநாயகி யம்மையே! திருவள்ளுவர், 'அறிவறிந்த மக்கட்பேறு' என்று சொன்னதில் 'மக்கள்' என்பது பெண்மக்களைக் குறியாமல் ஆண் மக்களையே குறிக்கும்; அதாவது மக்கள் என்றது பெண் ஒழித்து நின்றது என்று கூறுவாரும், உலகத்தில் மணமக்களைப் பார்த்து 'நல்ல ஆண்மகனைப் பெறுக' என முதல் மகப்பேறு பற்றிக் கூறுவாரும் வெட்கப் படும்படி உன்னை மலையரசன் மகளாகப் பெற்றான்" - என்பது அவர் கூற்று.

கற்றார் அறிகுவர் மக்கள்தம் பேறெனக் கட்டுரைத்த
சொல்தான் ஒருபெண் ஒழித்ததென் பாரொடு தொல்லுலகில்
நற்றாண் மகப்பெறு கென்றாரி சொல்பவர் நாணவுனைப்
பெற்றான் மலையரை யன்குன்றை வாழும் பெரியம்மையே

(பெரிய நாயகியம்மை கட்டளைக் கலித் துறை 12)

என்பது அவர் பாடல். எனவே பரிமேலழகர், பெண்களுக்குத் தாமாக அறியும் அறிவு இல்லை என்பதைச் சிவப்பிரகாச சுவாமிகள் தம் பாடல் மூலம் மறுத்துள்ளார்கள்.

## முனைவர் சு. திருநாவுக்கரசு

நால்வர் நான்மணி மாலை - ஓர் ஆய்வு என்னும் நூலில் (பக். 26) (1994) முனைவர் சு. திருநாவுக்கரசு பின்வருமாறு கூறுதல் காணலாம்.

> "பிள்ளையைப் பற்றித் தக்கோர் புகழினும், தானே அறிந்தால் அன்றி ஏலாத இயல்பினன் தந்தை. ஆனால் தாயோ தன் பிள்ளையின் அருமை பெருமைகளை உள்ளுணர்வால் உணர்பவள். அவ்வுணர்வைப் பிறர் வாயிலாகக் கேட்ட அளவில் மகிழ்வாள் என்பதே உண்மை"

என்று கூறிப் பெண், இயல்பாகவே உணரும் உணர்வுடையவள்; தானே அறியும் அறிவினள். அதனால் தன்மகனைப் பற்றி அவன் சான்றோன் என நன்கு அறிந்திருந்தாலும் - அறிந்த அளவில் தான் மகிழ்ந்திருந்தாலும் அறிவுடையோரால் சான்றோன் எனக் கேட்டபோது முன்னையினும் பெரிதும் மகிழ்வாள் என்று தம் கருத்தை வலியுறுத்தினார்.

## என் கருத்து

இனி என் கருத்து வருமாறு.

திருமணமான ஒரு பெண் தான் முதலில் பெறும் குழந்தை ஆணாக இருத்தல் வேண்டும் என்றுதான் விரும்புவாள். அவ்வாறு ஒருத்தி, தான் முதற் பேறுகாலத்தில் துன்பப்பட்டுப் பிள்ளையைப் பெற்றால் அவள் தன்னை மறந்த நிலையில் மயக்கம் அடைதல் இயல்பு. உடன் இருப்பவர் வேண்டிய உதவிகளைச் செய்து மயக்கம் தெளிவிப்பர். தெளியும் அவள், தன் குழந்தையைப் பற்றிய நினைவில் கண் விழிப்பாள். அப்போது



அவள் அக்குழந்தையைப் பார்ப்பதற்கு முன்னதாக, அவள் மகிழும்படி, 'உனக்கு ஆண்குழந்தை பிறந்துள்ளது' என்பார்கள். அப்போதுதான் விரும்பியபடியே ஆண்குழந்தை பிறந்தமை கேட்டு மகிழ்வாள். பெண் குழந்தை பிறந்தது என்பது கேட்டலினும் ஆண்குழந்தை பிறந்தது கேட்டல் அவளுக்கு மிக்க மகிழ்ச்சியைத் தரும்.

இனி, அவள் தன் மகனைச் சான்றோன் எனப் பிறர் சொல்லக் கேட்ட போதும் பெரிதும் மகிழ்ச்சி கொள்வாள். ஈன்ற பொழுதில், ஆண் பிறந்தான் எனக் கேட்ட போதும், அவன் சான்றோன் எனக்கேட்டபோதும் பெரிதும் மகிழ்வாள் ஆதலின் இரண்டு மகிழ்ச்சியும் அவட்கு ஒத்தமகிழ்ச்சியே என்பதற்காக வள்ளுவர், ஈன்ற பொழுதில் பெரிதும் மகிழ்ந்தது போலவே சான்றோன் எனப்பிறர் கூறக் கேட்ட காலத்தும் பெரிதும் மகிழ்வாள்" என்றார். 'ஈன்ற பொழுதின்' என்பதற்கு ஈன்ற காலத்தில் மகிழ்ந்தது போலவே எனப் பொருள் கொள்ளல் வேண்டும். ஈன்ற பொழுதின் என்பதற்கு ஈன்ற காலத்தைக் காட்டிலும் என உறழ் பொருளைக் கொண்டு விளக்கம் தருதலும் சிறப்புடையதாகும். யாவரும் உறழ் பொருளையே கூறுவர். அதுவே சிறப்புடையதாகும்.

தாயானவள், தன்பேறு காலத்தில் தன் குழந்தையைப் பார்ப்பதற்குமுன், பிறரால் அக்குழந்தை ஆண் அல்லது பெண் என்பதைக் கேட்பாள். பின்னரே தன் வலியையும் பொறுத்துப் பார்ப்பாள். இது இயல்பு. அதனால் ஈன்ற பொழுதின் என்பதற்குத் 'தான் பெற்ற பொழுதிற் பார்த்த மகிழ்ச்சியினும்' என்று பொருள் கொள்வதை விட்டுப், 'பெற்ற பொழுதில் ஆண்குழந்தை எனக் கேட்ட மகிழ்ச்சியினும்' எனப்பொருள் கொள்வதே நன்று.

ஈன்ற பொழுதில் - அதாவது குழந்தை கவானின்கண் கிடந்த பொழுதில் அது ஆணா பெண்ணா எனத் தான் அறியாது மயங்கிக்கிடந்த நிலையில், உடன் இருந்தார், ஆண் எனக் கூறக் கேட்டு அறிவாள். அவ்வாறே தன்மகன் சிறந்த சான்றோன் எனத் தான் அறிந்தாளாயினும், அவன் சான்றாண்மையைத் தான் அறிந்த வகையில் அன்றி, வேறு பல வகையில் காரணங்கள் கூறி - அதாவது தான் அறியாத காரணங்களைக் கூறிப் பிறர் அவனைச் சான்றோன் எனக் கூறக் கேட்கும் போது அவட்குப் பெரிதும் மகிழ்ச்சி யுண்டாம்.

**முடிப்புரை :**

என்ன குழந்தை எனத்தான் அறியாதபோது ஆண் குழந்தை எனக் கூறுவது கேட்டலும், அறிஞர் தான் அறியாத காரணங்களைக் கூறிச் சான்றோன் எனக் கூறுவது கேட்டலும் ஆகிய செயல் தாய்க்கு உண்டு ஆதலின் வள்ளுவர் 'கேட்ட தாய்' என்றார். கேட்டல் தொழிலை ஈன்ற பொழுதுக்கும் அறிஞர் சான்றோன் எனக் கூறும் பொழுதுக்கும் கொள்ளல் வேண்டும்.

# வகையறியாமல் வாடி நிற்பதேன் ?

**கவிஞர் செ. ப. இளவாணன்,** *மலேசியா*

சீர் திருத்தம் சிதைந்ததேன் - உங்கள்
சிந்தனை எல்லாம் குறைந்ததேன்?
வருவாய்க்காக இலட்சியங்களை - நீங்கள்
வாடகைக்கு விட்டு விட்டதேன்?
போலி நாடக மாடியே வாழ்க்கையில்
பிடிப்பு இல்லாமல் போனதேன்?
வேலியை சரியாக அடைக்காமல் - நீங்கள்
வெறி நாய்களை உள்ளேவிட்டு வேடிக்கை பார்ப்பதேன்?
கடித்துக் குதறும் போது நீங்கள் - அது
காலில் விழுந்து காணிக்கை செலுத்துவதேன்?
அடித்து விரட்ட வேண்டியதுகளை - நீங்கள்
ஆராத்தி எடுத்து அரவணைத்துக் கொண்டதேன்?
அடிமை எண்ணம் நெஞ்சில் உங்களுக்கு
ஆழப் பதிந்ததேன் அகப்பட்டுத்துடிப்ப தேன்?
விடிவு காலம் பிறக்காதா தமிழர்களுக்கு என்றும்
விழிப் புணர்ச்சியும் தோன்றாத தேன்?
பகுத்தறிவைப் பற்றி பறைசாற்றிய - நீங்கள்
பாதை தவறி படுகுழியில் விழுந்த தேன்?
வகுத்துள்ள நன்நெறிகள் அனைத்தும் - உங்கள்
வாழ்வில் ஏற்றிடவும் வகையறியாமல் வாடி நிற்பதேன்?
மூடப் பழக்கத்திற்கு நீங்களே முட்டு கொடுத்து - அதிலே
மூழ்க விட்டு தமிழர்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதேன்?
நாடப் படாத தெல்லாம் நாடியே தமிழினத்தின்
நற் பெயரைக் கெடுத்துவிட்டு நன்மையா பெறுகிறீர்கள்?

# சம்பந்தர் பாடல்களில் இயற்கை

**டாக்டர். சரளா இராசகோபாலன்,** சென்னை

*இயற்கையைப் பாடாத கவிஞர்கள் இல்லை. இயற்கையி னூடே இயைந்து வாழ்ந்த கவிஞர்கள் தாங்கள் பெற்ற இன்பத்தை மற்றவரும் பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் இயற்கைப் புனைவுகளைத் தம் பாடல்களில் ஆங்காங்கே பதிவு செய்துள்ளனர். அந்த இயற்கைப் புனைவுகள் அவர்களுடைய முருகியல் உணர்வைத் தெளிவாகக் காட்டுகின்றன. அவர்களின் கொள்கைகளையும் பட்டறிவுகளையும் பதிவு செய்ததாகவும் காணப்படுகின்றன.*

*புறவுலகில் மனிதன் எத்தனையோ காட்சிகளைக் காண்கிறான். ஆனால் அவற்றைக் காணும்போது தன்னுடைய அகவுணர்வோடு தான் நோக்குகிறான். எனவே புறக்காட்சிகள் யாவும் அவனவன் அகநோக்குக்கு ஏற்றவண்ணம் விளக்கம் பெறுகின்றன.*

*கவிதை என்பது இயற்கையின் படிதான் என்று பிளாட்டோ கூறினார். அவருடைய கருத்தினை மறுத்தார் அரிஸ்டாட்டில் கவிதை என்பது இயற்கையின் மறுபடி அன்று. இயற்கையின் பொருண்மையை ஊடுருவி உணர்த்தி நிற்பதே கவிதை என்று விளக்கினார் அரிஸ்டாட்டில். திருஞானசம்பந்தரின் பாடல்களில் இயற்கைக் காட்சிகளைக் காண்போர் இக்கருத்தினை உணர்வர் சமயவாணர்களில் இளமையிலேயே கவிதை பாடும் ஆற்றல் பெற்ற சம்பந்தர் பாடல்களில் இயற்கைப் புனைவு அதிகமாக உள்ளன என்று குறிப்பிடலாம்.*

*சங்கப்புலவர்கள் இயற்கைப் பின்னணியில் அகவாழ்வையும் புறவாழ்வையும் பாடுவதை நோக்கமாகக் கொண்டனர். அதனால் சமய எழுச்சிக் காலத்தில் தோன்றிய திருஞானசம்பந்தர் இயற்கைப் பின்புலத்தில் இறைவன் புகழ்பாடும் நிலையை உருவாகியது.*

1. *இயற்கையில் இறைவனைக் கண்ட சிறப்பு.*
2. *சம்பந்தர் சென்ற வழிக்காட்சிகள் அவர் உள்ளங் கவர்தல்*
3. *இயற்கைச் சூழலில் அமைந்த திருக்கோயில்கள் அவர் நெஞ்சங் கவர்தல்.*
4. *குழந்தைக் கவிஞரின் உள்ளம் இயற்கையை வியந்து நோக்குதல்.*

ஆகியவை சம்பந்தரின் இயற்கைப் புனைவிற்கான சில காரணங்களாகக் குறிப்பிடலாம். தேவாரம் பாடிய மூவரிலும் சம்பந்தர் இயற்கைப் புனைவில் முதன்மை பெறுகிறார்.

## இயற்கையில் இறைவனைக் காணல் :

"பழந்தமிழர் இயற்கை அழகையே உயர்ந்த பொருளாக அதாவது கடவுளாகக் கொண்டு வாழ்ந்தனர். அவர் மலைமீது வாழ்ந்தபோது அவர் உள்ளத்தைக் காலையிலும் மாலையிலும் ஞாயிற்றின் செம்மையும், வானத்திற் படருஞ் செம்மையும், பிற செம்மைகளும் கவர்ந்தன. அச்செவ்விய இயற்கை அழகை அவர் `சேய்' என்று போற்றினர். அம்மக்கள் தங்கள் கண்ணுக்குப் பச்சைப்பசேல் எனக் காட்சி வழங்கிய காட்டின் இயற்கை அழகை 'மால்' என வழுத்தினர். அவர் மருத நிலத்தில் குடி புகுந்த போது, அங்கே பெரிதும் தம் இனமாகிய மக்கள் கூட்டத்துடன் நெருங்கி நெருங்கிப் பழக நேர்ந்தமையான், மக்கள் மாட்டெளிரும் இறைமை என்னும் அழகைக் கண்டு அதை `வேந்து' என்று கொண்டனர். அவர் கடற்கரை நண்ணியபோது கடலின் இயற்கை அழகை 'வண்ணம்' என்றனர். பழந்தமிழ் மக்கள் அவ்வந்நில இயற்கை அழகுக்கிட்ட பெயர்கள் சேய், மால், வேந்து, வண்ணம் என்பன" (முருகன் அல்லது அழகு ப. 28-29) என்று திரு.வி.க. அவர்கள், சங்கச் சான்றோர் இயற்கையின் அடிப்படையில் இறைவனைக் கண்டமையை எடுத்துக் கூறியுள்ளார்

இருபதாம் நூற்றாண்டின் மாக்கவி பாரதியாரும்

"காக்கைச் சிறகினிலே நந்த லாலா - நின்றன்
கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா - நின்றன்
பச்சை நிறந்தோன்றுதையே நந்தலாலா

- பாரதி. நந்தலாலா 1-4

என்று பாடினார். சம்பந்தரும் இயற்கையில் இறைமையைக் கண்டு போற்றினார். இறைவன் பூவில் வாசமாக உள்ளான்; புனலில் அழகாகத் திகழ்கிறான்; புதிதாக அரைத்த சந்தனத்தில் வாசனையாகத் திகழ்கிறான். நாவில் பாடலாக விளங்குகிறான் என்றார். இதை,

"பூவினில் வாசம் புனலிற் பொற்புப்
புது விரைச் சாந்தினி னாற்றத்தோடு
நாவினிற் பாடனல் லாளுடைய
நம்பெருமானிது எவன்கொல் சொல்லாய்" (1:7:4)



என்று திருநள்ளாற்றில் எழுந்தருளியுள்ள இறைவன், இயற்கையில் கலந்திருக்கும் பான்மையைக் கூறிய சம்பந்தர், அவன் ஐம்பொறிகளுக்கும் இன்பப் பொருளாயிருக்கும் தன்மையையும் சுட்டுகிறார்.

பெரிய பாறைகளில் அந்திப்பிறை வந்து சேர்ந்திருக்கும் காட்சி, பிறையைச் சூடிய பெருமான் போலக் காட்சி தருகிறது.

"..................முதுகல்வரை கண்மேல்
அந்திப் பிறைவந் தணையுஞ்சார லண்ணா மலையாரே" (1:69:7)

என்று சம்பந்தர் இயற்கையில் இறைவனைக் கண்டு பாடியுள்ளார்.

## திருத்தல வருணனையில் இயற்கை :

இயற்கையில் தோய்ந்த தமிழ் மக்கள் இயற்கை எழில் கொஞ்சும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலப்பகுதிகளை இறைவனுக்குரிய திருத்தலமாக்கினார்கள். அவன் உறையும் கோயில்களை எழுப்பினார்கள். இயற்கைச் சூழலுக்கிடையே வழிபாட்டை மேற்கொண்டார்கள்.

திருத்தலங்கள்தோறும் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர் இறைவன் எழுந்தருளிய இயற்கைச் சூழலைக் கவினுறப் பாடியுள்ளார். "சங்க இலக்கியத்திற்கு அடுத்தபடி, இயற்கை அழகைப் பலவாறு பாடிய சொல்லோவியங்களை அவருடைய தேவாரத்தில் காணலாம்" என்று மு. வரதராசனார், தமிழிலக்கிய வரலாற்றில் எழுதியுள்ளார்.

## மலைக்காட்சிகள் :

அண்ணாமலை, ஈங்கோய்மலை, கயிலாயம், கற்குடிமலை, காளத்திமலை, குற்றாலம், கேதாரம், கொடுங்குன்றம், கோகரணம், சிராப்பள்ளி, பரங்குன்றம், பருப்பதம், முதுகுன்றம் முதலிய குறிஞ்சித் தலங்களின் மலைவளத்தைச் சம்பந்தர் சிறப்புறப் பாடியுள்ளார்.

மலைவாழ் மக்கள் இயற்கையினூடே வாழும் வாழ்வியலைச் சம்பந்தர் தெளிவாகக் கூறியுள்ளார். திருவண்ணாமலை மலைச்சாரலில் குறத்தியர் மூங்கிலின் முத்துக்களைக் குவித்து மக்களை வாங்குமாறு அழைக்கின்றனர். (1:69:6) கற்குடி மலையில் வாழும் குறமாதர்கள் கைகளில் குழந்தைகளைத் தூக்கி வைத்துள்ளார்கள். அக்குழந்தைகள் தங்கள் கைகளால்

வானத்திலுள்ள மாமதியை எட்டிப் பற்றும் அளவிற்கு அம்மலை உயர்ந்துள்ளது. பன்றிகள் கிளறி வெளிப்படுத்திய மணிகளைக் குறவர்கள் குவிக்கும் கற்குடி மலை என்று அம்மலைவளம் காட்டப் படுகிறது. (1:43:2,5) காளத்தி மலையில் வாழும் வேடர்கள் தங்கள் குடிசைகளில் அடுப்பெரிதற்காக அகில் கட்டைகளை எரியூட்டுகிறார்கள். அவர்கள் மூட்டி எரித்த காரகிலின் இரும்புகை வானுலகு வரை சென்று மணம் கமழ்கின்றது. (3:69:6) குற்றாலத்துக் குறத்தியர் நீலமணி போலும் கண்களை உடையவர்கள். அவர்கள் மாணிக்கக் கற்களை வாரிக் கிளிகளை ஓட்டுவதாகத் தீட்டியுள்ளார் சம்பந்தர் (1:99:6) கோகரண மலையின் தினைப்புனங்களில் குறமகளிர் தங்களுடைய கூந்தலைப் புலர்த்துகின்றனர். (3:79:9) முதுகுன்ற மலையில் கருங்குழல் மடவார்கள் முருகனின் பெருமையைப் பாடுகிறார்கள். (1:12:10) குன்றத்துச் சிறுமிகள் முறத்தால் முத்துகளைக் கொழித்துச் சிற்றுலையில் கொட்டி விளையாடுகின்றனர் என்று குன்றுவாழ் மகளிரின் கவின் வாழ்க்கையைப் படம் பிடித்துள்ளார்.

இன்றும் மலைக்காட்சிகளைக் கண்டு களிப்பவர்கள் அங்குள்ள குரங்குகளின் செயல்களைக் கண்டு மகிழ்வர். சம்பந்தர் தன் பாடல்களில் குரங்குகளின் செயல்களைப் பலவாறு விவரித்துள்ளார். ஆண்குரங்கு கிளையை இழுத்து தேமாங்கனியைப் பறித்தபிறகு விட்ட அக்கிளை, கரிய மேகத்தைத் தீண்டுதலால், மழைத்துளிகள் மலைப் பாறைகளின்மேல் சிதறி வீழ்கின்றன. (1:10:2) திருக்கயிலாய மலையில் வாழும் மந்திகள் மணம் பொருந்திய மலர்க்கொத்துகளைப் பறித்து அருவியில் சிதறுகின்றன. (3:68:4) பார்ப்பவர் கண்ணுக்கு விருந்தாகும் திருக்குற்றால மலைச்சாரலின்கண் குட்டியுடன் வந்த தாய்க்குரங்கு குலைகுலையாக வாழைக்கனிகளை மாந்தும் (1:99:5) கிளை கிளையாகத் தாவித்திரியும். மந்தி கீறி உண்ட இனிய பலாப் பழத்தைக் கடுவனும் உண்டு துள்ளித் திரியும் தண்ணிய சாரலை உடையது (2:71-72). சிராப்பள்ளிக் குன்றில் மந்தி கடுவனோடு ஊடித்தன்னுடைய குட்டியையும் தூக்கிக் கொண்டு மூங்கிலில் பாய்வதற்காக மலைமீது ஏறும்படியான சிராப்பள்ளி என்று இக்குன்றின் காட்சி காட்டப் படுகிறது. (1:98:2)

ஞானசம்பந்தர் குறிஞ்சி நில மக்களின் இயற்கை வாழ்வோடு கற்பனை சேர்த்து கவினுறப் பாடியுள்ளார். குரங்குகளின் வாழ்வை உள்ளதை உள்ளவாறே அழகுறப் புனைந்துள்ளார்.



## ஆற்றுக்காட்சி :

நீர் வளம் மிக்க ஆறுகள் பாயும் பகுதிகளில் நாகரிகம் சிறந்து விளங்கியதை வரலாறு எடுத்துக் காட்டுகிறது. ஆறுகள் பாயும் வளமான கரையோர நகரங்களில் இறைவன் திருத்தலங்கள் தோன்றின. இத்தலங்களைப் பாடும் முகத்தான் ஆற்று வருணனைகளும் சம்பந்தர் தேவாரத்தில் இடம் பெற்றுள்ளன.

காவிரி, கங்கை, மணிமுத்தாறு, பொன்முகலியாறு, வையை, பெண்ணை, பாலாறு, அரிசிலாறு கெடிலம், கும்மையாறு, தாமிரபரணி, நிவாநதி, பம்பைநதி, கோட்டாறு, இலங்கையில் பாயும் பாலாவிநதி முதலிய பல ஆறுகளைப் பாடியுள்ளார். இவற்றில் காவிரியைப் பற்றி அதிகமாகப் பாடியுள்ளார். தமிழகத்தின் கங்கையாம் காவிரி நதியைக் 'கங்கைக்கேயும் பொற்பார் கலந்து வந்த பொன்னி' என்று சிறப்பித்துள்ளார். சம்பந்தர் காவிரிக்கரையில் அமைந்திருக்கும் திருக்கண்டியூர், திருமாந்துார், திருநாகேச்சரம், திருவடகுரங்காடுதுறை முதலான பல தலங்களைச் சிறப்பிக்கும் போது காவிரியாற்றின் சிறப்பையும் விவரித்துள்ளார். சிவபெருமானுக்குக் காணிக்கையாகப் பெரிய பெரிய மரங்களையெல்லாம் காவிரி, தன், வெள்ளத்தில் அடித்துக் கொண்டு வருவதாகக் கற்பனை செய்துள்ளார். (திருமாந்துறை 6) காவிரியாற்றங்கரையில் எழுந்தருளிய சிவனைச் சிறப்பிக்கும் முகமாகக் காவிரியாறு சிறப்பிக்கப்படுகிறது. காவிரியாற்றில் இடர்தீரும் என்று கூறும் முறையிலும் காவிரியாற்றின் சிறப்பு உரைக்கப்படுகிறது.

"பூச நீர்மொழி யம்புனற் பொன்னியிற் பன்மலர்
வாச நீர்குடி வாரிடர் தீர்க்கும் வலஞ்சுழி (திருவலஞ்சுழி 6)

என்று குறிக்கப்படுகிறது.

## வயற்காட்சிகள் :

திருத்தல வருணனை செய்யும் முகமாக, வயல்வளம் எடுத்துரைக்கப்படுகிறது. அரசவையில் அரசன் வீற்றிருப்பது போன்று வயலில் அரச அன்னம் ஒன்று வீற்றிருக்கிறது. தாமரை ஆசனத்தில் இலை குடையாக, செந்நெற்கற்றை சாமரையாக இள அன்னம் வீற்றிருக்கும் காட்சியைச் சம்பந்தர் கவினுறக் கூறியுள்ளார்.

"செறியிதழ்த்தா மரைத்தவிசிற் றிகழ்ந்தோங்கு
மிலைக்குடைக் கீழ்ச் செய்யார் செந்நெல்

வெறிகதிர்ச்சா மரையிரட்ட விளவன்னம்
வீற்றிருக்கு மிழலையாமே" (1:132:2)

என்று வயலின் அழகை நயமுறச் சம்பந்தர் கூறியுள்ளார்.

## கடற்கரைக் காட்சிகள் :

இடும்பவனம், இராமேச்சுரம், திருஉசாத்தானம், திருவொற்றியூர், கலிக்காழூர், கழிப்பாலை, காவிரிப்பூம் பட்டினம், சீகாழி, சண்பைநகர் முதலான கடற்கரைத் தலங்களை வருணனை செய்யும் சம்பந்தர் கடற்காட்சியையும் கானற்காட்சியையும் சிறப்புறப் புனைந்துள்ளார்.

கடற்கரையையொட்டி உள்ள சண்பை நகரில் வண்டுகள் 'மருள்' என்னும் பண்ணைப் பாடக் கடல் தன் திரைக்கரத்தால் முத்துகளையும் பவழங்களையும் வண்டுகளுக்கு வாரி வழங்குகிறது என்று இயற்கைக் காட்சி விரித்துரைக்கப்படுகிறது.

"மருளைச்சுரும்பு பாடியளக்கர் வரையார் திருக்கையாற்
றரளத்தோடு பவளமீனுஞ் சண்பை நகராரே (1:66:8)

என்று வண்டுகள் பாடும் இசையை இரசிக்கும் கடலின் இசைத்திறமும் கொடைச்சிறப்பும் நயமுற எடுத்துக் காட்டப்படுகிறது.

## சோலைக் காட்சிகள் :

மயிலாடுதுறையில் உள்ள வாளை மீன்கள் மேலே தாவிக் குதிக்கக் கமுக மரங்களிலிருந்து சிவந்த பழங்கள் வீழ்ந்து, அதனால் சோலையிலுள்ள மலர்கள் உதிர்ந்து அப்பூக்கள் நீரில் பரவி மணம் நாறும் மயிலாடுதுறை என்று கூறியுள்ளார். இவ்வாறு வாளை மீன்கள் தாவிக் குதிப்பதால் ஏற்படும் விளைவுகளைக் கவிதையழகுடன் சம்பந்தர் காட்டியுள்ளார்.

"பாளைபடு பைங்கமுகு செங்கனி
யுதிர்த்திட நிரந்து கமழ்பூ
வாளைகுதி கொள்ளமடல் விரியமணி
நாறுமயி லாடுதுறையே (3:70:3)

என்று பாடியுள்ள பாடல் திருத்தக்க தேவர் சீவக சிந்தாமணியில் பாடியுள்ள ஏமாங்கதநாட்டு வருணனையை நினைவூட்டுகிறது.

## இறைவனின் திருக்கோலக்காட்சி :

இறைவனின் திருக்கோலக் காட்சியை விளக்கப் புகுந்த சம்பந்தர் இயற்கை அவனுடன் கலந்து அழகு பெறும் காட்சியைக்



காட்டுகிறார். திருவையாற்று இறைவனைப் பற்றிக் கூறவந்த சம்பந்தர்,

"நீரோடு கூவிளமு நிலாமதியம்
வெள்ளெருக்கு நிறைந்த கொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த
தத்துவனார் தங்குங்கோயில்" (1:130:5)

## இறைவனை இயற்கையும் வணங்குதல் :

சம்பந்தர், இயற்கைப் பொருட்கள் இறைவனை வணங்கித் துதிப்பதாகவும், தொழுகைக்குரிய பொருட்களைக் கொணர்ந்து வழிபாட்டிற்கு உதவுவதாகவும் கூறியுள்ளார். இறை வழிபாட்டிற்கு இயற்கையைத் துணையாகக் கோடல் வேண்டும் என்பது குறிப்பாக அமைகிறது. அஃறிணை உயிர்கள் வணங்குவதைக் கூறி உயர்திணை உயிர்களும் வணங்க வேண்டும் என்ற கருத்தைப் பெறவைக்கிறார்.

வெள்ளப் பெருக்கெடுத்து வரும் ஆறுகள், வேறு பொருட்களையும் அடித்துக்கொண்டு வருதல் இயற்கையான நிகழ்ச்சி. ஆனால் அவை காணிக்கைப் பொருட்களைக் கொண்டுவந்து திருவடி வணங்குகின்றன என்று தன் குறிப்பை ஏற்றிக் கூறுகிறார். காவிரியாறும் (1:15:5) மணிமுத்தாறும் (1:16:5) பல்வேறு காணிக்கைப் பொருட்களுடன் இறையடி தொழுவதாகப் பாடியுள்ளார்.

கடலானது தன் அலையென்னும் கரங்களால் முத்துகளாகிய மலர்களைக் கொண்டு வந்து மயேந்திரப்பள்ளி இறைவனைத் தொழுவதாகச் சம்பந்தர் பாடியுள்ளார்.

"நித்திலத் தொகைபல நிரைதரு மலரெனச்
சித்திரப் புணரிசேர்த் திடத்திகழ்ந் திருந்தவன்
மைத்திகழ் கண்டனன் மயேந்திரப் பள்ளியுட்
கைத்தல மழுவனைக் கண்டடி பணிமினே" (3:31:5)

என்று பாடியுள்ளார்.

(தொடரும்)

**துன்பம் இல்லை**

வேண்டுதல் வேண்டாமை இன்றி எதைக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளுங்கள். அப்போது உங்களுக்குத் துன்பம் என்பதும் இல்லா தொழிந்து விடும்.

திருமூலர் அருளுரை
தவத்திரு தேமொழியார்
பக். 244

## செந்தமிழ் ஞாயிறு,
## பேராசிரியர் டாக்டர் ந. சேதுரகுநாதன் மறைவு

விருதுநகர் செந்திற்குமார் நாடார் கல்லூரித் தமிழ்த் துறைத்தலைவராகவும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் பேராசிரியராகவும் பணிபுரிந்து ஓய்வுபெற்ற தமிழறிஞர், செந்தமிழ் ஞாயிறு, பேராசிரியர் டாக்டர் ந. சேதுரகுநாதன் அவர்கள் 26-3-96 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

டாக்டர் சேதுரகுநாதன் அவர்கள் நெல்லை மாவட்டத்தில் தென்காசி வட்டத்தில் கடையநல்லூர் அருகிலுள்ள அச்சம்பட்டி என்னும் சிற்றூரில் 1915 ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையார் பெயர் நல்ல முத்து; தாயார் சிவஞானம் அம்மாள். தமிழ் படிக்க வேண்டும் என்ற தணியா ஆர்வம் மீதூற திருவையாறு அரசர் கல்லூரியில் பயின்று, மாநில முதன்மைபெற்று 'வித்துவான்' (புலவர்) பட்டம் பெற்றார். திருநெல்வேலி சுந்தரமூர்த்தி உ.நி. பள்ளி, ம.தி.தா. பள்ளி, ம.தி.தா. இந்துக் கல்லூரி ஆகியவற்றில் சிறிது காலம் பணியாற்றிய பின் பேராசிரியர் சேதுரகுநாதன் அவர்கள் விருதுநகர் செந்திற்குமார நாடார் கல்லூரியில் 1948 ஆம் ஆண்டில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். படிப்படியாக உயர்ந்து, தமிழ்த் துறைத் தலைவராகி 1975 இல் ஓய்வுபெறும் வரை பணிபுரிந்தார். ஓய்வுபெற்ற பின்னர் மதுரை - காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் சித்த வைத்திய ஆராய்ச்சிப் பேராசிரியராக ஆறாண்டுகள் பணியாற்றினார்.

டாக்டர் சேதுரகுநாதன் பல்வேறு திறன்கள் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்தார். அவர் சிறந்த மேடைப் பேச்சாளர்; ஏராளமான பட்டி மன்றங்களிலும், கருத்தரங்குகளிலும் பங்கேற்றவர். கேட்போரைப் பிணிக்கும் நாவன்மை வாய்ந்தவர். அவர் மிகச் சிறந்த கவிஞராகவும் விளங்கினார். பல்வேறு கவியரங்குகளில் பங்கேற்றிருக்கிறார். வெண்பா இயற்றுவதில் தனித்திறன் வாய்ந்தவர்.

பேராசிரியர் சேதுரகுநாதன் அவர்கள் நுண்மாண் நுழைபுலம் பெற்றுத்திகழ்ந்ததோடு, தலைசிறந்த இலக்கண இலக்கிய ஆராய்ச்சியாளராகவும் விளங்கினார். நெல்லையில்



தமிழாசிரியராகப் பணிபுரிந்துவந்த இளம் வயதிலேயே (1946) சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக "முத்தொள்ளாயிரம்" "முக்கூடற்பள்ளு" என்னும் தொன்னூல்களுக்கு உரையெழுதியுள்ளார். இவற்றுக்கு உரையமைந்துள்ள முறைமையும் சிறந்ததே. குறிப்புரை, சொற்பொருள் விளக்கம், விளக்கம் என விளங்குகின்றது.

டாக்டர் சேதுரகுநாதன் சிறந்த மொழிபெயர்ப்பாளராகவும் திகழ்ந்தார். ஆங்கில அறிஞர் ராபர்ட் லூயி ஸ்டீவென்சன் எழுதிய "Treasure Island" என்னும் ஆங்கில நாவலைத் "திருமணித் தீவு" என்னும் பெயரில் தமிழில் மொழிபெயர்த்தார். இந்த நூலையும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமே வெளியிட்டுள்ளது.

பேராசிரியர் சேதுரகுநாதன், சித்த வைத்தியத்திலும் தேர்ந்து விளங்கினார். ஏராளமான சித்த வைத்திய நூல்களை ஏடுகளிலிருந்து எடுத்தெழுதி, பதிப்பித்து, உரையெழுதி, அச்சிட்டு வெளியிட்டுள்ளார். சித்த வைத்தியத்தில் தமக்கிருந்த பேரார்வம் காரணமாக, சித்தவைத்தியத்தில் தேர்வு எழுதி "டாக்டர்" பட்டமும் பெற்றார். இவரது சித்த வைத்தியப் புலமையைப் போற்றியே மதுரை - காமராசர் பல்கலைக்கழகம் இவரைத் தமிழ்த்துறையில் ஆராய்ச்சிப் பேராசிரியராக நியமித்தது. அங்கு பணியாற்றிய ஆறாண்டுக் காலத்தில், அதுவரை அச்சேறாமல் ஓலைச்சுவடிகளிலேயே இருந்த பல சித்த வைத்திய நூல்களைத் தேடிக்கண்டுபிடித்து, படியெடுத்து, பதிப்பித்து, தக்க உரையுடன் வெளியிட்டார். தமிழக அரசின் சித்த வைத்தியத்துறையின் பல்வேறு ஆலோசனைக் குழுக்களில் உறுப்பினராகவும், ஆலோசகராகவும் பணிபுரிந்துள்ளார். அன்னாரின் அருந்தமிழ்த் தொண்டினைப் பாராட்டித் திருப்பனந்தாள் ஆதீனம் "செந்தமிழ் ஞாயிறு" என்ற பட்டத்தையும், மதுரை - காமராசர் பல்கலைக்கழகம் "தமிழ்ச்செம்மல்" என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தது.

'திருக்குறள் புதிய உரை, போரில்லா ஒருலகம்' ஆகிய இரு நூல்களை இயற்றி முடிக்காத நிலையில் விட்டுள்ளார். இவர் தம் இழப்பு தமிழ் மொழிக்கும் நாட்டுக்கும் பேரிழப்பாகும். அன்னாரைப் பிரிந்து வாடும் அவர்தம் துணைவியார் சண்முகத்தம்மாள் மற்றும் மக்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இரா. நடராசன்

### மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

| | |
|---|---|
| உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்) | 10 00 |
| திரு. முருக விசாகநம்பி அவர்கள் | 5 00 |
| தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் | 5 00 |
| திரு. த. ஆறுமுகம் அவர்கள், சென்னை – 79. | 5 00 |
| உயர்திரு. ஈசுவரனார் அவர்கள் | 5 00 |
| திரு. வேணுகோபால் அவர்கள் சாந்தி திரையங்கம், சென்னை – 2. | 25 00 |
| திரு. K.E. மணவாளன், பெங்களூர் | 10 00 |
| திரு. N.S. இராஜலெட்சுமி, முத்தையால் பேட்டை தெய்வீக சங்கம் | 200 00 |
| திரு. முனைவர் மு.ச. சிவம், ஈரோடு | 10 00 |
| தாமரைச் செல்வி D/O. திரு. பொ. பாலசுப்பிரமணியம் சென்னை – 18. | 10 00 |
| முத்துமணி D/O. திரு. பொ. பாலசுப்பிரமணியம் சென்னை – 18. | 10 00 |
| திரு. ப. கோவிந்தராசு மதுரை | 35 00 |

### மறைமலையடிகள் கலைமன்ற வளர்ச்சிக்கு நன்கொடை

| | |
|---|---|
| உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்) | 10 00 |
| தவத்திரு. ஏ.டி. ஈசுவரனார் அவர்கள் | 5 00 |
| ஜெயா தங்கமாளிகை, பல்லாவரம், வழிபாட்டுச் செலவு | 25 00 |

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை – 108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,பி.லிட்.

**அருள்நந்திசிவம் அருட்பணி மன்ற வெளியீடு**

| | | |
|---|---|---|
| சிவஞானபோதம் - விளக்கவுரை | 60 | 00 |
| சைவசித்தாந்தம் - சு. மணி | 8 | 00 |
| சிவப்பிரகாசம் | 22 | 00 |
| திருஉந்தியார் திருக்களிற்றுப்படியார் | 20 | 00 |
| மெய்கண்ட நூல்களுள் ஏழு | 30 | 00 |
| சிவஞானமாபாடியம் | 260 | 00 |
| சிவஞானசித்தியார் | 60 | 00 |
| தசகாரியம் | 11 | 00 |

கிடைக்குமிடம்
திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.,
154, டி. டி. கே. சாலை, சென்னை-18.

**WORKS OF Dr. G. U. POPE**

| | | |
|---|---|---|
| TIRUKKURAL (Paper Pack) | 120 | 00 |
| " (Hard Bound) | 295 | 00 |
| NALADIYAR | 495 | 00 |
| TIRUVASAGAM | 495 | 00 |

ASIAN EDUCATIONAL SERVICES
No. 5, SRIPURAM FIRST STREET,
ROYAPETTAH, MADRAS-600 014.

"செந்தமிழ்ச் செல்வி"
(செந்தமிழ்த் திங்கள் இதழ்)
நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை
இதழாசிரியர் குழு
முனைவர் பொன் கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் பொன் சௌரிராசன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்
ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசுவாமி, எம்.ஏ., பி. லிட்.,

## உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| பொதுத் தேர்தல் | 321 |
| 'இத்தை விளைவித்தல் மலம்' | 324 |
| திருக்குறளில் பெண்கள் | 330 |
| நாட்டுப்புறச் சிறுவர் பாடல்களும் - இளைஞர் இலக்கியமும் — ஒரு பார்வை | 336 |
| ஃ ஆய்தம் பெற்ற பெரு வாழ்வு ஃ | 341 |
| தமிழக அரசியல் - அன்றும் இன்றும் இனியும் | 347 |
| க(அ)ம்பர்க் சிலம்பி | 35[illegible] |
| சம்பந்தர் பாடல்களில் இயற்கை | 354 |
| உயரிய வாழ்வுக்கு வழியமைப்பாய்! | 357 |
| நூல் மதிப்புரை | 358 |

**மானிட உடலியங்கலியல்**
டாக்டர் அ கதிரேசன். எம்.டி.,
இந்நூல் தமிழில் மருத்துவ அறிவியல் செய்திகளைப் புரிந்துகொள்ள பெரிதும் உதவுகிறது. தசைமண்டலம், எலும்புமண்டலம் மூச்சு மண்டலம் எனப் பல மண்டலங்களைப்பற்றி அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. நமது உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்புகளும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை நமக்கு எளிமை யான முறையில் அனைவருக்கும் புரியும்படியாகக் கூறுகிறார்.
**விலை ரூ. 35/-**

**செந்தமிழ்ச் செல்வி**
**தி.வ. ஆண்டு 2027 - சித்திரை**
**மே - 1996**
**சிலம்பு - 70 பரல் - 9**

# பொதுத் தேர்தல்

அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தல் இந்தியாவில் இதுவரை நடக்காத அளவிற்கு ஒரு புதுமையான தேர்தலாக இருந்தது. சாதாரணமாக ஊராட்சி நகராட்சித் தேர்தல் என்றாலே சுவரொட்டிகளும் - சுவர் ஓவியங்களும் - விளம்பரங்களும் - வண்ணவண்ணக் கொடிகளும் பதாகைகளுமென வீதிகளே அலங்கோலமாகும் அளவிற்குப் பரபரப்பாகத் தேர்தல் நடத்துவது நம் பாரதத் திருநாட்டின் பண்பாடாக இருந்தது. இதைக் கண்ணுற்ற வெளிநாட்டவர்கள் திகைத்து நிற்பதுண்டு.

வெளிநாடுகளில், மேலை நாடுகள் - கீழை நாடுகள், எதுவாயினும் சுவரொட்டி அச்சிடாமலேயே தேர்தல் நடத்துவார்களாம். அப்படிக்கூடத் தேர்தல் நடத்த முடியுமா என்று நாம் வியப்பதுண்டு. வீட்டுச் சுவர்களில் அவ்வீட்டு உரிமையாளர்களின் ஒப்புதலின்றியே இரவோடு இரவாக கரித்துண்டுகளாலும் கருப்பு மையாலும் எழுதுவது நம் இயல்பாக இருந்தது. சில சமயங்களில் சில மாதங்கள் கழிந்த பின் கூட அவை மறையாமலேயே இருக்கும்.

வீட்டுக்காரர்கள் பொங்கல் திருநாளையொட்டி வீட்டுச் சுவர்களை வெள்ளைப் பூச்சு, வண்ணப்பூச்சு செய்வர். அதையொட்டித் தேர்தல் வருமானால் அப்போது சுவரில் எழுதுவது அடுத்த பொங்கல்வரைகூட அப்படியே இருப்பதுண்டு. எழுதுகின்ற கட்சிக்காரர்களை வீட்டுக்காரர் கேட்க முடியாது. கேட்டால் வேறு பல தொல்லைகள் விளையும். ஒன்றுக்குமேல் ஒன்றாக ஏணி வைத்து எட்டுமளவிற்கு உயரத்தில் சுவரொட்டிகளை ஒட்டிவிடுவார்கள். தேர்தல் முடிந்தவுடன் ஒட்டியவர்கள் அவற்றைக் கிழித்துவிட்டு சுவர்களைச் சுத்தப்படுத்திக் கொடுக்கமாட்டார்கள்.

அண்மைக்காலத்தில் வானம் தெரியாத அளவுக்குப் பெரிய பெரிய கட்சிக் கொடிகளையும் இடையில் சிறிய கொடிகளையும்

வீதியின் குறுக்கே கட்டிவிடுவார்கள். இதனால் போக்குவரத்து இடையூறு ஏற்படுவதுண்டு. பேருந்து, சரக்குந்துகளில் மாட்டிக் கொண்டு கொடி கிழிந்து, கயிறு அறுந்து வீதிகளின் குறுக்கே விழுந்து நடப்பவர்களுக்கு இடைஞ்சலைத் தரும்.

ஒரு சில ஆண்டுகளாக சதுக்கப் பூதங்கள் போல கட்சித் தலைவர்களின் உருவங்களை மிகப் பெரிய அளவில் போட்டிபோட்டுக் கொண்டு அருகருகில் வைத்து வந்தனர். திடீரெனப் புயல் காற்று வீசினால் அத்தனை வெட்டு உருவங்களும் வீதிகளில் போவோர் வருவோர் மீது விழுந்துவிடும். இத்தகைய வெட்டுருவங்களைக் கூடத் தேர்தல் முடிந்து பல நாட்கள் அகற்றாமலேயே வைத்துவிடுவார்கள்.

இத்தனை அலங்கோலங்களையும் ஒன்றாகக் கொண்டு பொதுத் தேர்தல்கள் நடத்தும் நம் இந்தியத் திருநாட்டில் அண்மையில் நடந்துமுடிந்த பொதுத் தேர்தல் மிகமிகப் புதுமையாக, தேர்தல் நடந்தது தெரியாமலேயே நடந்து முடிந்து விட்டது.

ஒலிபெருக்கித் தொல்லை இல்லை. சந்துமுனைக் கூட்டங்கள் இல்லை. வெற்றாரவாரம் கொண்ட ஊர்வலங்கள் இல்லை. இரவும் பகலும் வீடுதேடி வந்து வாக்கு கேட்கும் தொண்டர்கள் இல்லை. குண்டர்களும் இல்லை. வாகனங்களில் கொடிகளைக் கட்டிக்கொண்டு ஒலிபெருக்கிகள் அலறவில்லை. இவ்வளவு பெரிய சனநாயகக் கட்டுக்கோப்பை எவ்வாறு உருவாக்க முடிந்தது. எதற்கும் கட்டுப்படாத இந்திய வேட்பாளர்கள் எப்படிக் கட்டுண்டனர். வடக்கு, தெற்கு என்றில்லை எல்லா இடங்களிலும் அமைதி.

இந்த அமைதிக்கு, அமைதியான தேர்தலுக்குக் காரணம் தேர்தல் ஆணையம்தான். கண்காணிப்பாளர்களின் துணை கொண்டு ஒவ்வொரு வேட்பாளரையும் கண்காணித்தது. அவர் செலவிட்ட ஒவ்வொரு காசையும் கணக்கெழுதி வைக்கச் செய்தது. மீறியபோதெல்லாம் உடனடி நடவடிக்கை எடுத்துத் தடுத்தது. பொதுத் தேர்தல் என்னும் சூறாவளிப் புயல் வந்தது தெரியாமலேயே போய்விட்டது.

புயல் அடித்து ஓய்ந்தது. ஆட்சியில் இருந்தவர்களைக் கீழே தள்ளிவிட்டு வேறு கட்சியினரை ஆட்சியில் அமர்த்தியுள்ளதைக் காணும்போதுதான் 'ஓ, தேர்தல் முடிந்துவிட்டது' என்று தெரிய



வைத்துள்ளது. 'நானே நிரந்தர அமைச்சர்' என்று சொன்னவர்களைக் காணோம். 'நாடு நிரந்தரமானது' என்று புதிய முழக்கத்துடன் சிலர் ஆட்சியில் அமர்ந்துள்ளதைப் பார்க்கும் போது புயல் வந்து சென்றது தெரிகிறது.

இனி வருகிற காலங்களிலும் இதைப் போலவே பொதுத்தேர்தல் மட்டுமல்ல ஊராட்சி மன்றத் தேர்தல்வரை எல்லாத் தேர்தல்களும் இப்படியே நடக்க வேண்டும். மேலை நாட்டுப் பண்பாட்டை எத்தனையோ வழிகளில் பின்பற்றத் துடிக்கும் நாம் இந்த வழியிலாவது உறுதியாகக் கடைப்பிடிப்போமாக.

இப்படியும் தேர்தல் நடத்தமுடியும் என்று நடத்திக் காட்டிய தேர்தல் ஆணையத்தின் இரும்புத்தலையர் திருவாளர் சேடனார் வாழ்க வாழ்க என வாழ்த்துகிறோம். நீதித் துறைபோல் தேர்தல் ஆணையமும் அரசுக்குக் கட்டுப்படாத தனித்தியங்க முடியும் என்பதைச் செயலில் காட்டிய சேடனாரைப் பாராட்டுகிறோம்.

**இன்பம்–துன்பம்**

ஒரு செயல் துன்பம் தருவதாய் இருந்தால், அதனைத் தீவினை என்றும் இன்பம் தருவதானால் நல்வினை என்றும் சொல்லுவோம். இன்பதுன்பங்களை நுகர்ந்து அச் செயல்களைச் செய்வதனால் அவை மேற் கொண்டு (ஆகாமிய) வினைகளை உண்டாக்குகின்றன. இன்பத்துக்குப் பின்னே துன்பமும் தொடர்ந்து வரும். இதுதான் நியதி. "இன்பம் உண்டேல் துன்பம் உண்டு" என்று சுந்தரர் சொன்னது கவனிக்கத்தக்கது. இன்பத்தை நன்றாக நுகர்ந்த அவரே அவ்வாறு தம் அநுபவத்தைச் சொல்லி இருக்கின்றார். இன்ப துன்பங்கள் ஒன்றை விட்டு ஒன்று நீங்கா.

**கந்தரநுபூதி**
–சிவத்திரு அழகரடிகள் விரிவுரை
பக். 220.

# இத்தை விளைவித்தல் மலம்'

(முனைவர். கோ.ந. முத்துக்குமாரசுவாமி
த.சா.அ. தமிழ்க் கல்லூரி, பேரூர்)

## முத்தி நிலையில் முப்பொருள் :

"பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாச மநாதி"

எனத் திருமந்திரம் சாற்றும் அழியாப் பொருள்களுக்கே அனாதித் தன்மை கூறப்படும். எனவே முத்தியிலும் பதி பசு பாசம் எனும் முப்பொருள்களும் உண்டென்று சைவ சித்தாந்த நூல்கள் அறையும். முத்தியில் மூன்று பொருள்களும் இருக்கும் நிலைமையினை உண்மை விளக்கப்பாடல் கூறும்.

'முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்த அனுபோகத்தைத் துய்த்தலணு - மெத்தவே
இன்பம் கொடுத்த லிறை இத்தைவிளை வித்தல்மலம்
அன்புடனே கண்டுகொள் அப்பா'

இப்பாடற் கருத்துக்களாவன :

1. பெத்த நிலையில் மட்டுமன்றி, முத்தி நிலையிலும் பதி பசு பாச மெனும் முப்பொருளும் அழிவின்றி நிற்கும்.
2. பேரின்பத்தைத் துய்த்தல் ஆன்மா.
3. இப் பேரின்பத்தை ஆன்மாவுக்குக் கொடுத்தல் இறை
4. இப் பேரின்பத்தை ஆன்மாவுக்கு விளைவித்தல் மலம்.

முதல் மூன்று கருத்துக்களையும் விளங்கிக் கொள்வதில் இடர்ப்பாடு இல்லை. நான்காவது கருத்தே ஆய்வுக்குரியது.

மலம் எவ்வாறு ஆன்மாவுக்குப் பேரின்பத்தை விளைக்கும்? ஆன்ம அறிவை மறைப்பதன்றோ மலத்தினியல்பு? இது ஆய்வுக்குரிய வினா.

இன்பம் கொடுத்தல் இறை; அதனைத் துய்த்தல் உயிர்; இன்பம் துய்த்தலை விளைவித்தல் மலம். துய்த்தல் - தன்வினை; இதற்கு வினைமுதல் உயிர். விளைவித்தல் - பிறவினை; துய்த்தலை விளைவித்தலுக்கு வினைமுதல் மலம். மலம் எவ்வாறு முத்தியின்பத்தை விளைவிக்கின்றது? இது வினா.



அறிவாராய்ச்சியில் இவ்வினாவுக்குப் பல விளக்கங்கள் அளிக்கப் பெறுகின்றன. அவற்றுள் ஒன்று.

1. தொல்காப்பியர் தொழிலுக்கு முதனிலை (காரணம், ஏது) எட்டு என்கின்றார்.

"வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவியென் றாறும்
இன்னதற் கிதுபயன் இரண்டொடும் தொகைஇ
ஆயெட் டென்ப தொழின்முத னிலையே"

(வேற்றுமை மயங்கியல்)

இவற்றுள் செய்வது ஒன்று மட்டும் வினை முதல். ஏனைய ஏழும் வினை முதலின் வினையைச் செய்விப்பன என்பார். பேராசிரியர் (திருக்கோவையார் உரை பாடல் 130,182)

'வனைநதான்', என்புழி வனைதலாகிய வினைக்கு முதல் குலாலன் வனைதலைச் செய்தல் குலாலன்; ஏனை, மண்ணாகிய முதல் காரணம், தண்ட சக்கரம் முதலிய துணைக்காரணம், வனையும் இடம், வனைதற் செயல், இறந்த காலம், குடம் முதலிய செய்ப்படு பொருள் முதலியன வனைதலாகிய தொழிலைச் செய்விப்பன.

மேற்காட்டியது போன்றே, இன்பத்தைக் கொடுத்தல் இறை; இன்பத்தை நுகர்தல் ஆன்மா. சித்தாகிய ஆன்மாவுக்கு இன்பத்தை விளைவித்தல் சடமாகிய மலம்

மலம் எவ்வாறு ஆன்மாவிற்கு இன்பத்தை நுகர்வித்தது?

திருவருட் பேறு பெற்ற முத்தான்மாவை விட்டு நீங்கி இன்ப நுகர்ச்சியினை விளைவித்தது. முத்தான்மாவை விட்டு நீங்கிய மலம் ஏனைப் பெத்தான்மாக்களிடத்துத் தங்குதலால் அதன் நித்தியத் தன்மைக்குக் கேடில்லை. இங்கு, முத்தான்மாவை விட்டு நீங்குதல், ஏனைய பெத்தரிடத்துத் தங்குதல் எனும் வினைகளுக்குரியதாக மலம் பேசப்படுகின்றது. ஆன்மா, இன்ப வடிவினது, இன்பத்துக்குரியது. அது விளையாமல் மறைத்து நின்ற மலம், விட்டு நீங்குவதால், மலமறைப்பு நீங்குவதால், ஆன்மாவுக்கு இன்பத்தை விளைவிக்கின்றது இது ஒரு விளக்கம்.

2. மற்றொரு விளக்கம் வருமாறு :

வினையாவது, பொருள்களின் புடை பெயர்ச்சியாகிய செயல் முக்காலங்களுக்கும் உரிய, காலந்தழுவிய புடை

பெயர்ச்சியே உடன்பாட்டு வினை. வனைந்தான், வனையாநின்றான், வனைவான் எனும்பொழுது வனைதல் ஆகிய வினை முக்காலமும் தழுவி நின்றது 'வனையான்' என்புழி வனைதலாகிய தொழிலே இல்லை. புடை பெயர்ச்சியே யில்லாத, அக்காரணத்தால் எக்காலத்தையும் தழுவாத எதிர்மறையும் இலக்கணையினால் வினை எனப்பட்டு, முக்காலத்துக்கும் உரித்தாகக் கூறப்படும்.

எங்ஙனம் புடைபெயர்ச்சியாகிய செயலே இல்லாத எதிர்மறையும் வினையாகக் கொள்ளப்படுகின்றதோ, அவ்வாறே, முத்தியில் மலத்தின், (ஆன்ம அறிவினை) மறைக்கும் செயலற்ற நிலைமையும், ஆன்மாவுக்கு இன்ப நுகர்வினை விளைக்கும் வினையாகக் கொள்ளப்படும்.

திருவருள் பெற்ற முத்தான்மாக்களை விட்டு ஆணவ மலம் எங்கும் நீங்கிப் பெயர்வதில்லை. அது அனாதியாகவே பந்தித்துள்ள ஆன்மாவின் அறிவோடு கலந்திருந்தாலும் ஆன்ம அறிவை மறைக்கும் ஆற்றலழிந்து நிற்கின்றது. இவ்வாறு, தன் ஆற்றல் அழிந்து மலம் நிற்பது, ஆன்ம வியல்பாகிய பேரின்ப நுகர்ச்சிக்கு ஏதுவாகின்றது. இதுவே, 'இத்தை விளைத்தல் மலம்' என மலத்தின் செயலாகக் கூறப்பட்டது.

## முத்திநிலையும் முப்பொருளுண்மையும்

உள் பொருள்கள் மூன்றெனக் கொண்டால் முத்தியிலும் அவை உளதாதல் வேண்டுமன்றோ. முத்தியில் இறைக்கும் உயிர்க்கும் செயல் கூறிய உண்மை விளக்க நூலார், இப்பாடலில், மலத்தின் செயலையும் கூறினார்.

முத்தான்மாக்களிடமும் ஆணவமல வியாபகம் உண்டு. ஆனால் அதன் வலிகெட்டு, அறிவை மறைக்கும் ஆற்றல் நசிந்து, செயலற்று இருக்கும் என்பது பெறப்படுகின்றது. முத்தருக்கு மலபந்தமில்லாதது கொண்டு மலத்துக்கு வியாபகத் தன்மை இல்லை எனல் கூடாது. வியாபக முடைத்தாயினும் முத்தரிடத்து மலத்துக்குவலியில்லை என்பதே முறை. மாதவச் சிவஞான முனிவர், 'சித்தாந்த மரபு கண்டன கண்டனம் (30)ல் "முத்தருக்கு மூலபந்தமில்லாதது கொண்டு மலத்துக்கு வியாபகத்துவம் கூடா தென்றீர்; 'ஒளிவற நின்றக் கண்ணும் விளிவுறு தன்னுடைக் காலந்துன்னிற் பின்னிடும் வலியின் தொகுதித்து' என்றதன் தாற்பரியம் அறியீர் போலும்" என்றும், போக காரிகை சூ.132,



"வியாபக மலமானது, ஒவ்வொரு புருடனிடத்தும் நியமமாயும், தத்தம் கால வெல்லையில் நீங்குஞ் சக்திகளையுடையதாகவு மிருக்கின்றது" என்றும் கூறுதலை நோக்க, முத்தியிலும் ஆணவமலத்தின் வியாபகமும் நித்தியமும் நீங்குவதில்லை; நீங்குவது அதன்வலி யொன்றே.

## சித்தாந்த முத்தி நிலையும் சிவ சமவாத மறுப்பும்

அனாதி அமலன், நிர்மலன் இறை. அனாதி மலனாய், முத்தியில் மலவலி நீங்கி (மலம் நீங்கியன்று) விளங்குபவன் ஆன்மா. அனாதி சுத்தன் இறை. அவனை நோக்க உயிர், முத்தியிலும் (மலக் கலப்புடையனாய், அதன் வலி மட்டும் நீங்க) அசுத்தனே. முத்தி பெற்ற ஆன்மா பெத்த நிலையை நோக்க சுதந்திரனே எனினும், சிவமொன்றனையே யறிந்து சிவனுக்கடிமையாம் உணர்வு நிலை பெறும்படி சிவதீக்கை முதலியவற்றால் சிவனுக்குத் தானம் செய்தளிக்கப்பட்ட பொருளாதலின் முத்தியிலும் ஆன்மா பரதந்திரனே அனைத்தையும் ஒருங்கேயுணரும் பேரறிவாகிய சிவ ஞானத்தை நோக்க முத்தான்மாவினறிவு சிற்றறிவே.

சித்தமலம் நீங்கிய முத்தான்மாவைச் சிவானந்தம் ஒன்றற்கே யுரித்தாக்கி என்றும் சிவ சமமாகாதவாறு நிறுத்துவது அனாதி மலக்கலப்பே. முத்தியில் இறைக்கும் உயிருக்கும் கொடுப்போன் நுகர்வோன் உறவே உண்டு. 'ஆழ வமுக்கி முகக்கினும் ஆழ்கடலின் நாழி முகவாது நானாழ்' சிவத்துவம் முழுவதும் தன்மாட்டு விளங்குவதால் சிவனதாகிய சுதந்திரமும் முற்றுணர்வும் தானுடையனாயினும் முத்தான்மா சிவ மொன்றனையே அறியற்பாலது; ஏனையவற்றையறிதல் இல்லை.

ஏனையவற்றையறிதல் முத்திப் பெரும்பயனுக்கு இடையூறு; ஏனையவற்றையறியாமையே முத்திப் பெரும்பயன் விளையக் காரணம்.

பெத்த நிலையில் ஆன்மா சிவத்தையறியாமைக்கு மலமே காரணம்: முத்தி நிலையில் ஆன்மா சிவத்தையன்றி ஏனையவற்றை யறியாமைக்கும் அனாதியான மலக்கலப்பே காரணம்.

முத்திப் பெரும்பயனாவது சிவானுபவம் ஒன்றே. பேரின்ப நுகர்ச்சியே சிவானுபவம். பேரின்ப நுகர்ச்சியாகிய சிவானுபவத்திற்கு உரிய தகுதி மலவலி நீங்கிய ஆன்மாவுக்கே உள்ளது. மலவலி நீங்கிய ஆன்மா சிவத்தையன்றி ஏனையவற்றை

அறிவதில்லை. ஏனையவற்றை அறியாமையாகிய அறியாமைக்குச் சிவம் காரணமன்று; அநாதி நித்தியமாக ஆன்ம அறிவில் கலந்துள்ள மலமே, தன் வலி நீக்கத்தின் காரணமாகச் சிவத்தை அறிவித்தும், ஏனையவற்றை அறியாமல் தடுத்தும் பெரும்பயன் விளைக்கின்றது. இவ்வாறு சிவத்தை அறிவித்தும் ஏனையவற்றை அறியாமல் தடுப்பதுமாகிய மலத்தின் செயல்களே, "இத்தை விளைத்தல் மலம்" என உண்மை விளக்கப்பாடல் சாற்றியது.

## பாம்பனடிகள் விளக்கம் :

உடம்பெங்கும் பரவிய உணர்வுடைய ஆன்மாவைப் போலவே உலகெங்கும் நிறைந்துள்ள வொரு பதிப்பொருள் இறை. அவ்வுடம்பிலே ஒருவர் அறிவிக்க அறிகின்ற (விழி, செவி, மனம்) கருவிகளைப் போன்றனவே ஆன்மாக்கள்.

ஒருவர் அறிவித்தாலும் அறியாத் தன்மையுடைய எலும்பு நரம்பு தோல் இரத்தம் மாமிசம் முதலியனவற்றைப் போன்றன ஆணவம் கன்மம் மாயை மாயேயம் திரோதை எனுமிப் பஞ்ச பாசங்களும்.

உடம்பு போலப் பாசம் அழியுமோ? சூரியப் பிரகாசத்தின் முன்னே இருளானது அழியாது அழிந்த முறையினை யொக்கும். 'இன்னண மழியாத் தன்மை யிருத்தலினாலும், பேரின்ப நிலையில் யாவு மின்பமாகவே காணப்படுதலினாலும் பாசம் (அழியாது) ஆனந்தமயமாகி விடுமென்பதே ஈண்டுய்த்துணரக் கிடப்பது'.

ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை, திரோதானமாகிய மலம் ஐந்தனுள், மாயையின் காரியம் கெடும்; காரணம் கெடாது. இதுவே மாயை அழியாது அழிதல். ஆணவ இருள், 'சுவானுபூதி ஞானவொளி பிறத்தலும் தனாது பிரபாவமடங்கியிட வுளதாம்'. ஆணவத்தொடு விரவி மலங்களுள் ஒன்றென நிற்கும் ஆதி சத்தியாகிய திரோதானம் ஈசனை நாடார்க் கிருளாகவும், நாடுநர்க் கருளொளியாகவும் இருக்கும். ஆகாய வெளியே இருளும் ஒளியுமாக இருத்தல் போன்றதே இத்திரோதான சத்தியும். ஆகாச மயமாய் நிற்கும் இச்சத்தி வாயிலாக ஆணவ மலமும் நிலைபேறுறும். இவ்வாறு ஆணவம் அழியாதழிந்து திரோதானத்தின் அருளொளியைச் சுடர்விடச் செய்கின்றது.



'இல்லது வாராது' என்னும் சற்காரிய வாதத்தில் உள்ளது போகாது நிலை பேறுறற்கு எத்துணை யழிவுங் கூறொணா தென்பதே ஏற்புடைமையாகும்.

## முடிவுரை :

ஞாயிற் றொளிக்கும் பூதவிருளுக்கும் வெளியே இருப்பிடம். இருள் வெளி, ஞாயிற்றொளியால் ஒளி வெளியாய்த் திகழ்தலைப் போன்று, ஆணவத்தில் இருள் மயமாக இருந்த ஆன்மா சிவஞான வொளிமயமாய்த்திகழும். அவ்வொளியில் பாசவிருள் அடங்கி, சிவஞான ஒளி மயமாகி விடும். பொருளையுங் காட்டாது தன்னையுங் காட்டாது உயிரறிவை மறைத்து நிற்கும் ஆணவமாகிய செறிந்த பேரிருளில், பிணிப்புற்ற உயிர்கள் சிவஞானப் பேரொளியில் மேற்பட்டு விளங்கும் போது, 'அழியாதழிந்த', 'பொய்யிருள்' (சிவஞான பாஷ்யம் சூ.6) எனப் பெற்ற பாசமும் அவ்வொளியாய்த் திகழும் எனல் ஆமோ?

'பாசம் அழியாது ஆனந்த மயமாகிவிடும்' எனப் பாம்பனடிகள் கருத்துக்குச் சைவ சிந்தாந்த நூல்கள், திருமுறைகள் ஆகியவற்றில் இடனுண்டோ?

## பார்வை நூல்கள்


1. உண்மை விளக்கம் - திருப்பனந்தாள் காசிமடப்பதிப்பு
2. சிவ ஞான மா பாடியம்.
3. திருப்பா I திட்பம் - பாம்பன் குமர குருதாச சுவாமிகள் பாடல் 'திவ்விய சுப்பிரமணியம்' எண்.3
4. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 65 பரல் 7, சிலம்பு 6, பரல் 8, 1992 "இருளுண்மை"


### முதல் பயன் நமக்கே

நாம் எண்ணுகின்ற நல்ல எண்ணங்கள் நமக்கே பயன் தரும். நாம் சொல்லுகின்ற ஒவ்வொரு நல்ல சொற்களும் நமக்கே பயன் தரும். நாம் செய்கின்ற ஒவ்வொரு நல்ல செயல்களும் முதலில் நமக்கே பயன் தரும். பிறகுதான் முன்னிலையில் இருக்கின்றவர்களுக்குப் பயன் தரும்.

திருமூலர் அருளுரை
—தவத்திரு தேமொழியார் சுவாமிகள்
பக். 270

# திருக்குறளில் பெண்கள்

க.சி. அகமுடை நம்பி
மதுரை - 20.

திருவள்ளுவர் பெண்களை ஆண்களுக்கு இணையாகக் கருதவில்லை என்றும், பெண்களைச் சிறுமைப்படுத்துவதாகவே திருக்குறள் அமைந்துள்ளது என்றும் சிலர் கருதுகின்றனர். தமிழ் எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் இதற்கு ஒரு படி மேலே சென்று, பெண்களைப் பற்றிய சில குறள்களை திருக்குறளிலிருந்து அகற்றி விட வேண்டுமென்று கோரிக்கை விடத் துணிந்து விட்டார். (தினமணிக் கதிர் 30.8.92, 11.10.92)

திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரையே சிறந்த உரை என்று அண்மைக் காலம் வரை தமிழறிஞர்கள் கருதி வந்தனர். ஆனால், பல குறள்களுக்கும் பரிமேலழகர் எழுதிய உரை தவறானது என்றும் திருக்குறளையே திரிபுபடுத்துவதாக அவருடைய பல உரைகள் அமைந்துள்ளன என்றும் தமிழறிஞர்கள் மட்டுமன்றி, டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் போன்ற சமூகவியல் அறிஞர்களும் கருத்துரைக்கின்றனர். எடுத்துக்காட்டாக, "மக்கட்பேறு அதிகாரத்தில் பரிமேலழகர் உரை தந்த சில குறிப்புகள் பெண்ணைத் தாழ்த்துவனவாக உள்ளன. ஆயினும், அவை உரையாசிரியர் காலத்தில் கருத்தோட்டத்தைப் புலப்படுத்துமேயன்றி வள்ளுவர் கருத்தாக ஆகா" என்று விளக்கமளிக்கிறார் டாக்டர் எஸ்.ஆர்.கே. (பக்.159, திருக்குறள்: ஒரு சமுதாயப் பார்வை: டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை - 78).

டாக்டர் எஸ்.ஆர்.கே.யின் இந்த நூலை ராஜம் கிருஷ்ணன் போன்றவர்கள் படித்துப் பார்த்திருப்பார்களா என்பது தெரியவில்லை. பரிமேலழகர் உரையை மட்டும் படித்தவர்கள் திருக்குறளைத் தவறாகப் புரிந்து கொள்ளவே செய்வர். திருக்குறளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள விரும்புவோர் அண்மையில் வெளியாகியுள்ள மதுரை இளங்குமரனார் எழுதியுள்ள 'திருக்குறள் - வாழ்வியல் உரை', டாக்டர் எஸ்.ஆர்.கே. எழுதியுள்ள திருக்குறள் ஆய்வுரை போன்ற உரைகளையும் படித்துணர வேண்டும்.



'வாழ்க்கைத் துணைநலம்' என்று வள்ளுவர் கூறும் கருத்துகள், குடும்ப வாழ்வுக்குப் பெரிதும் உறுதுணையாக இருப்பவன் கணவனைவிட மனைவியே என்பதை வலியுறுத்துவனவாகும். கணவன் மாண்புடையவனாக இல்லாவிட்டாலும் குடும்ப வாழ்வு அவ்வளவாகச் சீர் குலைவதில்லை. ஆனால் மனைவி மாண்புடையவளாக இல்லையென்றால், அந்தக் குடும்பத்தில் வேறு என்னதான் சிறப்பு சேர்ந்திருப்பினும் குடும்ப நலம் சிறக்காது. இந்த வாழ்வியல் உண்மை அன்றும் இன்றும், இனி என்றும் மாறாதது. இதைத்தான், "இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக் கடை" என்று வள்ளுவர் சுட்டுகிறார். இல்லாளுக்குத் தனிச் சிறப்பு அளிப்பதை ஒரு குறையாகக் காண்பது சரியன்று.

இல்லறத்துக்கேற்ற நற்குண நற் செய்கைகளையுடையவளாகவும், தன்னை (வாழ்க்கைத் துணையாகக்) கொண்ட கணவனின் வருவாய்க்கு ஏற்பக் குடும்பச் செலவுகளைக் கையாள்பவளாகவும் உள்ள பெண்ணே சிறந்த வாழ்க்கைத் துணையாவாள் என்று இவ்வதிகாரத்தின் முதல் குறள் கூறுகிறது. 'தன்னைக் கொண்டவள்' என்றிருப்பது பெண்ணை இழிவு படுத்துவதாக உள்ளது என்றும் மனித மதிப்புக்கு எதிரானது என்றும் எதிர்க் கருத்தினர் கருதுகின்றனர். மணவாழ்வில் ஒருவனுடன் ஒருத்தி இணைந்ததை அவள் 'அவனுக்கு வாழ்க்கைப் பட்டாள்' என்று கூறுவது தற்கால வழக்கு. இதையும் கூட மனித மதிப்புக்கு மாறானது என்று சொல்லி விடலாமா? காலத்துக் கேற்ப சொற்கள் ஆளப்படுகின்றன. அவன் அவளை விரும்பிக் காதலித்தான் - கைத்தலம் பற்றினான் - என்று சொல்வதையெல்லாம் கூட இந்த மாற்றுக் கருத்தாளர்கள் குறை கூறவே செய்வர் போலும்!

இனி வள்ளுவத்தைக் குறை கூறுவோர் மனத்தைப் பெரிதும் உறுத்துகின்ற ஒரு குறள்,

> "தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை".

இந்தக் குறள் பற்றி எழுதும்போது, டாக்டர் எஸ்.ஆர்.கே. கூறுகிறார்: "தெய்வம் தொழாஅள்" என்பது கடவுள் வழிபாட்டை மறுத்துரைப்பதாகப் பொருள் கொள்வது பிழையாகும். அதுபோலவே 'கொழுநன் தொழுதெழுவாள்' என்பது பெண்ணைத் தாழ்த்திப் பேசும் கூற்று என்பது தவறாம்.

இரண்டு தொடர்களின் கவித்துவப் படிமங்கள் கற்பு நிலையைக் குறிப்பன". கவிஞர்களுக்கேயுரிய கவித்துவப் படிமங்களை அதே முறையில் புரிந்துகொள்ள முற்பட வேண்டும். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற குறளை எடுத்துக் கொண்டு, எந்த மனிதனும் எந்த நிலையினும் தெய்வமாக ஆகிவிட முடியாது என்றும், ஆகவே பொய்மைக்கு இட்டுச் செல்லும் இதுபோன்ற குறள்களை திருக்குறள் நூலிலிருந்து அகற்றிவிட வேண்டும் என்றும் கூறினால், அது சரியாகுமா?

மனித மனத்தின் ஆற்றல் குறித்து உளவியல் அறிஞர்கள் கூறுவதை இவண் கருதிப் பார்க்கலாம். மனத்தை ஒருமுகப் படுத்தியுள்ள சிலருடைய மன ஆற்றல், மனித எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருப்பதையும், யோகியர்தம் மன ஆற்றல் மழையையும் வருவிக்க வல்லதே என்பதையும் உளவியல் அறிஞர்கள் ஒப்புக் கொள்வர். கற்பு நெறி என்பது ஒரு யோக நெறியே. சற்று உயர்வு நவிற்சியுடன் கூடியது இக்குறள் என்று வேண்டுமானால் கூறலாமேயன்றி, இது சாத்தியமே இல்லை என்று கூறிவிட முடியாது. மக்கள் நெரிசல் அதிகமாகிவிட்ட இன்றைய ஆரவார உலகில் இத்தகு கற்புநிலை சாத்தியமில்லை என்று வைத்துக் கொண்டு அந்தக் கற்பு நிலை பற்றிப் பேசுவதே தவறு என்று கூறலாமா? இன்றைய அதிகார அரசியல் உலகில் அப்பழுக்கற்ற நேர்மை என்பது காணக் கிடைக்காத அரிய குணம் என்பதால், நேர்மை பற்றிப் பேசுவதே தவறு என்றாகி விடுமா? 'தொழுதல்' என்பதற்கு நினைவில் வைத்துப் போற்றுதல் அல்லது பின்பற்றுதல் என்ற பொருளைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். குடும்பத் தலைவனின் நினைவு போற்றி எழுபவள் என்பதே உரிய பொருள்.

அடுத்து, 'கற்பு' நெறியைப் பெண்களுக்கு மட்டுமே சுமத்துகிறது குறள் என்பது எதிர்க்கருத்தாளர்களின் ஒரு முக்கியக் குற்றச்சாட்டாகும். கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெற்ற பெண்ணைவிட பெருமைக்குரியது வேறெதுவும் இல்லை என்பது வள்ளுவம். இந்தத் திண்மையுடைய ஒரு பெண்ணுக்குக் கிடைக்கின்ற சமூக மதிப்பையும் அந்தத் திண்மையைப் பெறாத பெண்ணுக்கு சமூக மதிப்பு இல்லாமல் ஆகிவிடுவதையும் அன்றாட வாழ்வில் காண்கிறோம். கற்பென்னும் திண்மையைப் பெண்களுக்கு அறிவுத்துகின்ற வள்ளுவர், 'பிறன்மனை நோக்காத



பேராண்மை'யை ஆண்களுக்குச் சுட்டிக் காண்பிக்கிறார். அயலான் மனைவியை விரும்பலாகாது என்று மட்டும் அவர் கூறி அமையவில்லை. அயலான் மனைவியை விரும்பிப் பார்க்கவே கூடாது, என்ற வழிமுறையைக் கடைப்பிடிப்பவனின் ஆண்மையே 'பேராண்மை' என்று சிறப்பித்து கூறுவதை ஆழமாகக் கருதிப் பார்க்க வேண்டும்.

'கற்பு' என்ற சொல்லைப் பெண்களுக்கு மட்டும்தானே வள்ளுவர் பயன்படுத்துகிறார் என்று அவர்கள் கேட்கலாம். பெண்களுக்கு மட்டுமே பயன்படுத்தக்கூடிய சொற்கள் இதுபோல் இன்னும் பல உள்ளன. 'பெண்மை' என்ற சொல்லைப் பெண்களுக்கு மட்டுமே பயன்படுத்துகிறோம். ஆண்மை கலவாத பெண்மை இல்லை. அதுபோல் பெண்மை கலவாத ஆண்மை இல்லை. என்றாலும்கூட ஆண்மையை ஆணுக்கும் பெண்மையைப் பெண்ணுக்கும் என்றே வகைப்படுத்துகிறோம். Chaste, Virigin போன்ற சொற்கள் ஆங்கிலத்தில் பெண்களுக்கு மட்டுமே உரியவை. ஆகவே 'கற்பு' என்பது பெண்களுக்கு மட்டும் தானா என்று யாரும் வருத்தப்பட தேவையில்லை. பெண்மைச் செறிவைக் கற்பு என்கிறோம். ஆண்மைச் செறிவைப் பேராண்மை என்கிறோம். 'அறத்தின் எல்லைமீறி எத்தனை பாவங்களை ஒருவன் செய்ய நேர்ந்தாலும், பிறன் மனைவியை விரும்பா திருத்தல் நல்லது' என்று ஆண்மையின் ஒருமையைப் பன்னிப் பன்னிக் கூறுகின்ற வள்ளுவரை, ஒருபக்க கற்பு நெறி கூறும் பிற்போக்காளர் என்று கூற முற்படுவது சரியன்று.

அடுத்து, 'பெண்வழிச் (செல்தல்) சேறல்' என்ற அதிகாரத்துக்கு வருவோம். காம இன்பம் காரணமாக ஓர் ஆண்மகன், மனைவியின் கைப்பாவை போலும் இருந்து கொண்டு, அவள் சொற்படியே இயங்குவதைக் கண்டிப்பதாக இவ்வதிகாரம் அமைந்துள்ளது. பல குடும்பங்களில் ஆண்மக்கள் மனைவிமாரின் விருப்பங்களுக்கு இசைந்தே செயல்படுபவர் களாக இருப்பதைக் காண்கிறோம். அத்தகையோர் தம் புறக் கடமைகளில் கருத்துச் செலுத்துவதில்லை; விருந்தினரைத் தக்கவாறு ஓம்புவதில்லை; நண்பர்களுக்கு உதவுதல், பிற அறச் செயல்களில் ஈடுபடுதல் போன்றவற்றையெல்லாம் அவர்களால் செய்ய முடிவதில்லை. இத்தகு மெய்மை நிலையை வள்ளுவர் சுட்டிக் காண்பிப்பது எப்படித் தவறாகும்?

பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்மையே பெருமை யுடைத்து.

ஆண், ஆண்மை சிறக்க வாழ வேண்டும். பெண், பெண்மை நிறைந்து விளங்க வேண்டும். ஆண்மையில் குறைவுடைய ஆண்மகன் சமூகத்தில் எள்ளி நகையாடப்படுகிறான். ஆனால், பெண்மைக் குறைவுடைய பெண், சில வேளைகளில் 'வீராங்கனை' என்று போற்றவும் படுகிறாள். இதனை மனித மதிப்பு என்றா கூறுவது? மனித மதிப்பின் முரண்பாடல்லவா இது?

எந்த ஒரு தனிமனிதனையும் இன்னொரு தனி மனிதனுக்குச் சமம் என்று கூற முடியாது. அதனால்தான் ஒவ்வொரு மனிதனையும் அல்லது பெண்ணையும் 'Individual' என்று ஆங்கிலத்தில் கூறுகிறோம். மெய்மை நிலை இப்படியிருக்கும் போது, பெண் ஆணுக்குச் சமம் என்று கூறுவதோ அல்லது ஆண் பெண்ணுக்குச் சமம் என்று கூறுவதோ மெய்மைக்குப் புறம்பானது. ஒன்று மெல்லினம். இன்னொன்று வல்லினம். எனினும் ஆண் பெண் இருபாலருக்கும் சம உரிமை என்பது இன்றைய உலகம் ஏற்றுக் கொண்ட ஒரு கோட்பாடு. இந்தக் கோட்பாட்டுக்கு வள்ளுவம் எதிரானதன்று.

ஆண் பெண் சம உரிமை என்பதைக் கூட ஒரு கணிதச் சமன்பாடு போலும் கணக்கிட்டுப் பார்க்கக்கூடாது. ஆணுக்கென்று சில தனி உரிமைகள் பெண்ணுக்கென்று சில சிறப்புரைமைகள் இருக்கவே செய்யும். ஒரு பெண், தன் பெண்மையைப் பொருத்து முழு உரிமை பெற்றவளாதல் வேண்டும்; அதுபோல் ஆணுக்கும் உரிமை வேண்டும்.

சில பெண்கள், தன் கணவனின் அன்புக்கும் ஆண்மைக்கும் கட்டுப்பட்டு அவன் மகிழ்ச்சியே தன் மகிழ்ச்சியென்று கொண்டு, அவனோடு முழுமையாக ஒன்றி வாழ்வதைக் காணலாம். மற்றவர் பார்வைக்கு அத்தகு பெண்கள் தம் கணவருக்கு அடிமைகள் போல் ஆகிவிட்டதாகத் தோன்றக்கூடும். இங்கே, அந்தப் பெண்களின் உரிமை பறிக்கப்பட்டதாகக் கருதுவது தவறு.

நிற்காலத்தைப் போல், வள்ளுவர் காலத்தில் பெண்கள் புறவாழ்வில் பங்கேற்கவில்லை. புற வாழ்வுக்கு ஆண்கள் மட்டுமே என்ற வாழ்வியல் நடைமுறை நிலவிய கால கட்டம் அது. பொது வாழ்வின் சிக்கல்களில், வன்முறை, சூதுவாது, முதலியவற்றில் பெண்கள் ஈடுபட வேண்டிய தேவை அன்றில்லை. இந்த வரலாற்றுப் பார்வையோடு 'பெண்வழிச் சேறல்' என்ற அதிகாரத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.



புறவாழ்விலும் பெண்கள் செயலாற்றத் தொடங்கியுள்ள தற்காலச் சூழலில் கூட, திருவள்ளுவர் பெண்களின் பொது வாழ்வு உரிமையை மறுப்பதாகக் கருத இடமே இல்லை. பெண்களின் இத்தகு உரிமை பற்றிக் கருத்துரைப்பதற்குரிய தேவை வள்ளுவர் காலத்தில் இல்லை. அதனால் இதுகுறித்த குறள்கள் திருக்குறளில் இடம் பெறவில்லை. இந்த இருபதாம் நூற்றாண்டில் மலர்ந்து வளர்ந்துள்ள குடிநாயகம் (ஜனநாயகம்) என்ற அரசியல் அமைப்பு முறை திருக்குறளில் இடம் பெறவில்லையென்பதால், குடிநாயகத்துக்கு எதிரானது வள்ளுவர் என்று கூறலாமா?

கற்பு நெறி பெண்மையின் மதிப்பை வானளாவ உயர்த்துகிறது என்று சொன்ன வள்ளுவர், அந்தத் திண்மை மகளிர்தம் நிறையால் மட்டுமே கைகூடும் என்று திட்டவட்டமாகக் கூறுகிறார். "சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்?" என்று உரத்து ஒலிக்கின்ற வள்ளுவத்தை தெளிவாகப் புரிந்து கொள்வோர், ஒருபோதும் திருக்குறளில் பெண்களைத் தாழ்த்துவதாக எண்ணமாட்டார்கள்.

அறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் "வள்ளுவரும் மகளிரும்" என்ற தமது நூலில் (சர்வோதய இலக்கியப் பண்ணை வெளியீடு) இப்பொருள் குறித்து விரிவாகவும், ஆழமாகவும் ஆராய்ந்துள்ளார். இந்த நூலின் இறுதி முடிவாக அவர் கூறுகிறார் :

"அறத்திலும், பொருளிலும், இன்பத்திலும் வாழ்க்கைத் துணையாவாள் பெண்ணே என்பது திருவள்ளுவரது முடிபு. பெண்கள் உயர்வதில்லை என்றும், பெண்பிறவியே இழிபிறவி என்றும் கூறுவாரது வாய்மொழி அனைத்தும் பொய்மொழி என்று பொய்யாமொழியார் காட்டுகின்றார்; புத்தேளுலகையும், செம்பொருளாய் நின்ற சிறப்பு நிலையாகிய நீத்தார் நிலையையும் பெண்கள் எளிதில் அடையலாம் எனப் பாடுகின்றார். பெண்பிறப்பின் இத்தகைய பெருமையினையும், உயர் நிலை அடைதற்கேற்ற அதன் தகுதியினையும் எடுத்துக்காட்டிப் பெண் பிறப்பினும் உயர்ந்த பிறப்பு உண்டோ என்கிறார். 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்பதே திருவள்ளுவர் காண்கின்ற உண்மை. காலத்தையும் கடந்த திருவருட்புலவர் ஆதலின் உண்மை யினையும், உயர் நிலையினையும் உலகம் உள்ளளவும் போற்ற ஓதுகின்றார் என்பதே உறுதி".

# நாட்டுப்புறச் சிறுவர் பாடல்களும் – இளைஞர் இலக்கியமும் – ஒருபார்வை

**ஜி. வசந்தா.**
**தமிழ்ப் பல்கலைக் கழகம்.**

## முன்னுரை :

நாட்டுப்புறப் பாடல்கள் என்பன மனிதன் என்று தோன்றினானோ அன்ற தோன்றிய பாடல்கள் என்பர். வாய்மொழிப் பாடல்களாக, ஏட்டில் எழுதாக் கவிதைகளாக உலவி வளர்ந்த இலக்கியம் இன்று எழுத்தில் மிளிர்கின்றன.

நாட்டுப்புறப் பாடல்களில் பெரிதும் சிறப்புடையன எனக் கருதப்படுவது தாலாட்டும், ஒப்பாரியுமாகும். அதில் தாலாட்டுப் பாடல்கள் சிறு குழந்தைகளுக்கு அவர்கள் அறியா பருவத்தில், பெற்றோராலும், பாட்டி, அத்தை என்று ஏனையோராலும் பாடப்படுவன. தாலாட்டுப் பாடல்களிலிருந்து சற்று வளர்ந்த நிலையில் பாடப்படுவன சிறுவர் விளையாட்டுப் பாடல்கள்.

## பெயர்க் காரணம் :

'விளை' என்றால் விருப்பம். ஆகவே விரும்பியாடும் ஆட்டு, 'விளையாட்டு' என்பார் ஞா. தேவநேயன். 'விழையாட்டு' என்பதே ஒலி மாற்றமடைந்து 'விளையாட்டு' என்றாயிற்று என மு.வை. அரவிந்தன் விளக்குவார்.

## சிறுவர் பாடல்கள் :

தாலாட்டுப் பாடல்களைத் தொட்டிலிலிருந்து கேட்டுப் பழகிய காரணத்தாலோ என்னவோ வளர்ந்த நிலையிலும் பாடல்களே குழந்தைகளைக் கவருகின்றன. உரைநடையாகவோ, வாய்மொழியாகவோ, கதையாகவோ சொல்வதைவிட, புரிந்து கொள்ளக்கூடிய எளிய சொற்களால் பாடலாகப் பாடுவது என்பது குழந்தைகளுக்கு மிகப் பிடித்தமான ஒன்று. இன்றும் கிராமப்புறங்களில் மட்டுமல்ல, நகர்ப் பகுதிகளில் கூட ஒரு சிறுவன் அல்லது சிறுமி பாடினால் அதைத் தொடர்ந்து கூட்டாக மற்றச் சிறுவர்களும் சேர்ந்து மகிழ்ச்சியாகப் பாடி விளையாடுவதைக் காணலாம். அவ்வகையில் எளிய சொற்களில்



அவை பலமுறை அடுக்கியும் அல்லது எதுகை மோனையும் அமைந்த சிறுவர் குழந்தைப் பாடல்கள் நாட்டுப் புறங்களில் மிகுதியும் காணலாம்.

குழந்தைப் பாடல்களை இருவகையாகப் பிரிக்கலாம். குழந்தைகளே பாடுவது ஒன்று. குழந்தைகளுக்காப் பிறர் பாடுவது மற்றொன்று. குழந்தைகளே பாடும் பாடல்களும் பலவகையின. ஆண் குழந்தைகள் பாடும் பாடல்கள், பெண் குழந்தைகள் பாடும் பாடல்கள், இருபாலரும் இணைந்து பாடும் பாடல்கள் என்று வகையாகப் பிரிக்கலாம்.

"சிறுவர்களின் ஆனந்தத்தை அதிகப்படுத்த பலர் பல பாடல்களைப் பாடி வைத்திருக்கின்றனர். அந்தப் பாடல்களைச் சிறுவர் பாடும்போது அவர்களுக்கு மட்டுமல்ல அருகிலிருந்து கேட்பவர்களுக்கும் அளவில்லாத ஆனந்தம் ஏற்படுகிறது"[1] என்பார் அழ. வள்ளியப்பா. காரணம், இப்பாடல்களின் தன்மையே பாடுபவர்களையும் கேட்பவர்களையும் மகிழ வைப்பதுதான்.

## இளைஞர் இலக்கியம் :

பாரதிதாசன் தம் கவிதைத் தொகுப்புகளில் ஆண், பெண் குழந்தைகளுக்கானத் தாலாட்டுப் பாடல்கள் பாடியிருக்கிறாரே அன்றி, அவற்றில் சிறுவர்களுக்கென அமைந்த பாடல்கள் இல்லை. ஆனால் சிறுவர்களுக்கென்று தனி இலக்கிய நூலாக 'இளைஞர் இலக்கியம்' என்ற பெயரில், சிறுவர்பால் தமக்கு உள்ள ஈடுபாட்டை அவர்கள் அப்பாடல்களைப் பாடி வளர்வதற்கு வழி காட்டியுள்ளார். இவ்விலக்கியம் பெயருக்கேற்றாற்போல் இளைஞர்க்கென அமையாமல் சிறுவர்களுக்காகவே அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பாவேந்தரின் 'இளைஞர் இலக்கியத்தில் உள்ள பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்கள் அமைப்பில் அமைந்துள்ளன. இப்பாடல்களை நாட்டுப்புறப் பாடல்களில் ஒரு கூறான சிறுவர் பாடல்களோடு ஒப்பீட்டளவில் ஆய்ந்து பார்த்தால் இவற்றில் நாட்டுப்புறப் பாடல்களில் தாக்கத்தைக் காணலாம்.

குழந்தைப் பாடலில் பாடு பொருளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. எனவே, அவர்கள் பாடல்கள் எதைப்பற்றி வேண்டுமானாலும் பாடுவர். அவை விளையாட்டாகவும், வேடிக்கையாகவும் அமைகின்றன. பாவேந்தரின் நிலவுப் பாடல்,

நாட்டுப்புறப்பாடலான நிலா பாடலோடு ஒப்பிட்டு நோக்கத்தக்கது:

"வட்ட நிலவே
வாடாப் பூவே
சட்டி நிலாவே
தாமரைப் பூவே
தொட்டிப் பாலே
சோற்றுத் திரளே"[2]

என்ற இப்பாடலை,

'எட்டி எட்டிப் பார்க்கும்
வட்ட வட்ட நிலாவே
துள்ளித் துள்ளிச் சிரிக்கும்
தும்பைப் பூ நிலாவே'

என்ற நாட்டுப்புறச் சிறுவர் பாடல் வடிவில் காணமுடிகிறது.

கைவீ சம்மா கைவீசு
கடலை வாங்கலாம் கைவீசு
நெய் உருண்டை கைவீசு
நிறைய வாங்கலாம் கைவீசு
பொய்யா சொல்வேன் கைவீசு
போளி வாங்கலாம் கைவீசு
வெயில் போகும் கைவீசு
வெளியில் போகலாம் கைவீசு'[3]

என்னும் பாடல்,

'கைவீ சம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு
மிட்டாய் வாங்கலாம் கைவீசு
மெதுவாய்த் தின்னலாம் கைவீசு'

என்ற சிறுவர் பாடலாகவே ஒலிப்பதைக் காணலாம்.

'பொருள் உள்ள பாடல்களைக் காட்டிலும் ஓசை நயமுள்ள பாடல்களே அதிகம். எளிமையும் இனிமையும் உடையதாக இருக்கும்'[4] என்ற சு. சக்திவேல் அவர்களின் கருத்திற்கேற்ப மேற்கண்ட பாடல்கள் அமையப் பெற்றுள்ளன.

'சிறுவர் விளையாட்டுக்கள் அழிக்கப்பட முடியாத பழமைச் சின்னங்கள் ஆகும்'[5] என்ற கருத்தை மெய்ப்பிக்கும் பாடல்களாக இவை :



'தட்டாங்கி தட்டாங்கி
தலைமேலே தாழம்பூ
......................
......................
தட்டுநீ தட்டு
தட்டாங்கி தட்டாங்கி'[6]

என்ற பாவேந்தர் பாடலும்,

தட்டாங்கி தட்டாங்கி
தட்டாங்கி கொட்டம்மா தட்டாங்கி
தட்டாங்கி தட்டாங்கி

என்ற சிறுவர் பாடலும் விளக்குகின்றதைக் காணமுடிகிறது.

வான ஊர்தி வான ஊர்தி
எங்கே போகின்றாய்
......................
......................
ஆனை ஒன்று குறுக்கில் வந்தால்
என்ன செய்குவாய் - அட
ஆனை ஏது பூனை ஏது
வான வெளியிலே[7]

என்ற வினாவிடை அமைப்பில் அமைந்த பாடல் நாட்டுப்புறச் சிறுவர் பாடலில் அமைந்த வினாவிடை பாடலின் மறுவடிவமாக அமைந்துள்ளதைக் கீழ்க்காணும் நாட்டுப்புறச் சிறுவர் பாடல் விளக்கும்.

நிலா நிலா எங்கே போறே?
மண் எடுக்கப் போறேன்
மண் என்னத்துக்கு?
சட்டி பானை செய்ய
சட்டி ப்பானை என்னத்துக்கு?
சோறாக்கித் தின்ன.

இப்பாடல்கள் அடுக்கடுக்காக வினா கேட்டும் அதற்குப் பதில் சொல்லுவது போலும் அமைந்திருக்கும். இவ்வகைப் பாடல்கள், 'குழந்தைகளின் திறன்களை வளர்க்க விளையாட்டுக்கள் பயிற்சி அளிக்கின்றன'[8] என்ற சார்லஸ் கூற்றோடு ஒப்பிடத்தக்கது.

இவ்வகையில் பல பாடல்கள் நாட்டுபுறப்பாடல்களின் தாக்கம் பெற்று வந்துள்ளன.

'விளையாட்டு கல்வியின் மிகப் பெரிய மூலதனம்'[9] என்பதற்கேற்ப நாப்பயிற்சிப் பாடல்கள் பலவற்றை இவ்விருவகைப் பாடல்களிலும் காணலாம். நாட்டுப்புறச் சிறுவர் பாடல்களாயினும் பாவேந்தரின் சிறுவர் பாடல்களாயினும் பாடி விளையாடும் சிறுவர்களுக்கு இவை மகிழ்ச்சி அளிப்பதோடு, அவர்கள் அறிவை, திறமையை வளர்த்துக் கொள்ளவும் இவை வழி செய்கின்றன.

## முடிவுரை :

குழந்தைப் பாடல்களின் இயல்பு, 'இவ்வாறுதான் அமைய வேண்டும் என்ற கட்டுகளற்று ஓடித்திரியும் இளங்கன்றுகளாகவும், பாதைகளையே வேண்டாத, விரும்பாத பட்டாம்பூச்சிகளாகவும் இவை விளங்குகின்றன'[10] என்னும் சு. சண்முகசுந்தரம் அவர்களின் கருத்தை மேலே காட்டிய பாடல்கள் உணர்த்துகின்றன எனலாம்.

### துணை நூல்கள்


1. வள்ளியப்பா, அழ., பாமர மக்களின் பரம்பரைப் பாடல்கள், ப.6.
2. பாரதிதாசன், இளைஞர் இலக்கியம், ப.28.
3. பாரதிதாசன், இளைஞர் இலக்கியம், ப.108.
4. சக்திவேல், சு., குழந்தைப்பாடல்கள், 2-ஆம் கருத்தரங்கு, தமிழ் இலக்கிய ஆய்வுக்கோவை, தொகுதி - II, அனைத்திந்திய தமிழ்இலக்கியக் கழகம், தஞ்சாவூர், 1988, ப. 496.
5. Chambers Encyclopaedia, Vol.IV, P. 712.
6. பாரதிதாசன், இளைஞர் இலக்கியம், ப.109.
7. பாரதிதாசன், இளைஞர் இலக்கியம், ப.77
8. Charles F. Smith, Games and Game Leadership, P.15.
9. World University Encyclopaedia, Vol. IV, P.1096
10. சண்முகசுந்தரம், சு., தமிழில் நாட்டுப்புறப்பாடல்கள், ப.84.


# ஃ ஆய்தம் பெற்ற பெரு வாழ்வு ஃ


- க.மா. வீரணன்.
தமிழ் ஆய்வாளர்,
மணல்மேடு குடில், உசிலம்பட்டி 626532
மதுரை மாவட்டம்.


தமிழ் கூறும் நல்லுலகம் இன்று ஆய்தமின்றியே பேசவும், எழுதவும் முயன்று வருகிறது. இதற்கு இன எழுத்துக்களோ அன்றித் துணை எழுத்துக்களோ இல்லை. உயிரோடும், மெய்யோடும் தொடர்பின்றி ஆன்மாவைப் போல் தனித்து நிற்கிறது. ஆய்தம் என்பது இலக்கணப் புலவர்களின் கற்பனை என்றார் ஒரு பாதிரியார். ஆய்தம் ஒரு நுட்பமான ஒலி. இது தனி ஒலி அன்று. குற்றியலுகரம் போல் துணையொலி அல்லது சார்பொலியே ஆகும். மெய்யெழுத்துக்களைச் சார்ந்து அவற்றை நுட்பமாக வேறுபடுத்துவது. சங்க காலத்தில் தனி ஒலியாக ஒலிக்கப்பட்டது. ஆகவே அது அளபெடை பெற்று நீண்டும் ஒலித்தது. நன்னூல் ஆய்தக் குறுக்கத்தையும் அறிமுகப்படுத்தியது.

சிலர் ஆய்தம் என்ற சொல் ஆசிரிதம் என்ற வட சொல்லிலிருந்து தோன்றியதென்பர். ஆசிரிதம் என்ற சொல்லுக்கு சார்பு என்பது பொருளாகும். தொல்காப்பியர் குற்றியலுகர லிகரங்கள் மற்றும் ஆய்தம் ஆகிய மூன்றுக்கும் சார்பு என்ற சொல்லை ஆள்வதால், இது நலிதல் என்னும் பொருள்படும் தமிழ்ச்சொல்லேயாகும். செய்யுளியலிலும் நலிவு வண்ணம் என்னும் பொருளில் ஆய்த வண்ணம் குறிக்கப்படுகிறது அவிநயனார் நலிவு எழுத்து என்பர். பவனந்தி தனி நிலை என்பார். இனிக் கல்லும் முள்ளும் நிறைந்த காட்டில் ஆய்தம் தனித்து நிற்கும் காட்சியைக் காண்க.

முட்புதர்கள் மொய்த்த தரைஎங்கும் - எதிர்
முட்டுகருங் கற்களும் நெருங்கும் - மக்கள்
இட்டடி எடுத்தெடுத்து வைக்கையிலே
கால்களில் தடுங்கும் - உள்
நடுங்கும்.

- பாரதிதாசன்.

தார்ச்சாலையில் நடந்து பழகிய தமிழர்கள் இந்தக் கால் நடுக்கத்தையும், தடுமாற்றத்தையும் உணர வாய்ப்பில்லை. கல்லும், முள்ளும் காலை வருத்தி நடந்த முன்னோர் அதையே கல்தீது,

முள்தீது என்னும் தொடராக்கி, பழமொழி போல் வழங்கினர். இது இலக்கியத்தில் மட்டுமன்றி இலக்கணத்திலும் காலப் போக்கில் இடம்பெற வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது.

கல் + தீது = கற்றீது = கஃறீது.
முள் + தீது = முற்றீது = முஃறீது.

"தகரம் வரும்வழி யாய்த நிலையலும்
புகரின் றென்மனார் புலமை யோரே"

Learned men say that it is no error
if Aytam occurs when the sound 't'
comes initially.

ஆய்தம் ஆறு வல்லெழுத்துக்களை அடுத்து வரும் என தொல்காப்பியம் கூறுகிறது. இளம்பூரணர் இரண்டு எடுத்துக்காட்டுகளே தந்துள்ளார். கஃசு, எஃகு, ஏனைய நான்கும், அவர் காலத்திலேயே வழக்கொழிந்தன போலும். உருவம், ஓசை ஆகிய இரண்டையும் குறிக்க ஆய்தம் பயன்படுத்தப்பட்டது. இதுவே ஆதிநிலை.

கஃறென்னும் கல்லத ரத்தம்
சுஃறென்னும் தண்டோட்டுப் பெண்ணை

கஃறு = நிறக் குறிப்பு, சுஃறு = ஒலிக்குறிப்பு.

இது சிறுபான்மையாய் வரக்கூடியது. இனி கஃசு என்பது ஒரு அளவுப் பெயர். அதை,

"தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்" - என்னும் குறளால் அறிக.

தட்டெழுத்துப் பொறியில், ஆய்தம் சோம்பிக் கிடக்கிறது. தற்காலத் தமிழர்களின் பேச்சிலும், எழுத்திலும் பயன்படும் ஆய்தங்களின் எண்ணிக்கையை வலைவீசித் தேடிப் பிடித்ததில் இரண்டுதான் கிடைத்தன. ஒன்று பள்ளியில் இலக்கணத்தில் வரும் அஃறிணை. இதற்கு பொதுமக்களிடையே செல்வாக்கில்லை.

இரண்டாவது சொல் எஃகு.

இருநூறு ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் ஆங்கிலம் அறிமுகமாகிய போது ஸ்டீல் என்னும் சொல்லுக்கு எஃகு என அன்றைய அறிஞர் மொழி பெயர்த்தனர். அதுவே இன்றும்



வழங்குகிறது. இதில் உறுதி என்னும் ஒரு பொருளே மேலோங்கி நிற்கிறது. ஆனால் இன்று Waterfalls நீர் வீழ்ச்சியாகி (அருவி) Minor Irrigation சிறு நீர்ப்பாசனம் ஆனது (இடக்கரடக்கல்)

Steel : Very strong alloy of iron and carbon; tapered steel rod for sharpending Knives.

இது ஆக்ஸ்போர்டு அகராதி தரும் விளக்கம்.

எனினும் தமிழில் எஃகு காட்டும் பொருள் இன்னும் சற்று விரிவானது. போர்க்கருவிகளான வேல், வாள், மற்றும் கூர்மை ஆகிய பொருள்களையும் குறிக்கும்.

"இருகை ஐ இரு வட்டமொடு
எஃகு வலம் திரிப்ப (முருகு)

"இரண்டு கைகள் வியப்பையும் கருமையையுமுடைய பரிசையுடனே வேலையும் வலமாகச் சுழற்ற" - இது நச்சர் தரும் உரையாகும். டாக்டர் உ.வே. சா. அவர்கள், ஐந்தாகிய பெருத்த பரிசை; பத்துத் திருமுகத்தினையுடைய கேடக மெனினுமமையும் என்றார். நச்சர் ஐ வியப்பாகும் எனப் பொருள் கொண்டுள்ளார்.

எனினும் அடிக்குறிப்பில் ஐயரவர்கள் காட்டிய உரையே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

"செவிநேர்பு வைத்த செய்வு உறு தீவவின் நல்யாழ்
நவின்ற"

என்னும் அடிக்கு எஃகுச் செவியாலே சுருதியையளந்து நரம்பைக் கட்டின சுற்றுதலுறும் வார்க் கட்டினையுடைய நன்றாகிய யாழின் இசையிலே பயின்ற என நச்சர் பொருள் கூறினார். இதற்கு எஃகுச் செவி = மூவகைச் செவியிலும் தலையான கூரிய செவி என்று அடிக்குறிப்புக் கூறுகிறது. இயல்பாகவே மூன்றுபுள்ளிகளை உடைய கேடயம் என்னும் போர்க் கருவியையும் குறிக்கும் ஆய்தம், இங்கு மூவகைச் செவிகளை உணர்த்தி அவற்றில் கூரிய செவியையும் உணர்த்துகிறது. இதுவே தத்துவ நோக்கில் மும்மூர்த்திகளையும், முப்பெருந் தேவியரையும் குறிக்கலாம். நாம் பொருள் உணராமல், ஆய்தபூசையை ஆயுத பூசையாக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

முற்றாய்தம் எட்டாகும். இவற்றின் ஒலி தலையில் பிறக்கும். அளபெடுக்கும் ஆய்தத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு.

"எஃஃகிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகுவார்க் கில்லை வீடு"

இதிலுள்ள ஓசை இனிமையை எஃகுச் செவியுடையோர் எளிதில் உணரலாம். (எஃகு = கூர்மை) தமிழ் மக்கள் ஸ்டீல் பர்னிச்சர் என்னும் தொடரைக் கற்றுக் கொண்டதால், எஃகின் எதிர்காலம் இருண்டே கிடக்கிறது. பள்ளி, கல்லூரிகளில் ஆய்தம் நன்றாக கற்பிக்கப்படுகிறது. எனினும் மாணவர் தம் வாழ்வில் அதைப் பயன்படுத்தி, அது வளர உதவுவதில்லை. அதனாலேயே "பள்ளிக்கல்வி புள்ளிக்கு உதவாது" என்னும் பழமொழியே எழுந்தது. ஆய்தம் மூச்சொலி என்றும், அதன் துணை கொண்டு அரபி, எபிரேயம் போன்ற மொழிகளைத் தமிழில் எழுதலாமென்றும் கூறுவர் ப.வே. மாணிக்க நாயகர்.

சங்கப் பாடல்களில் அஃதை என்னும் சொல்லை அகுதை என்றும், எழுதியுள்ளனர். யாப்பிலக்கணத்தில் தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் - என்னும் குறளில் ஆய்தம் மெய்யாக கருதப்படுகிறது. அற்றால் அளவறிந்துண்க அஃதுடம்பு........ என்னும் குறளில் உயிராகக் கருதப்படுகிறது. எனவே, சங்க காலத்தில் ஆய்தம் தனி எழுத்தாகும் நிலை தோன்றியது.

திருநெல்வேலியில் கிடைத்த பழைய, நன்னூல் ஏட்டுப் பிரதியில் ஒரு பாட பேதம் உள்ளது. "அம்முன் இகரமும் யகரமும் எய்தின் 'ஐ' ஒத்திசைக்கும்" என்னும் நூற்பாவில் யகரம் என்ற சொல்லுக்குப் பதிலாக ஆய்தம் என்றசொல் உள்ளது. இப்பிரதி எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததென ஆய்வாளர் கருதுகின்றனர். நம்மாழ்வார் தம் பாடலில் யகரம் ஆய்தத்தோடு எதுகை கொள்ளுமாறு பாடியுள்ளார்.

"அஃதே உய்யப் புகுமாறென்று கண்ணன் கழல்கள்மேல்
கொய்பூம் பொழில்சூழ் குருகூர்ச் சடகோபன் குற்றேவல்
செய்கோலத் தாயிரம் சீர்த் தொடைப்பாடல் இவைபத்தும்
அஃகாமற் கற்பவர் ஆழ்துயர்போய் உய்யற் பாலரே"

இவர் நெல்லையை அடுத்த குருகூரைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனக்குவமை இல்லாதவன் இறைவன் என்பர் வள்ளுவர். அந்த இறைவனுக்கே உவமையாக இடம்



பெற்றது ஆய்தம். இலக்கியத்தில் இடம் பெற்ற வேறு இலக்கண விதிகளைக் காண்பது மிகமிக அரிது.

(எ–டு). பல் தானை : பற்றானை : பஃறானை

குறில்வழி லகரம் தனிநிலை யாயுங்
கூடிய தகரமுன் எழுத்தென்று
அறிகுறி வடிவம் திரிதல்போல் நந்தி
அடல்விடை மெய்திரிந் துறினும்
நறுமலர் விழியின் கண்டவ ரெல்லாம்
நந்தியே என்றுளம் மகிழ்ந்தார்
பெறுதவம் முயன்ற அன்னையும் பிதாவும்
பெறுமுவகை யினையார் உரைப்பார்

- சிவப்பிரகாச சுவாமிகள்.

குறிலினை அடுத்து நின்ற லகரத்தைக் கண்டு றகரமாய்த் திரிந்த தகரம், அஃது ஆய்தமாய்த் திரிந்தபின்பும், அதனை முன்னெழுத்து (லகரம்) என்றே கருதித் திரிந்தவாறே நிற்கிறது. அதுபோல வலிய எருது வடிவாகிய நந்தியெம் பெருமான், மண்ணுலகு வந்து, மானிடக் குழவி வடிவாய் மாறிய பின்பும், அவரை முன்பு தம் மலர் கண்களாற் கண்டு போற்றிய தேவர் எல்லோரும் தம் கருத்தினை மாற்றிக் கொள்ளாது, "நந்தியெம் பெருமானே!" எனக் கருதி மனம் மகிழ்ந்தனர். இதுவே இப்பாடலின் பொருளாகும்.

இங்கு லகரமும், அதன் திரிபாய ஆய்தமும் முறையே தேவர் போற்ற நின்ற நந்தியையும் அவர்திரிபாய மனிதக் குழந்தையையும் குறிக்கும்.

றகரமாய்த் திரிந்து நின்ற தகரமும் அது தன்னை முன்னைய நிலைக்கு மாற்றிக் கொள்ளாத நிலையும் முறையே நந்தியைத் தம் தலைவரெனக் கருதி அவர் வழி ஒழுகும் தேவரையும், அவர் விண்ணுலகு விட்டு மண்ணுலகு வந்து எளிய மனிதக் குழந்தையான பின்பும் அவர்கள் தம் நிலையை மாற்றிக் கொள்ளா நிலைமையையும் குறிக்கும்.

குறித்து வரு கிளவியின் தொடர்பு அறுந்தால், ஆய்தம் முன்னைய லகரமாகும் என்பதும், மண்ணுலகத் தொடர்பு அறுந்தால், மனிதக் குழந்தை, முன்னைய நந்தியாகும் என்பதும் தெளிவு.

இந்த இலக்கிய இலக்கணங்களை யெல்லாம் பொதுமக்கள் பொருட்படுத்துவதில்லை. அவர்கள்தம் விருப்பம் போல் சொற்களைப் படைத்துக் கொள்வதும், உண்டு. ஞாயிறு திங்கள் சூரியன் சந்திரன் ஆகிய சொற்களை ஒதுக்கிவிட்டு, பொழுது, நிலா ஆகிய சொற்களை வழக்கில் கொண்டு வந்தனர். இச்சொற்கள் இன்று இலக்கிய இலக்கணங்களிலும் இடம்பெற்று விட்டன. அதுபோலவே, எஃகையும், ஸ்டீலையும் ஒதுக்கி விட்டு உருக்கு என்னும் சொல்லை உபயோகத்திற்கு கொண்டு வந்தனர். ஏவல் வினையாக வரும் இச்சொல்லை ஆகுபெயராக இலக்கணம் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

இன்று ஒலி, ஒளி மற்றும் கணிப்பொறித் துறைகள் வானளாவ வளர்ந்துள்ளன. கண்ணிமைக்கும் நேரத்தில் நிகழும் நிகழ்ச்சியை இரண்டு மணித்துளிகள் நிறுத்திக் காட்டுகிறார்கள். கண்ணிமைக்கும் நேரம் ஒரு மாத்திரை. கால் மாத்திரையுள்ள ஆய்தக் குறுக்கத்தை நம்மால் ஒலித்தோ விளக்கியோ காட்ட முடியவில்லை. இதை ஒலி ஒளித் துறையினர் ஏன் காட்டக்கூடாது? காட்டமாட்டார்கள். ஏன்? அவர்கள் பாதையோரத்தில் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சிலர் ஆய்தத்தை, ஃபாதர், ஃபிரடெரிக், ஃபெரா (அன்னியச் செலாவணி ஒழுங்குமுறைச் சட்டம்) என எழுதுகின்றனர். நரியை ஃபாக்ஸ் என எழுதினாலும் வியப்பதற்கில்லை. கல்வெட்டில் ஆய்தம் இவ்வாறு, எழுதப்பட்டுள்ளது. 1939 விகடன் தீபாவளி மலரில், கவிமணியின் பாடலில் இகர நெடில், ஈ இவ்வாறு அச்சிடப்பட்டுள்ளது.

காலந்தோறும் வரிவடிவம் மாறலாம். ஆனால் ஒலி வடிவம் மாறாது. எனவே, ஆய்த ஒலியின் இனிமையை உணர்ந்து அஃதை போற்றுவோம்.

**மாசில்லா தூய்மை**

"அவரவர் நிலைக்கு எந்தவகைக் குளியல் முறை பொருத்தமாகத் தோன்றுகிறதோ அதனை மேற் கொள்ளலாம். தேகத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுதலே முக்கயம்" என்றும் கூறும் காமி காகமம் அடுத்துக் கூறுகிறது. 'தேகசுத்தி மாத்திரம் தூய்மையன்று மனத்தின் கண் மாசில்லா திருத்தலே எல்லாத் தூய்மைகளிலும் சிறந்தது.

**சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம்**
**— டாக்டர் எஸ்.பி.சபாரத்தினம்**
**பக்கம்78**

# தமிழக அரசியல் – அன்றும் இன்றும் இனியும்

**தெ. முருகசாமி**
**முதல்வர்**
**இராமசாமி தமிழ்க் கல்லூரி**
**காரைக்குடி - 630 003.**

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே - நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே!**

என்பது பாரதியார் கூற்று. இக்கூற்று வாழ்வின் எல்லாத் தரப்பு மாந்தர்க்கும் பொதுவாகப் பொருந்துவதாயினும் விடுதலைப் போராட்ட காலத்தில் கூறப்பட்ட இதில், அரசியல் வாழ்வின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் உரிய காரண காரியங்கள் சிறப்பாகச் சுட்டப்பட்டுள்ளன எனக் கொள்ளவேண்டும். ஒன்றுபட்டால் வாழ்வும் அஃதின்றேல் தாழ்வும் ஆகிய நிலைகளே அரசியலை அளக்கும் அளவுகோல் என்ற அடிப்படையில் அன்றும் இன்றும் உள்ள தமிழக அரசியலைப் பற்றிச் சிந்திப்பதே இக்கட்டுரையின் கருதுகோள்.

முடிவுடைவேந்தர் மூவரின் ஒற்றுமையின்மையைச் சங்க இலக்கியங்கள் மிகுதியும் சுட்டினாலும் ஒற்றுமையின் சிறப்பையும் சுட்டியுணர்த்தத் தவறவில்லை. சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருசேர இருந்த காட்சியைக் கண்டு வியந்து காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் "இன்றே போல்க நும் புணர்ச்சி" என வாயார வாழ்த்தினார்.

பகைமையைக் கவசமாகக் கொண்டிருந்த மன்னர்கள் வரிசையில், வளவனும் வழுதியும் ஒரு சேர இருந்தது புலவரை வியப்பில் ஆழ்த்தியதால் இன்றே போல்க நும் புணர்ச்சி என வாழ்த்தியதோடு இந்நட்பு என்றும் தொடரவேண்டும் என்ற பேரவாவால் ஓர் எச்சரிக்கையுடன் கூடிய அறிவுரையையும் சேர்த்தே பகரலானார்.

................................ இருவீரும்
உடனிலை திரியீர் ஆயின் இமிழ்திரைப்
பெளவம் உடுத்த இப்பயம் கெழுமாநிலம்
கையகப் படுவது பொய்யா காதே:
அதனால் நல்ல போலவும் நயவ போலவும்
தொல்லோர் சென்ற நெறிய போலவும்
காதல் நெஞ்சின் நும்மிடை புகற்கலமரும்
ஏதில் மாக்கள் பொதுமொழி கொள்ளாது
இன்றே போல்க நும் புணர்ச்சி

- புறம். 58.

அத்தி பூத்தாற்போல் இருவரும் ஒருசேர இருப்பதைப் பார்க்கப் பொறுக்காத சில சுயநலமாந்தர்கள் இருவரையும் பிரிக்கப் பார்ப்பர் என்பதால் ஒற்றுமையுடன் இருக்கும் உறுதிப்பாட்டை வற்புறுத்துகிறது இப் புறப்பாட்டு.

இவ்வாறே, சேரன் மாரி வெண்கோவும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப்பெருவழுதியும் ஒருங்கிருந்தபோது ஒளவையார் "கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்.......பொலிக நும் நாளே" என வாழ்த்தியதாக 367ஆம் புறப்பாட்டு விளக்குகிறது ஒருங்கிருக்கும் வேந்தருக்குள் வேற்றுமை வந்துவிடக் கூடாது என்ற அச்சத்தால்தான் ஒற்றுமையை வற்புறுத்துவதாகப் புலவர்களின் கூற்றுகள் அமைகின்றன. ஆயினும் ஒற்றுமை இல்லா நிலையே பெரும்பான்மை என்பது சங்க இலக்கியம் காட்டும் அரசியல் வாழ்வாகும். இதை ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன்று இவ் வுலகத்து இயற்கை என்ற பொதுவான போர் அறமாக எடுத்துக் கொண்டாலும் போகம் வேண்டிப் பொதுச் சொல் பொறாத தனிமைப்பண்பால் ஒருவரை ஒருவர் பகைத்தே வாழ்ந்தனர் என்பதுதான் வரலாற்று உண்மை.

ஈண்டுப் பகை என்றது ஒருவரை ஒருவர் சண்டையிடுவதை மட்டும் சுட்டுவதன்று. பாழ்பட்ட காழ்ப்புணர்ச்சியாலான தீய எண்ணங்களையும் சுட்டுவது. உடலில் ஏற்படும் வலியோ காயங்களோடு மாறிவிடும். ஆனால் உள்ளத்தால் அடிப்பதான வலி என்றும் ஆறாது. அது என்றும் கனன்று கொண்டே இருக்கும். பழி வாங்கும் நோக்கோடு நீறு பூத்த நெருப்பாகவே இருந்து காலம் பார்த்துச் சுடும். எனவே இந்தக் காழ்த்த அடிப்படையில் ஒருவர்க் கொ... வளர்த்துக் கொண்ட தீய



எண்ணப் போக்கால் தமிழினம் அன்று முதல் இன்று வரை சிதறுண்டு கிடக்கிறது எனக் கூறுவதில் தவறில்லை.

'ஒத்தறிவான் உயிர்வாழ்வான்' - என்ற திருக்குறளுக்குப் பதவுரை பொழிப்புரை கண்டு மகிழ்ந்த தமிழினம் அதன் பொருளாழத்தைக் கண்டு துய்த்து அதன்படி ஒழுகத் தலைப்படத் தவறிவிட்டது. இதன் பொருளாழத்தைத் தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இப்படி விளக்குவார்கள். "பிறர் நம்மோடு ஒத்துப்போக வேண்டும் என்று எதிர்பார்ப்பதைவிட நாம் பிறரோடு எந்த அளவிற்கு ஒத்துப் போவதற்குரிய சாத்தியக் கூறுகள் உள்ளனவோ அந்த அளவிற்கு நம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு பிறருடன் ஒத்துப்போனால் மானுட வாழ்வு உயிர்ப்புடைய வாழ்வாகும்" என்பது அடிகளாரின் தேர்ந்து தெளிந்த உரைவிளக்கம். இப்படி ஒத்துப்போக முடியாத முனைப்பால் வளர்த்துக் கொண்ட தீய எண்ணங்கள் பகையாக மாறும். இதனால் எதிரியை உருவாக்கிக் கொள்வதோடு அவ்வெதிரியை வீழ்த்த வீண் முயற்சி எடுக்க நேரிடும். எதிரியை வீழ்த்த முடியாவிட்டால் அவ்வெதிரியின் ஆக்கங் கண்டு பொறாமைப்படுதலும் வேறொருவரால் அவ்வெதிரிக் கேற்பட்ட தோல்வியைக் கண்டு மகிழ்தலுமாகிய எண்ணக்கிளுகிளுப்புகள் நெஞ்சை நெருடிக்கொண்டே இருக்கும். இதற்குச் சங்கச் சான்றொன்று உண்டு.

முடியுடை வேந்தர் மூவரும் பகையாயிருந்தபோது சோழன் கிள்ளி வளவன், பாண்டிய பழையன் மாறனைப் போரில் வெற்றி கொள்கிறான். சோழன் பெற்ற வெற்றிற்குச் சேரன் கோதைமார்பன் என்பான் மிகவும் மகிழ்கின்றான் என்று அகப்பாடல் ஒன்று கூறுகிறது.

........................... நெடுந்தேர்
இழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகின் கூடல் ஆங்கண்
வெள்ளித் தானையொடு வேறு புலத்திறுத்த
கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்
கடும்பரிப் புரவியொடு களிறு பலவவ்வி
ஏதில் மன்னர் ஊர்கொள
கோதை மார்பன் உவகையின் பெரிதே! (346)

ஈண்டுச் சேரன் பெற்ற மகிழ்ச்சி சோழன் வெற்றி பெற்றான் என்பதால் விளைந்த மகிழ்ச்சியன்று. தன்னால் வெல்லமுடியாத

பாண்டியன் இன்னொருவரால் தோல்வியடைந்தான் என்பதால் விளைந்த மகிழ்ச்சி இது. இதை இரட்டிப்பு மகிழ்ச்சி எனக் கூறினும் தகும். தானே போரிட்டு அதனால் சிலபல இழப்புகளையும் துன்பங்களையும் அடையாததால் உள்ள சாதாரண மகிழ்ச்சியோடு வேறொருவரால் எதிரிக்கேற்பட்ட தோல்வியானது பெரிய மகிழ்ச்சியைத் தரும் என்பதால் சேரனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி இரட்டிப்பு மகிழ்ச்சி என்றே கூறலாம். இம் மகிழ்ச்சிக்கும் அடிப்படையான காரணம் ஒன்று உண்டு. அதாவது தனக்கு நன்மை வந்து சேரா விட்டாலும் பரவாயில்லை; எதிரிக்கு நன்மையே வரக்கூடா தென்பதோடு தீமை வரவேண்டும் என்ற தீய உணர்வுதான் மகிழ்ச்சியைத் தூண்டியது எனலாம். இந்த மனப்போக்கு மன்னர் ஆட்சிக்குப் பின்னர் இன்று மலர்ந்துள்ள மக்களாட்சியான கட்சி அரசியல் காலத்தில் பன்முகமாகப் பல்கிப் பெருகியுள்ளனவே யன்றி நலிந்து விடவில்லை என்பதை இன்றைய அரசியல் நடப்பால் நன்கு உணரமுடிகிறது.

இன்றைய அரசியல் அமைப்பில் எத்தனையோ கட்சிகள் உருவாகி விட்டன. மக்களுக்காகப் பாடுபடும் நோக்கம் ஒன்றே உண்மையானால் நாட்டில் எண்ணற்ற கட்சிகள் தோன்றத் தேவையில்லை என்பதே நடுநிலையாளர்களின் சிந்தனைத் தெளிவு. சிறுசிறு வேறுபாடான கொள்கையளவில் இரண்டொரு கட்சிகள் இருக்கலாமே யன்றிப் புற்றீசல்போலப் பல கட்சிகள் உருவாவது முறைதானா? என நாட்டைப் பற்றிச் சிந்திக்கும் நல்லவர்களின் உள்ளத்தில் எழும் வினா சரி என்றே படுகிறது. மேலும் சாதி சமயப் பேரால் கட்சிகள் உருவாகிப் பேதங்களை வளர்ப்பதும் இன்றைய அரசியல் போக்காக மாறிவிட்டது. பகுத்தறிவு என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டதாகத் தம்மை விளம்பரப் படுத்திக் கொள்ளும் கட்சிகளுக்குள் தான் எத்தனை பூசல்கள்? விரிசல்கள்? ஓட்டைகள்? ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுக்க முடியாதபடித் தலைமைக்குத்தான் எத்தனை அடிதடி? இந்தப் போட்டிமனப்பான்மையால் முளைக்கும் புதிய புதிய கட்சிகளுக்குத்தான் நிலையான கொள்கை கோட்பாடுண்டா? அவ்வாறே இருப்பதாக வரையறுத்தாலும் அவற்றைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் எந்தத் தலைமையை நாகரிகமில்லாமலும் நா கூசாமலும் வசவுகள் பேசினவோ அத்தனையையும் மறந்துவிட்டு மீண்டும் பழைய இடத்திற்கே போய் விழுகின்ற அரை வேக்காட்டு அரசியல் தனத்தை



என்னென்பது? மன சாட்சிக்குமீறிய சந்தர்ப்பவாத கட்சித் தாவல்கள் தனிமனிதத்துதிகள் போன்றவை எல்லாம் சுயநல வாழ்வை வளப்படுத்திப் பொதுநல வாழ்வைச் சீர்குலையச் செய்து விட்டனவே? எதிரியை நினைத்துக் கொண்டே அரசியல் நடத்தும் அற்ப உணர்வுகளே காழ்த்த மரங்களாகிவிட்ட இந்தக் காலத்தில் சேவை மனப்பான்மை தடம் மாறிச் சுயநல வாழ்விற்குரிய தேவைகளை வளப்படுத்திக் கொள்ளும் சுயநலப் போக்கிற்கும் சுரண்டலுக்கும் எது காரணம்? தனக்கு ஒரு கண் இல்லாமல் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு இரண்டு கண்ணும் இல்லாமலிருப்பதைப் பார்த்து மகிழத்துடிக்கும் அற்ப உணர்வுகளன்றி வேறு என்ன காரணம் இருக்கமுடியும்? இந்த வகையாகத் தமிழன் தமிழனுக்கே அந்நியப்பட்ட அவலத்தை என்னென்பது?

மேற்படியான குறைபாடுகளின் கொள்கலமாக இன்றைய அரசியல் காணப்படுகிறது. இருப்பினும் கார்த்திகைப் பிறைபோல அங்கொன்றும் இங்கொன்றுமாக நேர்மையான அரசியல் உணர்வுடையவர்களும் அருகியே காணப்படுகின்றனர் என்பது பாலைவனத்தில் பால் வார்ப்பதாக உள்ளது. எனினும் முள்ளுடைய காட்டில் முள் களைந்து நடக்க முடியாதது போலுள்ள அரசியல் குறையிடுகளை யெல்லாம் களைய வேண்டுமானால் "நாம் தமிழர்" என்ற ஒட்டு மொத்த உணர்வோடு தமிழ்மொழி வழிச்சிந்தனை ஒன்றால் மட்டுமே ஒன்றுபட முடியும் என்ற உணர்ச்சியை ஒவ்வொருவரும் உறுதியாக மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் தமிழ் வாழத் தமிழரும் வாழ்வர். எனவே அரசியலில் நடந்தவை நடந்தவையாகட்டும்! இனி நடப்பவை நல்லவையாகட்டும்! தமிழால் ஒன்றுபடுவோம்! தமிழை வாழ்விப்போம்!

> பெற்றவளை மறந்து மற்றவரைத் தொழுத
> பேதமை செய்துவிட்டோம் ஆதலினால் நம்அன்னை
> உற்ற அரசிருந்து உரிமை பெருமை குன்றி
> உள்ளம் வெதும்பினதால் பிள்ளைகள் சீர் குலைந்[illegible]

என்று பாடிய நாமக்கல் கவிஞரின் ஏக்கம் நீங்க,

> திருமுடி சூட்டிடுவோம் - தெய்வத்
> தமிழ் மொழிக்குத்
> திருமுடி சூட்டிடுவோம்

என்ற அவர்தம் கருத்தின்வழி நல்லதமிழ்வழி அரசிய[illegible] வாழ்வு வாழ்வோமாக!

218704

# க(அ)ம்பர்ச்சிலம்பி

**பா. சிவநேசன்,** எம்.ஏ., எம். ஃபில்., பி.எட்.,
**மயிலாடுதுறை.**

இலக்கியத்தின் அடிப்படைக் கூறுகளுள் ஒன்று கற்பனை. உள்ளதை உள்ளவாறே கூறாமல் உள்ளம் விரும்புமாறு கண்டுவெளிப்படுத்துவதே கற்பனையாகும். எப்படைப்பும் கற்பனையுடன் அமையவில்லையெனில் சிறப்படையாது. எனவேதான் புலவர்கள், கற்பனைக்கு உயரிய இடத்தைக் கொடுத்தனர். ஒருகற்பனைக்குள் மேலும் ஒரு புதிய கற்பனையை அமைத்துக் காட்டவும் முனைந்தனர். அத்தகையோருள் ஒருவர் கு. அழகிரிசாமி. இவர் கம்பரின் வரலாற்றைக் 'கவிச்சக்கரவர்த்தி' (முதற்பதிப்பு - 1963, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை) எனும் பெயரில் நாடகமாக ஆக்கியுள்ளார். அந் நாடகத்தில் சிலம்பி என்பவளின் கதையும் இடம்பெற்றுள்ளது. அச்சிலம்பி பற்றி பழைய கற்பனைக் கதை ஒன்றுண்டு.

சிலம்பி சோழ நாட்டுத் தாசிக்குலத்தினள். கம்பர் காலத்தில் வாழ்ந்தவள். கம்பரிடம் கவிதை பெறவேண்டுமென்ற பெருவிருப்பம் உடையவள். ஒருநாள் கம்பருக்கு 500 பொன் கொடுத்துக் கவிதை பாடித்தருமாறு கேட்டனள். கம்பரும்

**"தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே**
**மண்ணாவதும் சோழமண்டலமே - பெண்ணாவாள்**
**அம்பொற் சிலம்பி அரவிந்தத் தாளணியும்**
**செம்பொற் சிலம்பே சிலம்பு"**

என்ற பாடலைப் பாடிக் கொடுத்தார். அவள் அதன் பின்னர் ஔவையாருக்குக் கூழிட்டு, அவரிடமிருந்தும் ஒரு பாடலைப் பெற்றனள். இதுவே பழைய கற்பனைக்கதை. இக்கதைக்குள் ஒரு புதிய கற்பனைக் கதையைப் புகுத்தி உள்ளார் அழகிரியவர்கள். அக்கதை வருமாறு :

சிலம்பி அம்பர்மாகாளம் என்ற ஊரினள். ஊர் ஊராகச் சென்று நாட்டியமாடும் கடமையுடையவள். ஒருநாள் அம்பர் காளகண்டேசுவரர் சந்நிதியில் கம்பராமாயணம் - சூர்ப்பனகை படலத்தை 'வஞ்ச மகள்' எனும் பெயரில் நாடகமாக நடித்துக் காட்டினாள். கம்பர் மேடையின் முன்பாக அமர்ந்து நாடகம் முழுவதையும் கண்டு மகிழ்ந்தார். அவர் சிலம்பியிடம், இராமாயணத்தை இயற்றிய புலவன் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு அவள் கதைத் திறனைப் பாராட்டினார். சிலம்பி மகிழ்ந்து கம்பரை வணங்கினாள்



சிலம்பி கம்பரிடம், உங்களைக் கண்டது நான் செய்த புண்ணியம். இது என் தாய்க்கு வாய்த்த புண்ணியம் போன்றது என்றனள். மேலும் அவள் கம்பரிடம், புலவர் பெருமானே! நீங்கள் ஒருசமயம் சோழன் அவையில் என் தாய் நடனமாடியதைப் பாராட்டிக் காற்சிலம்பைப் பரிசாக அளித்துள்ளீர்கள். அதன் பிறகு என் தாய் சில ஆண்டுகள் கழித்து என்னைப் பெற்றெடுத்தாள். உங்கள் பாராட்டை நினைவு கூரும் வகையில் எனக்குக் 'கம்பர்ச்சிலம்பி' எனப் பெயரிட்டனள். ஆனால் பெயரில் கம்பர் என்பது நிலைக்கவில்லை. என் தாய் தகுதிக்கு மீறிக் கம்பர் பெயரையும் இணைத்துப் பெயரிட்டுள்ளதாகச் சிலர் வெம்மொழி பேசியதால் சிலம்பி என்றே அழைக்கப் பெற்றேன் என்றாள். கம்பர், உன்தாய் எங்கே என்றார்? அவள் இறந்து ஆறு ஆண்டுகள் ஆகின்றன. அவள் தங்கள் சிலம்பைத் தானும் அணியாது, எனக்கும் அளிவிக்காது பூசை அறையில் வைத்துப் பூசித்து வரலானாள். பிறகு அச்சிலம்பு போன்ற பொற்சிலம்பொன்றைச் செய்து எனக்கு அணிவித்தாள். அச்சிலம்பைத்தான் இப்பொழுது அணிந்துள்ளேன். தங்களின் சிலம்பு, எங்கள் குடும்ப வாழ்விற்கும், நாட்டியக் கலைக்கும் புகழைத் தேடித்தந்தது எனப்பலவாறு புகழலானாள். கம்பர் சிலம்பி அணிந்துள்ள சிலம்பைக் கண்டு பேசலானார். சிலம்பியே, என் காற்சிலம்பு பாராட்டிற்குரியதல்ல; உன் சிலம்பு 108 தாள வகைகளைத் திறம்படப் பயின்ற சிலம்பு. உனக்குக் கம்பர்ச் சிலம்பி என்பதைவிட 'அம்பர்ச்சிலம்பி' என்ற பெயரே பொருத்தமானது என்று கூறி,

**'தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே**
**மண்ணாவதும் சோழமண்டலமே - பெண்ணாவாள்**
**அம்பர்ச் சிலம்பி அரவிந்தத் தாளணியும்**
**செம்பொற் சிலம்பே சிலம்பு'**

என்ற பாடலைப் பாடிச் சிறப்பித்தார். இது அழகிரியவர்களின் கற்பனையில் விளைந்த கதையாகும். இவர், இவ்வாறு கற்பனை செய்ததற்கு ஒரு காரணத்தையும் குறித்துள்ளார். தனிப்பாடலில் உள்ள அம்பொற்சிலம்பி என்பது அர்த்தமற்றது. ஒரு ஏட்டுப் பிரதியில் அம்பர்ச்சிலம்பி என்ற பாடம் உள்ளது (முன்னுரை-ப14) என்கிறார். அவர் இப்பாடபேதத்தை ஆதாரமாகக் கொண்டும் தம் கற்பனையை இணைத்தும் ஒரு புதிய கற்பனைக் கதையைத் தமிழுலகிற்குத் தந்துள்ளார். கம்பர்ச் சிலம்பி எனப் பெயரிட்டதாக வரும் கதை இவரது கற்பனையே. இவர்தம் கற்பனைத்திறம் பாராட்டற்குரியது.

புலவர்கட்கு இது போன்ற கற்பனைகள் எழுவது இயல்பே. சுவைஞர்கள் இதுபோன்ற படைப்புகளைத் தேடிப் படிப்பதை இயல்பாகக் கொள்ளுதல் நலம்.

# சம்பந்தர் பாடல்களில் இயற்கை

டாக்டர். சரளா இராசகோபாலன், சென்னை

சிலம்பு - 70, பரல் - 8, பக். 317 தொடர்ச்சி)

விலங்குகளும் பறவைகளும் வழிபடு பொருட்களைக் கொண்டு வந்து இறைவனை வணங்குவதாகவும் அவர் பாடியுள்ளார். புலி, மான் போன்ற பகை விலங்குகளும் தம்பகை நீங்கி இறைவன் திருவடியைத் தொழுகின்றன. அடியார்க்கு அச்சம் முதலியன உண்டாகாவண்ணம், அவர்கள் போகாத வழியிலே போகின்றன. விலங்கினங்களுக்கு உள்ள சிவபக்தி தனக்கில்லையே. இவ்வுயரிய மக்கட் பிறப்பை எய்தியும் அவனருளாலே அவன் தாள் வணங்க அவனருள் செய்தல் வேண்டும். அதற்கு நாம் பெருந்தவம் புரிதல் வேண்டும் என ஞானசம்பந்தர் பாடுகிறார். *(2:72:6)* களிறும் பிடியும் வேங்கைப் பூக்களைப் பறித்து வழிபாட்டிற்குரிய முறையறிந்து குறும்பலாநாதரை வழிபடுகின்றன. *(2:71:8)* மந்திகள் கூட்டமாய் வந்து, மலர் கொண்டு தொழுது, திருமுதுகுன்றநாதரை வணங்குகின்றன. *(2:64:2 ; 1:3:5)* குயில்களும் கிளிகளும் பரமன் புகழ்பாடுகின்றன என்று அவர் குறித்துள்ளார் (2:64:3)

இவ்வாறு அஃறிணை உயிர்களும் இறைவனை வழிபட்டு உயர்வதாகக் காட்டுகிறார். ஐயறிவுயிர்கள் வழிபடும்போது ஆறறிவுயிர்கள் வழிபட வேண்டாமா என்ற வினா தொக்கியுள்ளது.

## அகத்துறையில் இயற்கை :

ஞானசம்பந்தர் தன்னை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் பாவித்துக்கொண்டு பாடியுள்ளார். தலைவனின் பிரிவால் ஆற்றாது வருந்தும் தலைவி பறவைகளிடம் தூது விடுகிறாள். அன்றில், அன்னம், புறா, கிளி, குயில், குருகு, தாரா, நாரை, பூவை, வண்டு, வாரணம் ஆகிய பறவைகளை இறைவனிடம் தூது விடுவதாகப் பாடியுள்ளார்.

திருத்தோணி புரத்து இறைவன்பால் தூதுவிட விரும்பிய தலைவி அன்றிலைத் தூது விடுகிறாள். வாயிலின் பக்கத்தில் உள்ள பனைமரத்தில் துணைபிரியாது முயங்கிக் கிடக்கின்ற அன்றில் தூது செல்வதற்கு மிகவும் வல்லமை வாய்ந்தது என்று எண்ணிய



தலைமகள் கொன்றைவார் சடையாராகிய திருத்தோணிபுரத்து இறைவன்பால் சென்று தன்னுடைய ஆற்றாமையை அறிவித்து எம்பிரான் அணிந்திருக்கும் கொன்றைமலர் மாலையைக் கொண்டு வருக என்று அவ்வன்றிலிடம் வேண்டுகிறாள் தலைவி.

> "மூன்றில்வாய் மடற்பெண்ணைக் குரம்பைவாழ் முயங்குகின்ற
> அன்றில்காள் பிரிவுறுநோய் அறியாதீர் மிகவல்லீர்
> தென்றலார் புகுந்துலவுந் திருத்தோணிபுரத் துறையுங்
> கொன்றைவார் சடையார்க்கென் கூர்பயலை கூறீரே
> *(1:60:7)*

என்று அன்றில்களைத் திருத்தோணிபுரத்து பெருமானிடம் தூது விடுகிறாள் தலைவி.

தலைவனிடம் தூதுவிட நினைக்கும் தலைவி வண்டு *(1:60:1)* குருகு (1:60:2) வாரணம் *(1:60:3)* நாரை *(1:60:4)* புறம் *(1:60:5)* அன்னம் (1:60:6) அன்றில் *(1:60:7)* குயில் *(1:60:8)* பூவை *(1:60:9)* ஆகியவற்றைத் தூது விடுக்கிறாள்.

செம்மையிலும் அண்மையிலும் இருக்கின்ற பொருளை வேண்டியும் அவை தலைவிக்கு உதவவில்லை. அதனால் தலைவி தான் வளர்த்த கிளியையே நோக்கி, 'ஒருகால் அவர் பெயரைச் சொல்' என்று வேண்டுகிறாள். அவர் பெயரைக் கேட்டாலும் தன் ஆற்றாமை தீரும் என்று தலைவி நினைக்கிறாள்.

> "சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
> முறையாலே உனக்கருவன் மொய்பவளத் தொடுதரளந்
> துறையாரும் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
> பிறையாளன் திருநாம மெனக்கொருகாற் பேசாயே" (1:60:10)

என்று சம்பந்தப் பெருமான் அகத்துறைக் கூறுகளை அமைத்துப் பாடியுள்ளார்.

## உள்ளுறையில் இயற்கை :

ஒரு பாடலை மேற்போக்காகப் படிக்கும்போது ஒரு பொருளும், நுண்மையாக நோக்கும்போது வேறு ஒரு பொருளும் தோற்றுமாறு அமைப்பது உள்ளுறையாகும். கவிஞர் தான் உணர்த்த விரும்பும் பொருளை நேரடியாகக் கூறாமல் மறைவாக உணர்த்த முயலும் போது இதை ஆள்கிறார்.

சங்க அகத்துறைப் பாடல்களில் தலைவனை வரைவு கடாவும் போதும் வாயில் மறுக்கும் போதும் உள்ளுறையின்

மூலம் தலைவனுக்குக் கருத்து அறிவிக்கப் படுகிறது. பொதுவாக இயற்கைப் பொருட்களின் மூலமே உள்ளுறை உணர்த்தப்படும்.

ஞானசம்பந்தரும் இயற்கைப் புனைவின் மூலம் சமயத்தத்துவ உண்மைகளை உள்ளுறையாக அமைத்துள்ளார். பிரமபுரமேவிய பெருமானை வணங்கும் ஞானசம்பந்தர், பிரமபுரத்தின் சிறப்பைக் கூறுங்கால்,

"கடன்முயங்கு கழிசூழ்குளிர் கானலம் பொன்னஞ் சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே" (1:1:7)

என்று பாடியுள்ளார். ஆண் அன்னம் தன் பெடையொடு சேர்ந்து இன்புறுவதுபோல உமையொடு விளங்கும் இறைவன் போகியாக இருந்து உயிர்களுக்கு அருள் புரிகிறான். அன்னப் பறவை பெடையோடு சேர்ந்து இன்புறுவது போன்று ஆன்மாவாகிய தலைவியும் ஆன்ம நாயகனாகிய இறைவனோடு கூடி இன்புறுகிறது என்று உள்ளுறை கூறும் படியாகப் பாடியுள்ளார் திருஞானசம்பந்தர்.

## உவமையில் இயற்கை:

ஒரு பொருளைத் தெளிவுற விளக்கக் கவிஞர்கள் உவமையைக் கையாள்வர். ஞானசம்பந்தர் இறைவனின் உருவச் சிறப்பினைச் சிறந்த இயற்கை உவமைகளின் மூலம் விளக்கி யுள்ளார். ஞானசம்பந்தர், இயற்கையின் எழில் வண்ணத்தில் தோய்ந்து, இயற்கையை நுனித்துணர்ந்து உவமைகளை ஆண்டுள்ளார். இறைவனின் செம்மேனிச் சிறப்பினை,

பகல்போலும் மேனியான் (1:119:11)
தீ வெண்டிங்கள் நிறத்தான் (2:19:1)
எரிபோலும் மேனியன் (2:25:9)
தழல்புரை திருமேனி (2:104:3)
பவளம் போல் வண்ணர் (2:106:5)

என்று இறைவனின் திருமேனிநிறம் பகல், தீவெண்டிங்கள், எரி, பவளம், மின்னல் ஆகியவற்றிற்கு உவமிக்கப்படுகிறது. இறைவனின் கருநிறக் கழுத்தின் அழகும் சிறந்த உவமைகளின் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

"முகில் புல்கு மிடறர் (1:79:1)
கொண்டலு நீலமும் புரைதிரு மிடறர் (1:72:2)
மையான கண்டன் (2:13:2)
துணிநீலவண் ணமும்முகி றோன்றியன்ன
மணி நீல கண்டம் (2:18:3)
காசைமலர் போல் மிடறு (2:80:7)



என்று இறைவனின் அழகியமிடற்றினை முகில், நீலம், மை, மணி, துணிநீலம், காசைமலர் ஆகியவற்றிற்கு உவமித்துள்ளார் ஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தர் இயற்கைப்புனைவுகளில் தேவாரம் பாடிய மூவருள் முதன்மை பெற்றவர். அவர் இயற்கையில் இறைவனைக் கண்டவர். அவருடைய திருத்தல வருணனைகளில், மலை, ஆறு, வயல், கடல், சோலை ஆகியவற்றின் அழகிய காட்சிகள் இடம் பெற்றுள்ளன. இயற்கையும் இறைவனை வணங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவருடைய இயற்கை பற்றிய புனைவுகளில் சமயத்தத்துவ உள்ளுறையாக அமைந்துள்ளன. இறைவனின் உருவச் சிறப்பை, இயற்கையை ஒட்டிய உவமைகள் மூலம் விளக்கியுள்ளார். சிறப்பாக, அவரை இயற்கைப் புலவர் என்றும் குறிப்பிடலாம்.

(முற்றும்)

# உயரிய வாழ்வுக்கு வழியமைப்பாய்!

கவிஞர். எஸ். சங்கரநாராயணன்

'பொறுமை பெருமை தரு'மென்று,
புவிவாழ் தமிழர் நினைக்கின்றார்!
பெருமை அதனால் கிடைக்கவில்லை!
'பேடிகள்' எனப் பிறர் நினைக்கின்றார்!

உலகில் உயர்ந்தோர் தமிழரென்றும்,
உயர்மொழி தமிழே தானென்றும்
புலம்புவ தாலே பயனுண்டோ?
புரிந்திட வேண்டும் உண்மை நிலை!

'நல்லவர் தமிழர்' என வாழ்தல்
நல்கா எவ்வித நலன்களையும்!
'வல்லவர்' எனப்பிறர் கருதும்படி
வாழ்வதே பெருமை தனையளிக்கும்!

உலக மெங்கும் பரவியுள்ள
உன்தமிழ் உறவினர் எல்லோரும்
நலமுடன் வாழ எண்ணிடுவாய்!
நல்லோர் உரைகளை ஏற்றிடுவாய்!

கண்களை மூடித் திறப்பதற்குள்,
காலம் ஓடி ஒழிந்துவிடும்!
திண்ணைப் பேச்சு, வேதாந்தம்
தேவை இல்லை, செயல்புரிவாய்!

சிந்தனை யோடு செயலாற்றிச்
சிறப்புடன் வாழ எண்ணிடுவாய்!
எந்த நிலைமை ஏற்படினும்,
எதிர்கொண் டிடவே உறுதிகொள்வாய்!

வருகுது விரைவில் பொதுத்தேர்தல்!
வாக்குச் சீட்டு உன்கையில்!
உரிய முறையில் பயன்படுத்தி
உயரிய வாழ்வுக்கு வழியமைப்பாய்!

# நூல் மதிப்புரை

| | | |
|---|---|---|
| நூல் | : | திரு அருட்பிரகாசர் |
| ஆசிரியர் | : | கலைமாமணி பட்டுக்கோட்டை குமாரவேல். |
| வெளியீடு | : | அலமேலு பதிப்பகம், 3.A. முதல் பிரதான சாலை, ஜெகத் நகர், ஆர்.ஏ.புரம். மந்தைவெளி, சென்னை – 28. |
| பக்கம் | : | 302 விலை : ரூ. 40/- |

வடலூர் வள்ளலாரின் வாழ்க்கை வரலாற்றை அழகிய நாடக வடிவில் தரப்பட்டுள்ளது. பிறப்பு முதல் பெருவெளியில் கலந்தது வரையில் வரலாற்றுக் குறிப்புகள், செவிவழிச் செய்திகள் ஆகியவற்றின் துணையோடு இனிய எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. படிக்க நடிக்க ஏற்றது. தேவையான இடங்களில் திருவருட்பாக்களையே தந்தள்ளது அருமை. பெரும்பாலான காட்சிகள் அருட்பாக்களையே தந்துள்ளது அருமை. பெரும்பாலான காட்சிகள் அருட்பாக்களையே கொண்டு அமைந்துள்ளன; அவை மன நிறைவைத் தருகின்றன. "வள்ளலார்தான் மனிதர்" என்பதை விளக்கும் நிர்வாண சாமியார் வரும் காட்சி மனக் கண்ணிலிருந்து மறையாத காட்சி.

வடமொழி தாய் மொழி என்றால் தமிழ்மொழி தந்தை மொழி என்று வள்ளலார் கூறுவது தமிழ்மொழியின் தொன்மையையும் வள்ளலாரின் தமிழ் மொழிப் பற்றையும் விளக்கும் நயமான காட்சி. வள்ளற் பெருமானின் உணவு வழங்கல், ஞானம் வழங்கல் என்ற இலட்சிய நோக்கம் தரும சாலை, ஞான சபை நிறுவியதால் விளங்குகிறது. இதை நயம்பட நூல் விளக்கிக் காட்டுகிறது.

நீண்ட நாடகம்! எழில் பூண்ட நாடகம்!

வே.இரா சிவஞான வள்ளல்.



| | | |
|---|---|---|
| நூல் | : | பொன்னும் மணியும் |
| ஆசிரியர் | : | தமிழர் திலகம் வாழியூர் வே. இராச வேலன், எம்.ஏ., எம்.எட்., |
| வெளியீடு | : | பேரரசு பதிப்பகம் வாழியூர். வழி நன்னுபுரம் 632315 தி.ச.மா. |
| பக்கம் | : | 112 விலை : ரூ. 25/- |

பரந்து கிடக்கும் தமிழிலக்கியங்களில் நிறைந்து கிடக்கும் 'பொன்னும் மணியும்' போன்ற உயர்ந்த கருத்துகளை நமக்கு இந்நூல் மூலம் வாரி வழங்கியுள்ளார் இந்நூலாசிரியர். தமிழாசிரியர்களுக்குள் இவரொரு 'பகலில் தெரியும் நட்சத்திரம்' என்பதை இந்நூல் விளக்குகின்றது.

இலக்கியத்தில் மதுவிலக்கு, விடுகதை இலக்கியம், அச்சத்திற்கு மருந்து, உலக ஒற்றுமைக்கு தேம்பாவணியில் கற்பனை, முத்தொள்ளாயிரத்தில் கற்பனை போன்ற இனிய தலைப்புகளில் இலக்கிய விருந்தினை இந்நூல் மூலம் படைத்துள்ளார் நூலாசிரியர்.

திசைமாறிச் செல்லும் இளைய தலைமுறையினர் தமிழ் உணர்வு பெறவும் – நேர்வழி செல்லவும் இந்நூல் சிறந்த வழிகாட்டியாகும்.

| | | |
|---|---|---|
| நூல் | : | முத்து கதைகள் மூன்று |
| ஆசிரியர் | : | ஜெயாஜி |
| வெளியீடு | : | கௌரி சங்கர் அச்சகம் 102, எஸ்.சி. சாலை, சேசாத்திரி புரம், பெங்களூர் 560 020. |
| பக்கம் | : | 136 விலை : ரூ.20.00 |

மனித நேயம் போற்றும் வாழ்க்கை நாடகத்தில் சிறிய நாடகம் 'ஞானக்கண்', 'பாவம்' 'காதலில் முறிந்த அந்தஸ்த்தின் மகிமை' என்னும் மூன்று குறுங் கதைகளின் தொகுப்பே இந்நூல்.

கதை இலக்கியங்களின் வேகமான வளர்ச்சிக்குச் சான்றாக இந்நூல் திகழ்கின்றது. கதைக்கருக்கள் நன்றாக உள்ளன. ஆனால் நடை ஆங்கிலம் விரவியதாக உள்ளது. கதை சொல்லும் முறையும் கற்போர்க்குச் சலிப்பூட்டுவதாக உள்ளது. நூல் அமைப்பில் மேலும் கவனஞ் செலுத்தியிருக்க வேண்டும். நூலின் விலைகூட இரப்பர் முத்திரையிடப் பட்டுள்ளமை பட்டறிவுக் குறைவைக் காட்டுகின்றது.

இக் குறைகள் களையப் பெற்று ஆசிரியர் தொடர்ந்து எழுதுவாரானால் நல்ல எதிர்காலம் உண்டு.

### மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

| | |
|---|---|
| உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்) | 10 00 |
| திரு. முருக விசாகநம்பி அவர்கள் | 5 00 |
| தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் | 5 00 |
| திரு. த. ஆறுமுகம் அவர்கள், சென்னை – 79. | 5 00 |
| தவத்திரு. ஈசுவரனார் அவர்கள் | 5 00 |
| திரு. வேணுகோபால் அவர்கள் சாந்தி திரையரங்கம், சென்னை – 2. | 25 00 |
| திரு. K.E. மணவாளன், பெங்களூர் | 10 00 |
| திரு. N.S. இராஜலெட்சுமி, முத்தையாள் பேட்டை தெய்வீக சங்கம் | 200 00 |
| திரு. முனைவர் மு.ச. சிவம், ஈரோடு | 10 00 |
| தாமரைச் செல்வி D/o. திரு. பொ. பாலசுப்பிரமணியம் சென்னை – 18. | 10 00 |
| முத்துமணி D/o. திரு. பொ. பாலசுப்பிரமணியம் சென்னை – 18. | 10 00 |
| திரு. ப. கோவிந்தராசு மதுரை | 35 00 |

### மறைமலையடிகள் கலைமன்ற வளர்ச்சிக்கு நன்கொடை

| | |
|---|---|
| உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்) | 10 00 |
| தவத்திரு. ஏ.டி. ஈசுவரனார் அவர்கள் | 5 00 |
| ஜெயா தங்கமாளிகை, பல்லாவரம், வழிபாட்டுச் செலவு | 25 00 |

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை – 108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,பிலிட்.

218704


### அருள்நந்திசிவம் அருட்பணி மன்ற வெளியீடு

| | | |
|---|---|---|
| சிவஞானபோதம் - விளக்கவுரை | 60 | 00 |
| சைவசித்தாந்தம் - சு. மணி | 8 | 00 |
| சிவப்பிரகாசம் | 22 | 00 |
| திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் | 20 | 00 |
| மெய்கண்ட நூல்களுள் ஏழு | 30 | 00 |
| சிவஞானமாபாடியம் | 260 | 00 |
| சிவஞானசித்தியார் | 60 | 00 |
| தசகாரியம் | 11 | 00 |

கிடைக்குமிடம்
திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.,
154, டி. டி. கே. சாலை, சென்னை-18.

## WORKS OF Dr. G. U. POPE

| | | |
|---|---|---|
| TIRUKKURAL (Paper Pack) | 120 | 00 |
| ,, (Hard Bound) | 295 | 00 |
| NALADIYAR | 495 | 00 |
| TIRUVASAGAM | 495 | 00 |

ASIAN EDUCATIONAL SERVICES
No. 5, SRIPURAM FIRST STREET,
ROYAPETTAH, MADRAS-600 014.